20 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978



Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife Higher Standards
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022



நதி 20 | பாலம் 22 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2010


# ஜப்பானில் 22 ஆவது APEC மாநாடு




பசுபிக் சமுத்திரத்தை தனது கரையாக கொண்ட 21 நாடுகளின் கூட்டமைப்பான APEC என அழைக்கப்படும் ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டுத்தாபனம் (Asia Pacitic Economic Cooperation) தனது 22 ஆவது மாநாட்டை நொவம்பர் 13ஆம் 14ஆம் திகதிகளில் ஜப்பானில் உள்ள யோககாமா நகரில் நடத்தியது. அவுஸ்திரேலியா, கனடா, இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், ரசியா, சீனா மற்றும் அமெரிக்கா என்பன இந்த கூட்டமைப்பில் இருக்கும் நாடுகளில் சிலவாகும். APEC அமைப்பு 1989 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பில் உள்ள 21 நாடுகளில் உலக சனத்தொகையில் 40 வீதமான மக்கள் வாழ்கிறார்கள். இந்நாடுகள் உலக வர்த்தக துறையில் 44 வீதத்தை தம்மகத்தே வைத்துள்ளன.

கனடா தனது G20 மாநாட்டு மண்டபத்தில் 2 மில்லியன் கனடிய டொலரில் செயற்கையாக செய்து வைத்திருந்த ஏரி போல ஒன்றை இம்மாநாட்டின் போது ஜப்பான் டிஜிட்டல் தொழில் நுட்டபம் மூலம் செய்து வைத்திருந்தது. இந்த ஜப்பானிய ஏரியில் மீன்கள் நீந்தின. நீர் ஊற்றில் இருந்து நீர் பாய்ந்து கொண்டிருந்தன. இந்த ஏரியில் நீர் அலைகளும் வந்தன. இவையெல்லாமே டிஜிற்றல் தொழில்நுட்பமூலமே செய்யப்பட்டிருந்தன. கனடாவின் பிரதமர் இந்த போலியான ஏரிக்கு அருகில் நின்ற போது அமெரிக்க அதிபர் ஓபாமா 'ஸ்ரீபன்' கவனம் ஏரியில் விழுந்து விடவேண்டாம்' என பகிடி விட்டார். இந்த APEC மாநாட்டில் தலைவர்கள் தங்களுக்கு உள்ளே ஒரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை.



கனேடிய பிரதமர் மற்றைய நாட்டு தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் எவ்வாறு ஆட்கள் கடத்துவதை தடுக்கலாம் என்பது பற்றியும் உரையாடினார். கனடிய பிரதமர் மற்றைய நாட்டு தலைவர்களிடம் சட்டவிரோதமாக கப்பலில் வரும் ஆசிய நாட்டவர்களை தடுப்பதற்கு தீவிர முயற்சி எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். அவுஸ்திரேலிய பிரதமர் இந்த மாநாட்டில் அண்மையில் கனடாவில் கொள்வனவு செய்ய விரும்பிய சஸ்கச்சுவான் மாகாணத்தில் உள்ள Potash நிறுவனத்தை கனடிய அரசு தடுத்தது சம்பந்தமாக தமது அதிருப்தியை கனடிய பிரதமரிடம் தெரிவித்தார்.

அமெரிக்கா APEC மாநாட்டு தலைவர்களை தன்னுடன் கூட்டுச்சேர்த்து சீனாவின் பணமதிப்பீட்டு கொள்கைக்கு எதிராக குரல் எழுப்புமாறு தீவிர முயற்சி இம்மாநாட்டில் எடுத்தது. சீனா வேண்டும்


தொடர்ச்சி 02ஆம் பக்கம்



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

GSF Golden Store Fixtures
Friend for your Business
905-565-6555
1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessory
» Racks
» Shopping Cart & Baskets
» Showcases
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More..........
355 Admiral Blvd, Unit #5
Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com
sales@goldenstorefixtures.com

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# ஜப்பானில் 22....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

என்றே தனது Yuan நாணயத்தின் மதிப்பை மிகவும் கீழாக வைத்திருக்கிறது. இதனால் அது ஏற்றுமதி உற்பத்தி பொருட்கள் மூலம் மிகவும் இலாபம் பெறுகிறது. சீனா தனது நாணயத்தின் பெறுமதியை உலகில் உள்ள மற்றைய நாணயத்திற்கு ஏற்ப மதிப்பீடு செய்வோம் என



உலகநாடுகளுக்கு உறுதி அளித்திருந்தாலும் அது அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. சீன நாணயம் அமெரிக்கா ஒரு டொலருடன் ஒப்பிடும்போது தற்போது 6.6 Yuan ஆக இருக்கிறது. ஆனால் இது உண்மையில் 4.7 Yuan ஆக இருக்க வேண்டும். சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களால் தான் அமெரிக்கர்கள் வேலை இழக்கிறார்கள் என்று அமெரிக்க மக்கள் குரல் கொடுப்பதால் அமெரிக்க அதிபர் இது விடயத்தில் தீவிர கவனம் எடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

# ஆங் சான் சூகியி விடுதலை

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக வீட்டுச் சிறை, சிறை வாசம் என தொடர்ந்து அடைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த மியான்மர் ஜனநாயகத் தலைவி ஆங்சான் சூகியி விடுதலை செய்யப்பட்டார். வீட்டுச் சிறையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளியில் வந்து மக்களைப் பார்த்து வணங்கி கையசைத்தார் ஆங் சான். அவரைக் காண பல்லாயிரக்கானோர் அங்கு கூடியிருந்தனர்.

புன்னகை பூத்தபடி காணப்பட்ட ஆங்சான், தனது வீட்டுச் சுவரின் கேட் வரை வந்து மக்களைப் பார்த்தார். ஆங்சானை பார்த்த சந்தோசத்தில் அங்கு கூடியிருந்த மக்கள் மியான்மர் தேசிய கீதத்தைப் பாடினர். பின்னர் அவர்களிடையே பேசிய ஆங்சான் சூகியி, 'நான் உங்களைப் பார்த்து நீண்ட காலமாகி விட்டது' என்றார் சூகியி.

65 வயதாகும் நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகியி, கடந்த 7 வருடங்களாக வீட்டுச் சிறையில் இருந்து வந்தார். ஆனால் கடந்த 21 வருடங்களாக ஜனநாயகம் தழைக்கப் போராடி வரும் சூகியி, கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுச்சிறை, சிறை என தொடர்ந்து சிறை வாசத்தை அனுபவித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சூகியியை விடுவிக்க தொடர்ந்து பல்வேறு உலக நாடுகள் கோரி வந்தன. ஆனால் மியான்மர் ராணுவ அரசு அதை ஏற்கவில்லை. ஆனால் சமீபத்தில் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் விடுதலை செய்யப்படுவார் சூகியி என ராணுவ ஆட்சியாளர்கள் அறிவி த்தனர். இதை உலக நாடுகள்



நம்பவில்லை. இந்த நிலையில் தற்போது சூகியி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# Cancun Resort இல் விபத்து




கனடிய, உலக மக்களின் விடுமுறை காலத்தை செலவழிக்க செல்லும் மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் கன்கூன் (Cancun) நகரும் முக்கியமானதாகும். இங்கு பல தங்கு விடுதிகள் சிறந்த முறையில் பராமரித்து வரப்படுகின்றன.

நவம்பர் 14, 2010 அன்று Playa Del Carmen என்ற இடத்தில் அமைந்துள்ள Grand Princess Rivier ஹோட்டல் தங்கு விடுதியில் Gas Line வெடித்து ஏழு பேர் இறந்துள்ளனர். இதில் ஐந்து கனடியர்களும் அடங்குவர். மேலும் 8 கனேடியர்கள் காயப்பட்டுள்ளனர். இருந்த போதிலும் அண்மையில் இந்த ஹோட்டலிற்கு வந்தவர்களின் கருத்தின்படி மேற்குறிப்பிட்ட ஹோட்டல் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வந்ததாகவும் நிலத்திற்கு கீழே சென்ற குழாய் வெடித்ததால் இப்படி ஒரு அனர்த்தம் ஏற்பட்டது துக்கமான அசம்பாவிதம் எனத் தெரிவித்துள்ளனர்.



## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

## வாசகர் எண்ணம்

*The article is a very good one and an excellent introduction to some of the modern DNA analysis tools for tracing back our history. I am glad that Mr. Muthulingam decided to do this. And, as usual kudos for the continual efforts to maintain the quality of the publication.*

*There are however some major problems with facts. The author is mixing up with the mitochondrial DNA haplogroups and Y chromosome DNA haplogroups. I can give you an important example of that in the description of M69 (third paragraph, page 2). M69 in that case is actually Y chromosome DNA haplogroup H M69. But up to that point, the descriptions have been based on mitochondrial DLNA. This should thoroughly be reviewed by an expert in the field to make the article more accurate.*

*In the paragraph that immediately follows the above mentioned, there is obvious disconnect perhaps by editorial cuts. There is also a confusion stemming from the mix up of different DNA analysis schemes. What does author mean by his doubt? Not clear here. And also, note that a population in general will have multiple group lineages. It is being over-simplified to make it a little palpable for folks. One may find a historical basis for common haplogroups between northeast India and Sri Lanka, and it may well have been explained through as documented by Mahavamsa. But that objectivity is lost in that paragraph.*

*Finally, the mitoChondrial DNA haplogroup M is now being strongly contended by some scientists that it originated in Asia and not in Africa. This should be described in the article, in my opinion.*

***- Sudharsanan***

# வாழத்துடிக்கும் வன்னி
## - ஒரு நேரடி ரிப்போர்ட் - பாகம் 10

- செல்வரட்ணம் சிறிதரன் -

வவுனிக்குளம் சிவன்கோவிலைச் சுற்றி சிவபுரம், பாலிநகர் போன்ற கிராமப் பிரதேசங்கள் அமைந்திருக்கின்றன. இந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்றிருந்தவர்களில் 90 வீதமானவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பியிருப்பதாக ஆலய அறங்காவலர் சபையின் செயலாளரும் அரச உத்தியோகத்தருமாகிய கணபதிப்பிள்ளை குணசிங்கம்.

வன்னிப்பிரதேசத்தின் வவுனிக்குளம் சிவன்கோவில், பனங்காமம் சிவன்கோவில் போன்ற முக்கிய ஆலயங்கள், போரினால் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன அமைதியையும், ஆன்மீக எழுச்சியையும் வழங்கி அவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்குப் பெரிதும் துணையாக இருக்கும் என அந்தப் பிரதேசத்து மக்கள் கருதுகின்றார்கள்.

வவுனிக்குளம் - வன்னிப்பிரதேச விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கான முக்கிய குளங்களில் ஒன்று. முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்றது. இதன் உச்ச நீர் மட்டம் 21 அடி. பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த ஆறாயிரம் ஏக்கர் வயல்களுக்கு இதிலிருந்து நீர் பாயும். இடப்பெயர்வு காரணமாக இரண்டு வருடங்களின் பின்னர் இந்தக் குளத்தின் கீழ் இப்போது முதல் தடவையாக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் கடந்த வருட இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. மீளக்குடியமர்ந்தவர்களின் வாழ்வாதாரத்திற்காக 1900 ஏக்கர் வயல்காணியை நெற் செய்கைக்காக அதிகாரிகள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தார்கள். ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர். அரசாங்கம் விதை நெல் வழங்கியது. பசளையும் தந்தார்கள். விவசாயத் திணைக்களத்தின் உழவு இயந்திரங்கள் வயல்களை உழுதன. கட்டணமில்லை. நெல்லை விவசாயிகள் விதைத்தார்கள். அவர்களில் பாலி நகரைச் சேர்ந்த செல்லப்பா தங்கவேலுவும் ஒருவர்.

'நெல்லு விதைக்க காணி கிடைச்சதுக்கென்ன, எங்களுக்கெல்லாம் பிந்திப்போச்சு. விதைநெல் நேரத்துக்குக் கிடைக்கேல்ல. உழவும் அப்படித்தான். முந்தியெண்டால் விவசாயிகள் எல்லாரிட்டயும் உழவு மிசின்கள் இருந்தது. வயல் வேலை தொடங்கியதும், மளமளவெண்டு ஆக்கள் வயல உழுவினம். ஒரே நேரத்தில வேலை நடக்கும். உழவோ விதைப்போ பிந்த மாட்டுது. இப்ப ஒருதரிட்டயும் ஒரு வசதியும் இல்லை. உழுறதுக்கு மிசின் இல்லை. மாடு இல்லை. விதைநெல் இல்லை. பசளைக்கு வழியில்லை. மருந்து வாங்க காசில்லை. எல்லாத்துக்கும் அரசாங்கத்தையும் அதிகாரிகளையும் தான் நம்பியிருக்க வேண்டியிருக்கு. உதவி செய்தார்கள். இல்லையெண்டு சொல்ல ஏலாது. ஆனால் உரிய நேரத்திற்கு எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கேல்ல. அதுதான் பிரச்சினை. எங்களுக்கெல்லாம் வயல் இப்பதான் காயாகிற பருவத்தை நெருங்குது. இன்னும் காயாகி நெல்லு பழுத்த பிறகுதான் வெட்ட முடியும். குறைஞ்சது ஒரு மாத்திற்கு மேலாகும். நோய் பீடையும் பிடிச்சிருக்கு. எந்த அளவிற்கு வெள்ளாமை சரிவரும் எண்டு தெரியேல்ல. முந்தி விதைச்சவை-யெல்லாம் இப்ப வெட்டுகினம். சிலபேர் புதுநெல்லை விற்கத் தொடங்கிட்டினம்' என்றார் செல்லப்பா தங்கவேல். அவர் குரலில் கவலை தெரிந்தது.



விவசாயம்தான் தங்கவேலுக்கு முழுநேரத் தொழில். மில்லும் அவரிடம் இருந்தது. சொந்தக்காணியில் விளைகிற நெல்லைத்தான் அவர்கள் காலம் காலமாக உண்டு வந்தார்கள். இப்போது இடப்பெயர்வுக்குப் பின்னர் நிவாரணத்திற்காகக் கையேந்தி நிற்க வேண்டியிருக்கிறதே என வருந்தினார்.

'இடப்பெயர்வின் போது, எல்லாவற்றையும் நாங்கள் எங்களோடயே கொண்டு போனோம். மில்லையும் நான் கொண்டு போனேன். நெல்லு வைத்திருந்தவர்கள் நெல்லைக் கைவிடவில்லை. தங்களோடு எடுத்து வந்தார்கள். இடம்பெயர்ந்த மக்களோடு ஊர் ஊரா மில்லும் வந்தது. நெல்லும் வந்தது. கையில காசில்லை. வயல்ல விளைஞ்சிருந்த நெல்லைக் கொண்டு போன படியால்தான் மக்கள் உயிர்வாழ முடிஞ்சது. இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலெல்லாம் கையில இருந்த நெல்லை மில்லில குடுத்து குத்தி அரிசியாக்கி அதைத்தான் ஆட்கள் பொங்கிச் சாப்பிட்டார்கள். வறுமைப்பட்டவர்களும், ஒண்டும் இல்லாதவர்களும் அரிசி குத்தி மிஞ்சின தவிட்டைப் புடைத்து குறுணலைத் தேடி எடுப்பினம். அதைக் கொண்டுபோய் கஞ்சி காச்சி பிள்ளைகளுக்குக் குடுப்பினம். தாங்களும் குடிப்பினம். இடப்பெயர்வு காலத்தில நிவாரண உணவு கிடைச்சுதுதான். ஆனால் அதை முழுமையா நம்பி இருக்க முடியேல்ல. ஒரு நேரம் வரும். ஒரு நேரம் வராது. அரிசி வந்தா சிலவேளையில மா வராது. வயிற்றுப்பாட்டு நிலைமை இப்படி இருக்கேக்க, மறு பக்கம் ெ'ல்லடி, வான்தாக்குதல், நேரடிச்சண்டை - இதுகளில இருந்து உயிரையும் பாதுகாக்க வேணும். எந்த இடமும் பாதுகாப்பான இடமா இருக்கேல்ல. போன போன இடங்களில எல்லாம் பிரச்சினைதான். விசுவமடு வரைக்கும் என்ர மில்ல கொண்டு போக முடிஞ்சது. அங்கால அதை ஏற்றிப் பறிக்க வாசன வசதி கிடைக்கேல்ல. அதுக்கு கையில காசும் இல்ல. இருந்த காசெல்லாம் முடிஞ்சிட்டுது. மில்ல அதிலயே விட்டிட்டு வந்திட்டம். இன்னும் அதைப் போய் பாக்கேல்ல. என்ன நிலைமையில இருச்கோ தெரியேல்ல. இடம்பெயர்ந்து போய் முள்ளிவாய்க்காலில இருந்து, உயிர் தப்பி வருவம் எண்டு ஒருதருமே நினைக்கேல்ல. முள்ளிவாய்க்காலில போய் இருந்த போது என்ர நாலாவது மகனை எல்ரீரீ பிடிச்சுக்கொண்டு போனார்கள். இடம்பெயர்ந்து வரும் போது தேடிப்பாத்தம். ஆள காணேல்ல. மனிக்பாம் முகாமுக்கு வந்த பிறகும் எல்லா இடமும் தேடிப்பாத்தம். விசாரிச்சு பாத்தம். எல்லா இடமும் சொல்லியிருக்கிறம். இதுவரைக்கும் ஒண்டுமே தெரியேல்ல. என்ன நடந்தது எண்டு தெரியாம கிடக்கு' என தனது குடும்ப நிலைமைகளையும் சோகத்தோடு குறிப்பிட்டார் தங்கவேல்.

வவுனிக்குளத்தில் நன்னீர் மீன்வளர்ப்பும் ஏற்கனவே இடம்பெற்றிருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் அம்பாள்புரத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீன்பிடி தொழிலைத் தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டிருக்கின்றார்கள். இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீள்குடியேற்றத்தில் தமது இடங்களுக்குத் திரும்பியதும், மீன்பிடிப்பதற்காக வவுனிக்குளத்திற்குச் சென்றபோது உடனடியாக அனுமதி கிடைக்கவில்லை. வெளி-மாவட்டங்களைச் சேர்ந்த சிலருக்கே அங்கு சென்று மீன்பிடிப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் நாளடைவில் இவர்கள் குளத்திற்குச் சென்று மீன்பிடிப்பதற்கான அனுமதி கிடைத்தது. அத்துடன், ஐஓம் போன்ற உதவி நிறுவனங்கள் மீன்பிடிப்பதற்குத் தேவையான படகு உள்ளிட்ட உதவிகளை வழங்கியுள்ளார்கள்.

ஆயினும் இதிலும் பிரச்சினை இருக்கத்தான் செய்கின்றது. வவுனிக்குளத்தில் பிடிக்கப்படுகின்ற மீனைக் கொள்வனவு செய்ய வருவதாகக் கூறுபவர்கள் சில வேளைகளில் உரிய அதிகாரிகளின் அனுமதியின்றி மீன்பிடிப்பதில் ஈடுபட்டு விடுகிறார்களாம். அது மட்டுமல்ல. ஈயக்குண்டு என சொல்லப்படுகின்ற குண்டைப் பயன்படுத்தி மீன்களை மயக்கமடையச் செய்து மீன்பிடிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறதாம்.

இவ்வாறு மீன்பிடிப்பது அதிகாரிகளினால் தடை செய்யப்பட்டுள்ளது. ஆயினும் உள்ளூர்வாசிகள் சிலரும் பணத்திற்கு ஆசைப்பட்டு, ஈயக்குண்டை வெளியில் இருந்து வருபவர்களிடம் பெற்று மீன்பிடிக்க பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, உள்ளூர்வாசிகளின் இந்த நடவடிக்கை பொறுப்புள்ள அதிகாரிகளுக்குப் புதிய தலையிடியாக வந்துள்ளது. ஆயினும் அதிகாரிகள் கூடிய அளவில் தடைசெய்யப்பட்டுள்ள ஈயக்குண்டைப் பயன்படுத்தி மீன்பிடிப்பவர்களைத் தடுப்பதில்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# அந்த விதை முளைக்கட்டும்



## சத்குரு வாசுதேவ்

பிரபஞ்ச நடனம் எத்தனை அற்புதமாயிருக்கிறது தெரியுமா? நடனமாடு பவரையே நீங்கள் மறந்துவிடும் அளவுக்கு!! ஆனால் நடனமாடுபவர் இல்லாமல் நடனம் இல்லை. ஒரு நடனத்தின் போது நடனக் கலைஞரை நீங்கள் அடையாளம் காண வேண்டுமென்றால், நடனத்திலேயே நீங்கள் அமிழ்ந்து விட வேண்டும். அந்த நிலையில் நீங்கள் பார்வையாளராக இல்லாமல் நடனத்தின் அங்கமாகவே ஆகி விடுகிறீர்கள். அந்நிலையில் நடனக் கலைஞரை உங்கள் அனுபவத்தில் நீங்கள் உணர முடியும். அல்லது அந்த நடனக்கலைஞரை அவருடைய அத்தனை பரிமாணங்களிலும் ஆழமாக உணர வேண்டுமென்றால், நடனத்தின் மூலத்தை உணர வேண்டுமென்றால், நீங்கள் முழு கவனம் செலுத்த வேண்டும். இது முன்னுக்குப் பின் முரணாகத் தோன்றலாம்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org

ஒரு நேரம் உங்களை நடனத்தின் அமிழ்ந்து போகச் சொல்கிறேன். மறுநேரம் உங்களை முழு கவனத்துடன் இயங்கச் சொல்கிறேன். இது முரண்பாடு போலத் தோன்றும். ஆனால் இது முரண்பாடு அல்ல. இந்த உலகம் உருண்டையானது. எதுவும் எதனோடும் முரண்படுவதேயில்லை. நீங்கள் அனைத்தையும் பகுதி பகுதியாகப் பார்ப்பதால் முரண்பாடுகள் இருப்பது போலத் தோன்றுகிறது.

நடனத்தில் முற்றாக அமிழ்ந்து போவதன் மூலமும் நீங்கள் உணர்வீர்கள். நிகழ்வதை முழு தீவிரத்துடன் உள்வாங்குவதன் மூலமும் உணர்வீர்கள். இரண்டாவது முறையில் உணர அளவில்லாத விழிப்புணர்வும், கூர்மையும், தீவிரமும், பயிற்சியும் வேண்டும். இதன்மூலம் நடனத்தின் அங்கமாக நீங்கள் எளிதில் மாறிவிடுகிறீர்கள். ஒத்திசைவு மெல்ல மெல்ல கைகூடுகிறது. நடனம் உங்களை மெல்ல மெல்ல ஆழமாய் உள்வாங்குகிறது. ஒரு கட்டத்தில் உங்களுக்கும், நடனத்திற்கும் பேதமில்லாமல் போகிறது. நடனத்தின் அங்கமாக நீங்கள் மாறிவிடுகிறபோது, நடனமாடுபவரை நீங்கள் உணராதிருக்க வாய்ப்பில்லை. இல்லாத தடைகளையும், இடையூறுகளையும் நீங்களாக உருவாக்குகிறீர்கள்.

சமீபத்தில் ஒரு சத்சங்கத்தில் என்னிடம் கேட்டார்கள். "நான் பல ஆன்மீக போதகர்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் உங்கள்பால் ஈர்க்கப்படுவது போல் நான் ஒருவர்பாலும் ஈர்க்கப்பட்டதில்லை. உங்களிடம் அப்படி என்னதான் இருக்கிறது" என்று. உங்களிடம் இல்லாத எதுவும் என்னிடம் இல்லை. நம் எல்லோருக்குமே, எல்லையின்மையை உணர்வதற்கான விதை வழங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் எச்சரிக்கையோடும், கவனத்தோடும் அந்த விதையைப் பாதுகாத்து வருகிறீர்கள். நானோ அந்த விதையை அழித்து விருட்சமாக்கி விட்டேன். விதையை இழந்தால்தான் விருட்சம் கிடைக்கும். விதையை விதையாகவே வைத்திருப்பது முட்டாள்தனமானது. ஆனால் அதை நீங்கள் சாமர்த்தியம் என்று நினைக்கிறீர்கள். உங்களை சிதைக்க அனுமதிப்பதும், ஒரு தனி மனிதனின் குறுகிய எல்லைகளைத் தகர்ப்பதும் சாமர்த்தியமாகக் கருதப்படுவதில்லை. அந்த வகையில் நீங்கள் வாழ்வையே ஏமாற்றிய சாமர்த்தியசாலிகள்.

ஒருநாள் சங்கரன்பிள்ளை ஈஷா யோக மையத்திற்கு வருவதாகத் தீர்மானித்தார். அவரை நன்கறிந்தவர்கள் நாம் என்பதால், நல்ல முறையில் வரவேற்று எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டினர் ஆசிரவாசிகள். பிறகு ஆசிரமம் முழுவதையும் பார்ப்பதற்கு வசதியாய், வெள்ளியங்கிரியை எதிர்கொண்டு அமைந்திருக்கும் சித்ரா குடியிருப்பின் முதல்மாடியில் அவர் தங்க வைக்கப்பட்டார். அவரை அங்கு அமர்த்திய சுவாமி, மலையை சுட்டிக்காட்டி, "இங்கிருந்து நல்ல காட்சி உங்களுக்குக் கிடைக்கும் என்பதால் இங்கு தங்க வைத்திருக்கிறோம்" என்றார். உடனே, சங்கரன்பிள்ளை, "இங்கிருந்து நல்ல காட்சி கிடைத்திருக்கும். ஆனால், இந்த மலைதான் மறைத்துக் கொண்டிருக்கிறது" என்றார்.

இதைத்தான் மனிதர்கள் தமக்குத் தானே செய்து கொண்டிருக்கிறார்கள். மலை ஒரு காட்சி என்பதை உணராமல் அதைப் பாதை என்று கருதுகிறார்கள். இதையும், அதையும் செய்வது மட்டுமல்ல ஆன்மீகம். அது பல அம்சங்களைக் கொண்டது. மனிதர்கள் அதிகம் வெறுக்கும் இடங்களில் அவர்களைத் தங்க வைக்க ஈஷாவில் போதிய இடங்கள் இல்லை. அத்தகைய இடங்களிலேயே மனிதர்களை இருக்கச் செய்ய விரும்புவேன்.

கண்ணன் கீதையைப் போதிக்க போர்க்களத்தைத் தேர்ந்தெடுத்தான். இது நடந்தது 3,500 ஆண்டுகளுக்கு முன்பு. தன் போதனைகளை வழங்குவதற்காக, கண்ணனால் போரையே உருவாக்க முடிந்தது. நான் போரை உருவாக்கப் போவதில்லை. பெருங்குழப்பத்தையும் உருவாக்கப் போவதில்லை. ஆனால் உங்களுக்குப் பிடிக்காத சிலருடன் உங்களை சேர்த்து சிறிய அளவிலான குழப்பத்தை உண்டாக்க முடியும். இதை ஒரு தடை என்று நினைத்தால் இழப்பு உங்களுக்குத்தான். உங்களால் எதன் பகுதியாகவும் மாற முடியாது. எதையும் ஆழ்ந்து உள்வாங்கவும் முடியாது.

ஒருமுறை அபே மேக்ஸ்வெல், வொல்கோவிட்ச் என்ற பெயருடைய ஓவியர் ஒருவரை சந்தித்தார். ஓவியருக்கு அப்போது வயது 73. சில நாட்களுக்கு முன்னர்தான் கண்ணில் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தார். அவரிடம் மேக்ஸ்வெல், "இனியும் உங்களால் ஓவியப் பணியைத் தொடர முடியுமா?" என்று கேட்டார். அதற்கு வொல்கோவிட்ச், "என்னால் தொடர்ந்து வரைய முடியும் என்று நம்புகிறேன். ஒருவேளை பார்வை மங்கி, ஓவியம் வரைய முடியாமல் போனால் நான் விமர்சகனாகி விடுவேன்" என்றாராம். உண்மைதான்.

விமர்சகர் ஆகிறபோது உங்கள் கண்களில் எவையும் படாது. ஒரு கலைஞராகவோ, அந்தக் கலையின் ரசிகராகவோ இருக்கும்போதுதான் உங்களால் எதையும் உணர முடியும்.

புகழ்பெற்ற இலக்கிய விமர்சகர் ஒருவர், ஒருமுறை குறிப்பிட்டார், "நான் உலகின் புகழ்பெற்ற கவிஞர்கள், ஓவியர்கள் மற்றும் கலைஞர்களின் சிலைகளையும் கண்டுள்ளேன். ஆனால் எங்கேயும் ஒரு விமர்சகரின் ஓவியத்தையோ, சிலைகளையோ கண்டதில்லை" என்று.

ஏனெனில் பெரும்பாலான விமர்சகர்கள் ஒட்டுண்ணிகளைப் போன்றவர்கள். அவர்களுக்கென்று வாழ்க்கை இல்லை. நீங்கள் வெறும் பிழைப்பைத் தேடுபவர்களாக இருந்தால் ஒட்டுண்ணிகளாக வாழலாம். நீங்கள் விடுதலையைத் தேடுபவர்களாக இருந்தால், ஒட்டுண்ணிகளாக வாழ முடியாது. ஒரு குழந்தை தாயின் முலைப்பாலை அருந்துகிறது. ஆனால் அதை நீங்கள் ஒட்டுண்ணி என்று சொல்வதில்லை. காரணம், அது தாய்ப்பாலருந்தி, வளர்ந்து, தாயிடமிருந்து விடுதலை பெறுவதற்காகவே பாலருந்துகிறது. ஓர் ஒட்டுண்ணி ஒருபோதும் விடுதலையை விரும்புவதில்லை. தன் பிழைப்பையே பெரிதாக நினைத்து பல பெரிய வாய்ப்புகளைத் தவற விடுகிறது. எனவே, நீங்கள் பிழைப்பைத்தான் விரும்புகிறீர்களென்றால் அதற்குப் பலவழிகள் உள்ளன. நான் அவற்றைக் கற்றுத் தர மாட்டேன். நீங்கள் அவற்றை இந்த சமூகத்தில் கற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் தேடுவது விடுதலையை என்றால் நான் உங்களுக்குப் பயன்படுவேன். அப்போதுதான் இங்கிருப்பதும், இங்கு நடைபெறும் தீவிரமான பணிகளில் பங்கெடுப்பதும் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

நாம் எல்லோரும் ஒரே விதமான விதையைச் சுமந்துதான் வந்திருக்கிறோம். எல்லா விதைகளுக்கும் ஒரேவிதமான வாய்ப்பு இருக்கிறபோதும் கூட விதைக்கும், மரத்துக்கும் இடையிலான பயணம் ஒன்றிருக்கிறது. விதை மரமாக வேண்டுமென விரும்புவீர்களேயானால், அதை பராமரிக்க வேண்டும். வளர்க்க வேண்டும். களைகளைக் களைய வேண்டும். பல இலட்சம் ஆண்டுகளாய் மனிதர்களை அலைக்கழிக்கும் அதே களைகள்தான் திரும்பத் திரும்ப முளைக்கின்றன. அவற்றை எப்படிக் கையாள்வதென்று மனிதர்களுக்கு இன்னும் தெரியவில்லை. கோபம், வெறுப்பு, பொறாமை, அச்சம், எல்லையில்லாத சந்தேகம் போன்ற அதே களைகள்தான். களைகளைப் பயிரிடத் தேவையில்லை. வேலி போட வேண்டியதில்லை. அவை தாமாகவே வளரும்.

ஆனால் விதையன்று புனிதமிக்கதாக வளர வேண்டுமானால், நிலத்தைக் கொத்தி, விதைத்து, போதிய நீரும், சூரிய வெளிச்சமும் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. சூரியனின் வெப்பத்திற்கு பயந்து விலகியிருந்தால், உங்கள் வாழ்க்கையை உயிர்ப்புள்ளதாக்கும் அதன் சக்தியிலிருந்தும் விலகியிருப்பீர்கள். அந்த சக்தியே வாழ்வை ஆக்கும் சக்தியாகவும், அழிக்கும் சக்தியாகவும் இருக்கிறது.

தற்காப்பு என்கிற உணர்வுக்கு அடிமையாகி அதிலிருந்து தள்ளிப்போய் நிழலில் நிற்பதன் மூலம் உங்கள் வாழ்வாதாரத்தையும் இழக்கிறீர்கள். நெருப்பு உணவைப் பக்குவப்படுத்துகிறது. அதுவே, அதிகமானால் உணவைக் கருக்கவும் செய்கிறது.

உணவைப் பக்குவப்படுத்தும் எளிய கலை உங்களுக்குத் தெரிந்திருந்தால் நல்லது. தெரியாதவர்கள் பக்குவப்படுத்துவதாக கருதிக் கொண்டு அதைக் கருக்கி விடுகிறார்கள். கரியை உருவாக்குகிறார்கள். இன்று இந்த உலகில் வாழ மிகவும் அவசியம் கரியமில வாயு என்று அவர்களுக்குத் தெரியுமல்லவா!! உங்களை முழுமையாக ஒப்புக் கொடுக்கும்போது பக்குவப்படுத்துவது மிகவும் எளிய காரியம். எதிர்ப்புணர்வுடன் தடைகளை எழுப்பிக் கொண்டால் அது மிகவும் கடினமான வேலையாகி விடுகிறது. இதை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

ஈஷா யோக மையத்திற்கு வருபவர்களில் சிலர், துப்பறியும் நோக்கில் வருகிறார்கள். மெல்ல மெல்ல மாணவர்களாகிறார்கள். படிப்படியாக சீடர்களாகிறார்கள். இதையும் கடந்து வேகமாகப் பயணம் செய்யவும், விரைவாக உள்வாங்கப் படவும் விரும்புவீர்களானால், நீங்கள் பக்தராக வேண்டும். உங்களை பக்தராக்குவதற்கென்று பயிற்சிகளோ, போதனைகளோ கிடையாது. சிலவற்றை செய்வதாலோ சிலவற்றை சொல்வதாலோ உங்களை பக்தராக்க முடியாது. ஆனால் வளர்ச்சி நிகழ நீங்கள் அனுமதித்தால், நடனத்தின் அங்கமாக நீங்கள் மாறிப்போனால், நடனத்தின் மூலம் எதுவோ அது உங்களைத் தொடும். அப்போது நீங்கள் இயல்பாகவே அதனுடன் இரண்டறக் கலப்பீர்கள்.

"தியானலிங்கத்தின் முன்னிலையில் அமரும்போது நான் முழு பிரபஞ்சத்தையே பார்த்தேன்" என்றார் ஒருவர்.

ஒரு கர்ப்பிணிப் பெண்ணைப் போல, நான் தியானலிங்கத்தை என்னுள் மூன்று பிறவிகளாகச் சுமந்தேன். ஒன்பது மாதங்கள் சுமக்கும் பெண்களுக்கு அது எவ்வளவு சிரமமான காரியம் என்பது புரியும். அவர்களுக்கும் ஒன்பது மாதங்களானால் பெற்றெடுத்தால் போதும் என்று தோன்றி விடுகிறது. மூன்று பிறவிகளாய் ஒரே கருவை உள்ளே சுமப்பது சாதாரண வேலையல்ல.

எனவே பல இலட்சம் ஆண்டுகளாய், மனிதர்கள் செய்யும் அதே அபத்தங்களை, திரும்பத் திரும்பச் செய்யாதீர்கள். குறைந்தது புதிய அபத்தங்களையாவது செய்து காட்டுங்கள். ஒரு விநாடி அற்புதமாக இருக்கிறது. மறுவிநாடியே அவலமாகத் தோன்றுகிறது. இதைத்தான் பல இலட்சம் ஆண்டுகளாய் மனிதர்கள் செய்து வருகிறார்கள்.

நீங்கள் அற்புதமான பயிரை விளைவித்துக் காட்டவில்லையென்றால், புதிய களைகளையாவது எனக்குக் காட்டுங்கள். களையை வளர்க்க எந்த முட்டாளாலும் முடியும். நீங்களோ, அதை மற்றவர்களை விடவும் சாமர்த்தியமாக செய்வதாய் நினைக்கிறீர்கள். அப்படி எதுவும் கிடையாது. நீங்கள் நீச்சல் பழக விரும்பினால், உங்கள் படுக்கையில் கிடந்தபடி பயிற்சி செய்ய

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# கற்றறிந்த பாடங்கள் நல்லிணக்கத்தை உருவாக்குமா அல்லது கருத்து மோதல்களில் கரைந்து போகுமா?

**பாகம் _ 01**

## இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத் திற்கான ஆணைக்குழு வடபகுதிக்கான தனது அமர்வுகளில் கடைசியாக யாழ்ப்பாணத்தில் நடத்தி முடித்துள்ளது. கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள், என்ன நடந்தது என தெரியாமலே காணாமல் போயுள்ளவர்கள், கைது செய்து இழுத்துச் செல்லப்பட்ட பின்னர் இல்லாமல் போயிருப்பவர்கள், வாக்குறுதியை நம்பி சரணடைந்ததன் பின்னர் என்ன நடந்தது என தெரியாமலிருக்கின்ற விடுதலைப்புலிகள் ஆகியோர் பற்றி உறவினர்கள் இந்த ஆணைக்குழு முன்னிலையில் எண்ணற்ற கதைகளைக் கண்ணீரோடு கூறியிருக்கின்றார்கள்.

இத்தகைய அவலக் கதைகளுக்கு மத்தியில் அதிகாரப் பகிர்வு வேண்டும். இனப்பிரச்சி னைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விசாரணைகளின்போது புத்திஜீவிகளினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வு பற்றிய பேச்சுக்கு முன்னால், வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் என்ற நிலைப்பாட்டைத் தகர்த்து, அந்தப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டிருப்பது குறித்து பலரும் ஆணைக்குழுவி னரிடம் முறையிட்டிருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்குப் பிரதேசம் என்பது தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற பகுதிகளாகும். அது அவர்களின் தாயகப் பிரதேசம். இந்தத் தாயகப் பிரதேசம் என்ற மண்ணுரிமையின் அடிப்படையிலேயே தமிழ் மொழிக்கான அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டது. அது இந்த நாட்டின் அரசிய லமைப்பிலும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் சிறுபான்மையினராகிய தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை மறுத்து, அவர்களை ஒடுக்குகின்ற நடவடிக்கைகள் பல்வேறு வடிவங்களில் நாடு அன்னியரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே பெரும்பான்மை சிங்கள அரசியல் கட்சித்தலைவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

அரசியல் ரீதியாகத் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டதன் விளைவாகவே இந்த நாட்டில் ஓர் ஆயுதப் போராட்டம் உருவாகியது. இந்த ஆயுதப் போராட்டமானது கபடத்தனமான அரசியல் சூழ்ச்சிகளின் மூலம் முறியடிக்கப்பட்டு, இன்று நாட்டில் அமைதி நிலவுவதான ஒரு மாயத்தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது.



போருக்குப் பிந்திய அமைதி என்ற மாயைக்குள், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்திற்கான அடிப்படைக் காரணம் இராஜ தந்திர ரீதியில் புதைக்கப்பட்டு வருகின்றது. நாட்டில் 30 வருடங்களாக நிலவிய யுத்த நிலைமைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் துணிகரமான நடவடிக்கைகளின் மூலம் முடிவு காணப்பட்டுள்ளது என்ற பெருமை காலா காலத்திற்கும் பேசி மகிழக்கூடிய மனப்பாங்கு சிங்கள மக்கள் மத்தியில் திட்டமிட்ட முறையில் வளர்த்தெடுக்கப்பட்டு வருவது இன்னுமொரு விடயம்.

சிங்கள மக்கள் ஏதோ ஓர் அடிமைத்தனத்திற்குள் தள்ளப்பட்டிருந்தது போலவும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் மூலம் அடைந்துள்ள வெற்றியானது, அந்த அடிமைத்தனத்தில் இருந்து சிங்கள மக்களை மீட்டெடுத்த ஒரு சுதந்திரத்திற்கான போராட்டமாகவும் சிங்களத் தரப்பைச் சேர்ந்த சிலர் சித்தரிக்க முயன்று வருகின்றார்கள்.

இனப்பிரச்சினைக்கு ஓர் உறுதியான அரசியல் தீர்வை அடைய முடியாததன் காரணமாகத் தமிழ் மக்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப்போராட்டம் தீவிரமான இராணுவ நடவடிக்கைகளின் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது, தோல்வி யடையச் செய்யப்பட்டுள்ளது. யுத்தம் என்ற நோய் அல்லது நோ தீர்ந்து விட்டது. ஆனால் அந்த நோய்க்கான, நோவுக்கான காரணம் சரியான முறையில் வெளிக் கொண்டு வரப்பட்டு அதற்குத் தீர்வு காணப்படவில்லை. அது மட்டுமல்ல யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களின் அவலங்கள் சரியான முறையில் கணக்கில் எடுக்கப்படவில்லை. அந்த அவலத்தின் மூலம் அவர்கள் அனுபவித்து வருகின்ற துன்பங்கள், வலிகளுக்கு சரியான முறையில் நிவாரணமளிப்பதற்கான முயற்சிகள் மனிதாபிமான முறையில் தீர்க்கமாகத் திட்டமிடப்பட்ட வகையில் முன்னெடுக்கப்பட வில்லை. இதுதான் இன்றைய யதார்த்தம்.

மறுபக்கத்தில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் அல்லது விடுதலைப்புலிகளின் இராணுவ வலிமையை முறியடிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியில் யுத்த முனைகளில் நடை- பெற்றது என்ன என்பதைக் கண்டறிவதற்கு சர்வதேசம் மிகுந்த ஆவலாக இருந்தது. பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இந்த யுத்தத்தின்போது கொல்லப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கான விடுதலைப்புலிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள். இறுதிச் சண்டைகளின்போது மிகமோசமான முறையில் மனித உரிமைகள் மீறப்பட்டு மனிதாபிமானம் கடைப்பிடிக்கப்படவில்லை என பலராலும் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் மோதல்களில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இருதரப்பினர் மீதும் சுமத்தப்பட்டிருந்தன. ஆயினும் யுத்தத்தில் அரச படைகள் வெற்றியடைந்ததும், இராணுவத்தினரிடம் சரணடைந்த பொதுமக்கள் மற்றும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் எந்த வகையில் நடத்தப்பட்டார்கள். யுத்த மோதல்கள் எவ்வாறு இடம்பெற்றன என்பதைக் கண்டறிவதற்காக அந்தப் பிரதேசத்தைச் சென்று பார்வையிட வேண்டும் என சர்வதேச அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் முதல் சாதாரண பொதுமகன் வரையில் பலரும் ஆவலாக இருந்தார்கள். ஆனால், யுத்தம் முடிவடைந்து ஒன்றரை வருடங்கள் முடிந்துவிட்ட நிலையிலும், அந்தப் பகுதிகளுக்குள் செல்வதற்கு இராணுவத்தினரையும், அரச தலைவர்களையும் தவிர வேறு எவருக்கும் அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை.

அரசாங்கம் இவ்வாறு அனுமதி வழங்க மறுத்ததையடுத்து, அரசாங்கத்தின் மீது பல்வேறு வகைகளில் சந்தேகம் எழுந்தது. அந்தச் சந்தேகங்கள் அரசு மீது யுத்தக்குற்றம் சுமத்தும் அளவிற்குத் தீவிரமாகியது. இந்தத் தீவிரத்தையும் சர்வதேச அழுத்தத்தையும் தணிப்பதற்காகவே யுத்தத்தின் போது கற்ற பாடங்கள் பற்றி ஆய்வு செய்து அதனடிப்படையில் நாட்டில் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு, அதன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

யுத்த காலத்திலும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் என்ன நடைபெற்றது எவ்வாறான பாதிப்புகள் ஏற்பட்டன என்பதைக் கண்டறி- வதற்கான விசாணைகளை இந்தக்குழு மேற்கொண்டு வருகின்றது. ஆயினும் அரசாங்கத்தின் மீது போர்க்குற்றத்தைச் சுமத்தவல்ல விடயங்களை இந்தக்குழுவினர் தவிர்ப்பதாகவும், விடுதலைப்புலிகள் மீது போர்க்குற்றத்தைச் சுமத்தக்கூடிய விடயங்களில் அதிக அக்கறையும் ஆர்வமும் செலுத்தி வருவதாகப் பலரும் குறிப்பிடுகின்றார்கள்.

குற்றம் புரிந்தார் என சந்தேகிக்கப்படுபவரால், சந்தேகத்திற்குரிய குற்றச் செயல் பற்றி விசாரிப்பதற்கான உத்தரவு வழங்கப்படுகின்ற நடைமுறையிலேயே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் பெறுமதியற்றதாகவே இருக்கும். இதில் நம்பிக்கை வைப்பதற்கு முடியாது என புத்திஜீவிகளும், சர்வதேச அமைப்புக்களும் வெளிப்படையாகவே கருத்து வெளியிட்டி ருந்தன. இதன் அடிப்படையிலேயே ஹியுமன் ரைட்ஸ் வோச் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இந்த ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்க வருமாறு அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



# அவுஸ்திரேலிய அணியின் வீழ்ச்சிக்கு என்ன காரணம்?

## விளையாட்டுத் தகவல்கள் 294

"அதிக பணம் மற்றும் மதிப்பின் காரணமாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீழ்ச்சிப் பாதை யில் பயணிக்க துவங்கி உள்ளது," என அவுஸ்திரேலியா மீடியா குற்றம் சாட்டியுள்ளது.

சமீபகாலமாக அவுஸ்திரேலிய அணியின் செயல்பாடுகள் படுசோதப்பலாக அமைந்துள்ளது. டெஸ்ட் ரேங்கிங் பட்டியலில் 5 வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. சமீபத்தில் விளையாடிய 7 சர்வதேச போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளது. இந்த மாதம் இறுதியில் வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில், இங்கிலாந்துக்கு எதிராக விளையாட உள்ள நிலையில் அடுத்தடுத்த தோல்விகள் அவுஸ்திரேலியாவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலியா மீடியா கடுமையாக சாடியுள்ளது. "ஏன் அவுஸ்திரேலிய அணி நெருக்கடியில் உள்ளது" என்ற தலைப்பில் "டெய்லி டெலிகிராப்" பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி : அவுஸ்திரேலிய அணி வீரர்கள் தற்போது அதிகப்படியான பணம் சம்பாதிக்கிறார்கள். அணியில் இடம் பெற்றுள்ள வீரர்களில் குறைந்தது 6 பேராவது, ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள். மைக்கேல் ஹசி, நார்த் போன்ற வீரர்கள் குறைந்தது 10 ஆண்டுகள் முதல்தர போட்டிகளில் விளையாடிய பின் சர்வதேச அணியில் இடம் பிடித்தனர். தற்போது அணியில் இடம் பெற்ற வீரர்களில் பலர் முதல் தர போட்டிகளில் போதிய அனுபவம் இல்லாதவர்கள். இவர்களுக்கு விரைவில் சர்வசேத போட்டிகளில் விளையாடும் வாய்ப்பு கிடைத்து விட்டது. இதனால் 3 அல்லது 4 போட்டிகளில் விளையாடினால் அவுஸ்திரேலிய அணியில் இடம் பெற்று விடலாம் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் தங்களது மதிப்பு உயர்ந்து விட்டதாக அவர்கள் கருதி விடுகின்றன. இவை எல்லாம் சேர்ந்து ஒட்டுமொத்தமாக ஆட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. அவுஸ்திரேலிய அணி தன்னம்பிக்கையை தற்போது இழந்து விட்டது. இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

"தி ஏஜ்" பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தி, முந்தைய சாதனைகளை மனதில் வைத்துக் கொண்டு அதே நினைப்பில் உள்ளது அவுஸ்திரேலியா. தற்போது அணிக்கு ஏற்பட்ட பின்னடைவை சரி செய்யத் தவறி வருகிறது. இது தொடர்ந்தால் கிரிக்கெட் மீதான மக்களின் ஈர்ப்பு குறைந்து விடும். இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு நாள் போட்டி தரவரிசை: இந்தியாவை பின்னுக்கு தள்ளியது இலங்கை

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) வெளியிட்டுள்ள ஒரு நாள் போட்டி தரவரிசை யில், இந்தியாவை பின்னுக்குத் தள்ளி இலங்கை 2-ம் இடம் பிடித்துள்ளது. அண்மையில் ஆஸ்திரேலியாவில் நடந்த அந்நாட்டு அணிக்கு எதிரான முத்தரப்பு ஒரு நாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை அணி வென்றது. இதன்மூலம் கிடைத்த மூன்று புள்ளிகளுடன் மொத்தம் 118 புள்ளிகளைப் பெற்று தரவரிசையில் 2-வது இடத்துக்கு அந்த அணி முன்னேறியுள்ளது. இந்தியா 117 புள்ளிகளுடன் 3-வது இடத்தில் உள்ளது. தொடரை இழந்தபோதும் பட்டியலில் 128 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.

இந்தியா மீண்டும் 2-வது இடத்தைப் பிடிக்க வேண்டுமானால், எதிர்வரும் நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரில் அனைத்து ஆட்டங்களிலும் வென்றாக வேண்டும். இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடர் நவம்பர் 28-ம் தேதி தொடங்குகிறது. இதில் 5-0 என்ற கணக்கில் இந்தியா வெற்றி பெற்றால் மட்டுமே மீண்டும் 2-வது இடத்துக்கு முன்னேற முடியும்.

இதற்கிடையே தென் ஆப்பிரிக்கா (4-வது இடம்), பாகிஸ்தான் (6-வது இடம்) ஆகியவை தத்தமது இடங்களை தக்கவைத்துக் கொண்டுள்ளன. இந்த இரு அணிகளுக்கும் இடையே ஐக்கிய அரபு அமீரகத்தில் அண்மையில் நடந்து முடிந்த ஒரு நாள் தொடரில் 3-2 என்ற கணக்கில் தென் ஆப்பிரிக்கா வென்றது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து 112 புள்ளிகளுடன் 5-வது இடத்தில் உள்ளது.

### மலிங்க, மெத்தியுஸின் அபாரத்தால் இலங்கை வெற்றி

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டியில் மெத்தியுஸ் மற்றும் மலிங்கவின் அபாரத்தால் இலங்கை எதிர்பாராத வெற்றியை பெற்றது. இன்றைய போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆரம்பமே தடுமாற்றத்தை எதிர் நோக்கிய அவுஸ்திரேலிய அணி இடைநிலை வீரராக களமிறங்கிய ஹசியின் நிதான துடுப்பாட்டத்துடன் சற்று வலுவான நிலையை அடைந்து. மைக்கேல் ஹஸ்ஸி மட்டுமே சிறப்பாக துடுப்பெடுத்தாடி 71 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்காது இருந்தார். இதில் ஆஸ்திரேலியா மொத்தம் 14 பவுண்டரிகளையே அடித்திருந்தது. அதுவும் 17 ஓவர்களுக்குப் பிறகு அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் 3 பவுண்டரிகளையே அடித்தனர். மலிங்க 39 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சுராஜ் ரந்திவ் 35 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்ற முரளிதரன் 9 ஓவர்களில் 36 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து சிறப்பாக பந்து வீசினார். 240 எனும் இலகு வெற்றி இலக்கை அடைய பதில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பம் முதலே தடுமாற்றத்தை நோக்கி ரசிகர்களின் மத்தியில் ஏமாற்றத்தை அளித்தது. ஒரு கட்டத்தில் வெற்றிக்கு ஒரு ஓட்டம் பெற இருந்த நிலையில் மலிங்க ரன் அவுட் மூலம் ஆட்டமிழந்தார். எனினும் தொடர்ந்து களமிறங்கிய முரளிதரன் வொட்சனின் பந்து வீச்சில் 4 ஓட்டங்களை பெற்று அணியை வெற்றி பெற செய்தார். இலங்கை அணி 44.2 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 243 ஓட்டங்களை பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில் டொற்றி 4 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தார்.

### அன்ஜலோ மத்யூஸ் லசித் மாலிங்க புதிய உலக சாதனை...

இலங்கை அணியின் அன்ஜலோ மத்யூஸ் மற்றும் லசித் மாலிங்க ஆகியோர் உலக சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளனர். அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக மெல்பர்னில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. மத்யூஸ் மாலிங்க ஜோடி ஒன்பதாம் விக்கட்டுக்காக 132 ஓட்டங்களைப் பகிர்ந்து புதிய உலக சாதனையை நிலைநாட்டியுள்ளது.

கபில் தேவ் மற்றும் சஹிட் கிர்மாணி ஆகியோரினால் நிலைநாட்டப்பட்ட 27 ஆண்டுகால சாதனையை மத்யூஸ் மாலிங்க ஜோடி முறியடித்துள்ளது. இதேவேளை, மத்யூஸ் மாலிங்க ஜோடியின் அபார துடுப்பாட்ட திறமையினால் கை நழுவிப் போயிருந்த வெற்றியை இலங்கை அணி பெற்றுக் கொண்டுள்ளது. மிக அபாரமான துடுப்பாட்டத் திறமையினால் அவுஸ்திரேலிய அணியின் தலை விதியை மாற்றி எழுதிய அன்ஜலோ மத்யூஸ் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

### 20 - 20 போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இலங்கை இலகு வெற்றி

அவுஸ்திரேலிய அணியுடனான ட்வென்ட்டி20 கிரிக்கெட்போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது. அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இன்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 133 ஓட்டங்களைப்பெற்றது. பிரட் ஹடின் 35 ஓட்டங்களையும் ஸ்டீவன் ஸ்மித் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கைப் பந்துவீச்சாளர்களில் சுராஜ் ரந்தீவ் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 16.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவர் குமார் சங்கக்கார 41 பந்துகளில் 44 ஓட்டங்களையும் திலகரட்ன தில்ஷான் 34 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

### அவுஸ்திரேலியா ஆறுதல் வெற்றி : தொடரை கைப்பற்றியது இலங்கை

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இறுதி ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி ஆறுதல் வெற்றி பெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 32 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 115 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய டில்சான் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, உப்புல் தரங்க சற்று நிதானமாக துடுப்பெடுத்தாடி 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் தொடர்ந்து களமிறங்கிய சங்ககார மற்றும் ஜயவர்தன ஆகியோர் எவ்வித ஓட்டமும் பெறாது வந்தவேகத்தில் களத்தை விட்டு சென்றனர். 3 ஆவது விக்கெட்டுக்காக களமிறங்கிய சாமர சில்வா அதிகூடுதலாக 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஏனைய வீரர்கள் 10க்கும் குறைவான ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில் அதிரடியாக பந்து வீசிய மெக் கே 9 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

116 எனும் இலகு வெற்றி இலக்கை அடைய களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 21.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 119 ஓட்டங்களை பெற்று 170 பந்துகள் மீதமிருக்க எட்டு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய வெட்சன் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தொடர்ந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஹெடின் 31 ஓட்டங்களை பெற்று ஆட்டமிக்க அணிதலைவர் கிளாக் 50 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களை பெற்று அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார். பந்து வீச்சில் பேர்ண்டோ 8 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். எனினும் இலங்கை அணி 3க்கு 2 என தொடரை கைப்பற்றியது. இன்றைய போட்டியின் ஆட்டநாயகனாக மெக்கே தெரிவு செய்யப்பட்டதோடு தொடர் ஆட்டநாயகனாக தொடரில் சாதனை வெற்றிக்கு வழிவகுத்த இலங்கை அணியின் பந்து வீச்சாளர் லசித் மாலிங்க தெரிவு செய்யப்பட்டார்.

### இலங்கை - மேற்கிந்திய சுற்றுப்போட்டிக்கு தங்கக்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# அடமானக்கடன் $1,000,000,000

கனடாவில் அடமானக்கடனின் பெறுமதி சரித்திரத்தில் முதல் தடவையாக $1 ரில்லியன் ($1,000,000,000) என்ற பெரிய பெறுமதியைத் தாண்டியுள்ளது. ஆதனத்தில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு மற்றும் அடமானக்கடனில் ஏற்பட்ட வட்டிவீதத்தின் வீழ்ச்சியால், வீட்டை பாவித்து மேலதிக அடமானக் கடனைப் பெற்றதே இதற்குரிய முக்கிய காரணமாகும்.

இந்த ஆண்டின் (2010) ஓகஸ்ட், இறுதியில் தெரிவிக்கப்பட்ட கணக்கின்படி இந்த பெறுமதி $1,008,000,000 ஆகக் காணப்பட்டது. இந்த பெறுமதி கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 7.6% அதிகரிப்பு காணப்படுகின்றது. மேலும் கடந்த 15 வருடங்களின் அடமானக் கடன் பெறுநோரின் தொகை 194% இனால் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2010 மே இற்கு பிறகு நாடாளாவில் ஏற்பட்ட சிறிதளவு தாக்கம் கூட, விலையில் இதுவரை இறக்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக அதிகரித்தே உள்ளது.



பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்ட பொழுதிலும் கனடிய மக்கள் வீட்டில் இருக்கும் பெறுமதியைப் பாவித்து பணத்தை எடுத்து கொண்டே இருக்கின்றார்கள். 18% கனடியமக்கள், வீட்டைப்பாவித்து கடன் பெற்றுள்ளார்கள். கனடா அளவில் 5,650,000 (5.65 மில்லியன்) பெறுமதியான அடமானக் கடன்கள் உள்ளன.

இந்த வருடத்தில் மட்டும் கனேடியர்கள் $41 பில்லியன் அடமானக் கடன் பெற்றுள்ளார்கள். இந்த பெறுமதியில் $15 பில்லியன் வீட்டின் திருத்த வேலைகளிற்கும், $6 பில்லியன் படிப்பதற்கும், $7.5% பில்லியன் முதலிடுவதற்கு மாக எடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு முக்கியமான சிறந்த விடயமாகக் கருதுவது 35% மான அடமானக் கடன் வைத்திருப்பவர்கள் மேலதிகமாக அடமானக் கடனைச் செலுத்தியுள்ளார்கள்.

5.65 மில்லியன் அடமானக்கடன் வைத்திருப்பவர்களில் கிட்டத்தட்ட 6% ஆனவர்களே, வட்டிவீதம் 1% வரை அதிகரித்தால் சிரமப்படுவார்கள் எனத் தெரிய வருகின்றது. இந்த அறிக்கைகளின்படி, 1.5% வரை வட்டிவீத அதிகரிப்பு பெரியளவான பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்க முடியாது. கனடிய மக்கள் ஓரளவு கவனமாகவே தமது கடனைப்பெறுவதாகவும், நிதி நிறுவனங்களும் மிகவும் கடுமையான விதிமுறைகளே அடமானக் கடனை பெறுவதற்கு விதித்துள்ளது.

## இந்த அறிக்கையின் முடிவிலிருந்து சில தகவல்கள்

- 84 வீதமான அடமானக்கடன் வைத்திருப்பவர்கள் மாதாந்த கொடுப்பனவை $300 வரை அதிகரிக்க கூடியளவு தகமை கொண்டுள்ளார்கள்.
- 89 வீதமான வீட்டு உரிமையாளர்களின் வீட்டில் குறைந்தது, வீட்டு பெறுமதியில் 10% வரையான Equity உள்ளது. அதாவது வீட்டின் விலைக்கும், அடமானத் தொகைக்கும் இடையில் 10% காணப்படுகின்றது. உதாரணமாக வீட்டு விலை $400,000 ஆயின் அடமானக்கடன் $360,000 ஆகும்.
- 80 வீதமான வீட்டில் 20% ஆன Equity காணப்படுகின்றது.
- மொத்தமாக கணக்கு பார்த்தால் நாடாளவில் அடமானக் கடன் வைத்திருக்கும் வீடுகளில் 50% ஆன Equity காணப்படுகின்றது.
- இப்பொழுது காணப்படும் குறைந்தளவு கனடிய வட்டிவீத சூழ்நிலையிலும்,

a) 66% ஆனவர்கள் 5 வருட முடிய / மாறாத (Closed Mortgage) அடமானக்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 330**

HomeLife GTA Realty Inc., Brokerage

HOMELIFE HIGHER STANDARDS

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng
(Broker/Owner)

HOUSE FOR SALE
AURORA 628,000



BAYVIEW & SPRINGFARM
4 Bedrooms,Walkout bsmt
5 Washrooms, double garage
Ceramic floor, Hardwood floor
Stove, dishwasher,exhaust fan,
All included. Over 3000 sq.feet.

HOUSE FOR SALE
MARKHAM $419,000



MARKHAM & STEELES
Newly Painted 4 Bedroom House.
Steps To Ttc Shopping & School,
Double Door Entry,
Direct Door To Garage,
Fully Fenced, Door Opener
With Remote, All Elfs,.

$1200 FOR LEASE



MARKHAM & SHEPPARD
Luxury Condo, Unit 698 Sq Ft + 57 Sq
Open Balcony, 24 Hrs Concierge,
Rec Room, Walk To 24 Hrs Ttc And Mall,
Close To Hwy 401 & Scarborough Town
Centre.

HOUSE FOR SALE
MARKHAM$649,000



MCCOWAN & 16TH AVE
Demand Location
Beautifully Kept, 4 Br Detached On
Corner Unit, 9'. 17' High Front Entrance,
6 Parking Space (Possible). Finished bsmt
with kitchen. Large L-Shaped Cooler Room,
Large Deck, Laundry Room.
2 Fridges, 2 Stoves, Washer, Dryer.

CONO FOR SALE
$219,900



MARKHAM & SHEPPARD
Luxury Condo, Unit 698 Sq Ft + 57 Sq
Open Balcony, 24 Hrs Concierge,
Rec Room, Walk To 24 Hrs Ttc And Mall,
Close To Hwy 401 & Scarborough Town
Centre.

*Independently Owned & Operated

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# வாழத்துடிக்கும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக மீனவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூறினர்.

முதலில் வந்தவர்களுக்கு நெல் வேளாண்மை செய்வதற்கும் குளத்தில் மீன்பிடிப்பவர்களுக்கும் உதவிகள் கிடைத்த போதிலும் பிந்தி வந்தவர்களுக்கு அத்தகைய வாழ்வாதார உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் (நேரப் - NER) வடபகுதிக்கான அவசர மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட ஐயாயிரம் ரூபா பிந்திச் சென்றவர்களுக்குக் கிடைத்துள்ளது. அந்தத் திட்டத்தின் கீழ் பொது இடங்களைத் துப்பரவு செய்யும் வேலைக்காக வழங்கப்படுகின்ற பண உதவியும் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

நேரப் திட்டத்தின் ஐயாயிரம் ரூபா பணக்கொடுப்பனவு எல்லோருக்கும் கிடைக்க வில்லை என்று பாண்டின்குளத்தைச் சேர்ந்த பலரும் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின் வேலைக்கான சம்பளப் பணத்தின் ஒரு பகுதி கொடுப்பனவு மாத்திரம் ஒரு சிலருக்குக் கிடைத்துள்ளது. அநேகமானவர்களுக்கு அதுவும் கிடைக்கவில்லை என்றும் பாண்டியன்குளம் ஊர்வாசிகள் தெரிவித்தனர்.

நெற்செய்கைக்கான உதவி கிடைக்காதவர் கள் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு தமது வாழ்க்கைக்கான ஆதாரத்தைத் தேடிக் கொள்ளலாம் என விரும்புகிறார்கள். ஆனால் அதற்கும் வழியில்லாமல் இருப்பதாகவே பனங்காமத்தைச் சேர்ந்த சிவலோகநாதன் செந்தூரன் கூறுகின்றார்.

'ஒட்டுசுட்டான், விசுவமடு பகுதியில வாட்டர்பம்ப், தெளிகருவி போன்ற விவசாய உபகரணங்கள் தோட்டச் செய்கையாளர் களுக்கு கிடைச்சிருக்கு. வெளிச்சத்திற்காக சோலர் கருவிகளும் குடுபட்டிருக்கு. ஆனா பாண்டியன்குளம், துணுக்காய் பகுதி மக்களுக்கு இந்த உதவிகள் கிடைக்கேல்ல. விவசாயத் தொழிலுக்கு அடிப்படையில தேவையான விவசாய உபகரணங்களை அரசாங்கம் வழங்க வேணும். அதைத் தந்தால் அவரவர் தங்களுக்கு ஏற்ற விதத்தில தொழில் முயற்சியில ஈடுபட வசதி யா இருக்கும். ஆனா அந்த உதவிகள் எங்கட பகுதிக்கு இன்னும் கிடைக்கேல்ல. இந்த உதவிகள எதிர்பார்த்து கனபேர் காத்திருக்கினம்.' என்றார் செந்தூரன்.

பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 80 வீதத்திற்கும் அதிகமான இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் காணிகளுக்குத் திரும்பியிருக்கிறார்கள். உறவினர் நண்பர்களது வீடுகளில் இன்னும் உதிரிகளாகத் தங்கியுள்ள ஒருசிலர் படிப்படியாக மீள்குடியேற்றத்திற்காகத் திரும்பிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படு கின்றது. இங்கு 350 குடும்பங்கள் விதவை களின் குடும்பங்களாகவும், பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களாக வும் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டு இராணுவத்தி னரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 50 பேர் இந்தப் பிரதேசத்தில் ஊருக்குத் திரும்பியிருக்கிறார்கள். இவர்களில் சிலர் இரத்மலானை பாடசாலையில் கல்வி கற்றவர்கள். இவர்களில் சிலர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளார்கள். ஒருசிலர் தொடர்ந்தும் அங்கேயே தமது கல்வியை தொடர்கின்றார் கள். வீடுகளுக்கு வந்துள்ளவர்களுக்குத் தொழில் வாய்ப்பில்லை. அதற்கான உதவிகளும் கிடைக்கவில்லை. அவர்களைக் கவனிப்பதற்கு அரசிடம் திட்டங்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. விடுதலை செய்யப்படாமல் இந்தப் பிரதேசத்சைத் சேர்ந்த பெரும் எண்ணிக்கையானவர்கள் இன்னும் தடுப்பில் இருப்பதாக அவர்களின் உறவினர்கள் நாடாளுமன்றக் குழுவினரிடம் தெரிவித்தார்கள்.

குடும்பப் பொறுப்பை முழுமையாக ஏற்றுள்ள பெண்களுக்குத் தையல் பயிற்சி வழங்குவதற்கென 11 நிலையங்கள் இந்தப் பிரதேசத்தில் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பிரசார காலத்தில் இந்தப் பிரதேசத்து மக்களுக் கென சுமார் 250 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு இந்த 11 நிலையங்களிலும் பெண்களுக்குத் தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆயினும் ஆண்துணையற்ற அனைத்து குடும்பப் பெண்களுமே பயிற்சி பெற்று தையல் தொழிலைத் தமது வாழ்வாதாரத் தொழிலாக நடத்துவது நடைமுறைக்குச் சாத்தியம்தானா என்ற கேள்வியும் அவர்கள் மத்தியில் எழுந்திருப்பதைக் காணமுடிந்தது.

'பாதிக்கப்பட்ட மக்களின் குடும்ப வருமானத்திற்கு கோழி வளர்ப்பு போன்ற பண்ணைத் தொழில்களுக்கான உதவி கிடைச்சா நல்லா இருக்கும். உணவு நிவாரணம் இப்போ கிடைக்குது. அது ஆறு மாதத்தில நிறுத்தப்பட்டுவிடும் என்ற அச்சம் எங்கள் எல்லாரிட்டயும் இருக்கு. மீள்குடியேறுகிறவர்களுக்கு ஆறு மாதத்திற்கு உணவு நிவாரணம் வழங்கப்படும் எண்டு அரசாங்கத்தால தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனா ஆறுமாதம் கடந்த பின்னர் அந்த நிலைமை இல்லை. மாதாமாதம் தீர்மானிக்கப் பட்டுத்தான் நிவாரணம் கொடுபடுது. அதனால் உணவு நிவாரணம் தொடர்ச்சியாகக் கிடைக்குமா என்பது நிச்சயமில்லாம இருக்கு. எந்த நேரத்திலயும் அது நிறுத்தப் படலாம் எண்டுதான் பேச்சு அடிபடுகுது' என்றார் செந்தூரன்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான முதல் மீள்குடியேற்ற நடவடிக்கை துணுக்காய், பாண்டியன்குளம் பகுதிகளிலேயே இடம் பெற்றது. மீள்குடியேற்றத்தில் வந்த பொதுமக்களும், அவர்களை மீளக்குடிய மர்த்திய அதிகாரிகளும் ஒத்துழைத்துச் செயற்பட்டதையடுத்து, இந்தப் பிரதேசத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஏனைய இடங்களிலும் பார்க்க முன்னேற்றகரமானதாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.



மீளக் குடியமர்ந்துள்ள இடம்பெயர்ந்த மக்களுக்க உதவுவதற்காக இந்தப் பிரதேசத்திற்கு இலங்கை வங்கி அதிகாரி களும் சென்றார்கள். நிலைமைகளை ஆராய்ந்தார்கள். மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதார உதவிக்கென 50 ஆயிரம் ரூபா தொடக்கம் தொடக்கம் 2 இலட்சம் ரூபா வரையிலான கடன் வழங்கலாம் என்றார்கள். இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்பு வதற்கு அரச வங்கியொன்று முன் வந்திருப்பதை அந்த மக்கள் ஆவலுடன் வரவேற்றார்கள். ஆயினும், சுயதொழிலில் ஈடுபடுவதற்கும், ஒரு வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அடிப்படையில் தேவையான உபகரணங்களோ பயனுள்ள கருவிகளோ இல்லாத நிலையில் இந்தக் கடனைப் பெற்று நாங்கள் என்ன செய்வது? இதனால் எப்படி பயனடைய முடியும்? என பொதுமக்கள் வினா எழுப்பியுள்ளார்கள்.

'எல்லாவற்றையும் இழந்து வந்திருக்கிறம். எங்களிட்ட எதுவுமே இல்லை. இந்த நிலையில வங்கியில கடனை வாங்கி, தொழில் முயற்சிகளைச் செய்ய முடியாமல் கடனாளியாகி, மேலும் கஸ்டப்பட நாங்கள் விரும்பேல்ல' என அவர்கள் கூறுகின்றார்கள்.

பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் போன்ற பகுதிகளுக்குச் சென்ற நாடாளுமன்றக்குழு அங்கிருந்த திரும்பி பனங்காமம், மூன்று முறிப்பு, இரணை இலுப்பைக்குளம் வழியாக வவுனியா கல்மடுவை வந்தடைந்தது. அங்கிருந்து சாஸ்திரி கூழாங்குளம் ஊடாக வவுனியா நகரத்திற்குத் திரும்பியது.

வன்னிப்பிரதேசத்திற்கும் வவுனியாவிற்கும் இடையிலான இரணை இலுப்பைக்குளம் வீதி கடந்த சில மாதங்களாகப் பொதுமக்களின் பாதுகாப்புக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. காடுபற்றி கிடந்தது வீதி. பல இடங்களில் வீதி மோசமாக இருந்தது. காட்டுப்பாங்கான பகுதிகளில் இந்த வீதியில் யானைகளின் தொல்லை இருப்பதாகச் சொல்கிறார்கள். இருந்தும். இந்த வீதி வழியாக பேருந்து சேவைகள் நடை- பெற்று வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றக் குழுவின் வன்னி விஜயத்திற்கான நான்காவது நாள்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சுற்றிப்பார்ப்பது, போகக் கிடைத்தால், பூனகரி பிரதேசத்தை யும் பார்த்து வருவது என்பதுதான் அன்றைய திட்டம். மனிக்பாம் முகாமில் இருந்த சில முக்கியஸ்தர்கள் மாங்குளம் சந்தியில் வந்து நாடாளுமன்றக் குழுவினரைச் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவி த்திருந்தார்கள். மனிக்பாம் முகாமுக்குத்தான் போக முடியவில்லையே. அங்குள்ளவர்களை முகாமுக்கு வெளியிலாவது சந்திப்போம் என்பது நாடாளுமன்றக் குழுவின் எண்ணம்.

முக்கியமாக முறிகண்டி பிரதேசத்தில் குடியிருப்பு காணி- களை இராணுவம் எடுப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்ட விடயம் தொடர்பாக அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களை மாங்குளத்தில் சந்தித்து விபரம் அறிவது என்பதுதான் இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கம்.

மாங்குளம் நகரம் உயிர்த்துடிப்போடு காலை நேரத்திற்கே உரிய சுறுசுறுப்புடன் காணப்பட்டது. சில வருடங்களுக்கு முன்னர் மாங்குளத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் ஒன்றையடுத்து ஏற்பட்ட கடும் சண்டையின்போது மாங்குளம் அஞ்சல் அலுவலகம் சுக்கு நூறாகிப்போனது. அதன் எச்சமாக அந்தக் கட்டிடத்தின் முன்சுவர் மாத்திரம் மொட்டையாக 'மாங்குளம் அஞ்சல் அலுவலகம்' என்ற எழுத்துக்களுடன் நின்று கொண்டிருந்தது. அந்த எச்சத்தை இப்போது காணவில்லை. வீதி விசாலமாக்கப்பட்டு, சில புதிய அரச கட்டிடங்கள் அந்தப் பகுதியில் முளைத்திருந்தன. அதற்கு எதிரே மாங்குளம் சந்திப்பக்கமாக இடிந்த நிலையில் காணப்பட்ட கிறிஸ்தவ தேவாலயத்தையும் காணவில்லை. இராணுவ முகாம், பொலிஸ் நிலையம் என்பன புதிதாக அமைக்கப்பட்டு அந்தப் பகுதி புதுப்பொலிவு பெற்றிருந்தது. இது மாங்குளம்தானா என அந்தப் பிரதேசத்தை நன்கு அறிந்தவர்கள் சந்தேகத்தோடு வியக்கும் அளவில் அங்கு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

வீதியில் வாகனப்போக்குவரத்து அதிகமாக இருந்தது. பொலிசாரும் இராணுவத்தினரும் உற்சாகமாக கடமையில் ஈடுபட்டிருந்தார்கள். பொலிசார் வாகனங்களை நிறுத்தி அதில் இருந்தவர்களை எங்கே போகிறீர்கள் என கேட்டுக்கொண்டிருந்தார்கள். மிலிட்டரி பொலிசார் வீதியில் நடப்பவற்றைக் கண்காணித்துக்கொண்டிருந்தார்கள்.

அதற்கருகில் இடது பக்கம் ஒரு சிற்றுண்டிச் சாலை. இராணுவத்தினர் நடத்துவதாகச் சொல்லப்பட்டது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் வரையில் முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முகமாலை வரையிலான ஏ9 வீதிப்பகுதியில் ஆங்காங்கே இவ்வாறு இராணுவத்தினரால் நடத்தப்படு கின்ற சிற்றுண்டிச்சாலைகள் இப்போது அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத் திற்குத் தற்போது பெரும் எண்ணிக்கையில் செல்கின்ற பொதுமக்கள் இந்தச் சிற்றுண்டிச் சாலைகளில் உணவருந்தி, களைதீர்ந்து செல்வதற்கு உதவியாக இருக்கின்றதாம்.

இறுதிச் சண்டைக்கு முன்னர் அந்தந்தப் பகுதிகளில் வீதியோரத்தில் வசித்து வந்த கிராமவாசிகளே, உணவு விடுதிகளையும், தேநீர்க்கடைகளையும் நடத்தி வந்தார்கள். ஏ9 வீதியோரத்தில் பல இடங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்துவிட்ட போதிலும், இன்னும் அந்த நிலைமை திரும்பவில்லை.

பேருந்துகளில் வந்தவர்களும், வாகனங்க ளில் பிரயாணம் செய்தவர்களுமாக சிலர் மாங்குளத்தில் இறங்கி, இராணுவ சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள். சிற்றுண்டிச்சாலைக்கு எதிரில் மாங்குளம் சந்தி. இங்கிருந்துதான் ஒட்டுசுட்டானுக்கும், அங்கிருந்து புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு பகுதிகளுக்குச் செல்லும் வீதி பிரிகின்றது. ஒட்டுசுட்டானில் இருந்து நெடுங்கேணிக்கும் இந்த வீதி வழியாகப் போகலாம்.

# அந்த விதை...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

முடியாது. தண்ணீரில் குதித்து எப்படியாவது கரையேற வேண்டும். "நான் மூழ்கிவிட்டால் என்னாவது" என்கிற அச்சம் உங்களுக்கு அவசியமில்லை. இங்கே நாம் உருவாக்கும் நீர்நிலைகளில் இதுவரை யாருமே மூழ்கவில்லை என்பதே உங்களுக்குப் போதுமான ஆதாரம்தானே! நீங்கள் உள்ளே மூழ்கினாலும் அது உங்களை வெளியே தள்ளி விடுகிறது.

ஷாம்பவி மஹாமுத்ரா என்னும் எளிய 21 நிமிடப் பயிற்சியை உங்களுக்குத் தர உங்களுடன் 40-45 மணி நேரங்களை செலவிடுகிறோம். சக்தி சலனக் கிரியை என்ற பெயரில் உண்மையில் 15 நிமிட சூன்ய தியானத்தை உங்களுக்குத் தர ஏறக்குறைய 60 மணி நேரங்களை உங்களுடன் செலவிடுகிறோம். இவையெல்லாம் முக்கியமில்லையென்றால் அவ்வளவு நேரங்களை உங்களுடன் செல விட என்ன அவசியம் எங்களுக்கு?

உங்களுக்கு நான் தந்தவை மூன்று அம்சங்கள். வழிகாட்டுதல், உண்மையான ஈடுபாடு, தீவிரமான செயல்பாடு. இவற்றை நீங்கள் சரியாக செய்து வந்தாலே அனைத்தையும் உள்ளடக்கிய நிலைக்கு உங்களை இவையே கொண்டு செல்லும். இது என் சிந்தனை என்பதாலோ, உங்களுக்கான என் விருப்பம் என்பதாலோ அல்ல. இடுகாடு உலகைப் படைத்தவரின் இயல்பு. படைத்தவரின் விதை உங்களுக்குள்ளேயே இருக்கிறது. அதன் இயல்பை நீங்கள் உணரும்போது வாழ்வின் இன்னொரு நொடியைக் கூட உங்களுக்குத் தராது. படைத்தவனுக்கு உங்களுக்குள் தன் வழியைத் தேட இடந்தராமல், அமைதியையோ, ஆனந்தத்தையோ உணர முடியுமென்று கனவு கூடக் காணாதீர்கள். படைத்தவனின் விதை உங்களுக்குள் முளைக்க அனுமதியுங்கள். அதுவொன்றே வழி.


# தாரணி சட்ட அலுவலகம்

* சட்டத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவம்
* 45 நிமிட நேர இலவச ஆரம்ப ஆலோசனை

- *Real Estate Law* அசையா ஆதன (வீடு, காணி) உரிமைச் சட்டம்.
- *Family Law* குடும்பச் சட்டம்.
- *Wills & Estate* இறுதி விருப்பாவணமும், மரணச் சொத்தும் சட்டம்.
- *Power Of Attorney & Affidavit* தத்துவப் பத்திரம் & சத்தியக்கடதாசி
- *Immigration Law* குடிவரவுச்சட்டம்



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister Solicitor & Notarypublic

**GTA Square**
5215 Finch Avenue East ,
#213
**Tel: 416.291.4900**
**Fax: 416.291.4901**
Email: contact@tharani lawoffice.com


# அவுஸ்திரேலிய...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

## கவசமிடப்பட்ட சம்பியன் கிண்ணம்

இலங்கை - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான ஈ.ஆர்.ஐ. டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் சம்பியனாகும் அணிக்கு பீங்கானினால் (போர்ஸ்லின்) தயாரிக்கப்பட்டு தங்கம் மற்றும் பிளாட்டினத்தால் கவசமிடப்பட்ட சம்பியன் கிண்ணம் பரிசாக வழங்கப்படவுள்ளது. நொவம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் இச்சுற்றுப்போட்டி குறித்த செய்தியாளர் மாநாடு கொழும்பில் நடைபெற்றபோது மேற்படி சம்பியன் கிண்ணம் பகிரங்கப்படுத்தப்பட்டது.

இச்சுற்றுப்போட்டிக்கு என்வயர்மன்ட் ரிசோர்ஸ் இன்வெஸ்ட்மன்ட் குழுமம் (ஈ.ஆர்.ஐ.) பிரதான அனுசரணை வழங்குகிறது. இக்குழுமத்தின் ஓர் அங்கத்துவ நிறுவனமான தங்கொட்டுவ போர்ஸ்லின் நிறுவனத்தால் இச்சம்பியன் கிண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஈ.ஆர்.ஐ. நிறுவனத்தின் தலைவர் லலித் ஹீனகம தெரிவித்தார். பீங்கானினால் தயாரிக்கப்பட்ட இக்கிண்ணம் 24 கரட் தங்கம் மற்றம் பிளாட்டினத்தால் கவசமிடப்பட்டுள்ளது. கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றுக்கு பீங்கானினால் தயாரிக்கப்பட்ட சம்பியன் கிண்ணம் வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கார மேற்கிந்திய அணியின் தலைவர் டெரன் ஷமி ஆகியோரும் இச்செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர்.

ஒருநாள் போட்டிகளுக்கான தரப்படுத்தலில் இலங்கை அணி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ள இத்தருணத்தில் என்வயர்மன்ட் ரிசோர்ஸஸ் இன்வெஸ்ட்மன்ட் போன்ற ஒரு முன்னணி நிறுவனம் இச்சுற்றுப்போட்டிக்கு அனுசரணை வழங்குவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் (இலங்கைக் கிரிக்கெட் சபை) செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார். 2005 ஆம் ஆண்டின் பின்னர் முதல் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மேற்கிந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகளிலும் 5 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நவம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது போட்டி கொழும்பு கெத்தாராம அரங்கில் நவம்பர் 23 திகதி ஆரம்பமாகவுள்ளது. மூன்றாவது டெஸ்ட் போட்டி டிசெம்பர் முதலாம் திகதி முதல் பல்லேகல அரங்கில் நடைபெறவுள்ளது. 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சுற்றுப்போட்டி டிசெம்பர் 9 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. முதல் இரு போட்டிகள் 9, 11 ஆம் திகதிகளில் ஹம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனைய 3 போட்டிகள் 15, 17, 19 ஆம் திகதிகளில் கொழும்பு கெத்தாராம அரங்கில் நடைபெறவுள்ளன. டிசெம்பர் 21 ஆம் திகதி 20 ஓவர் போட்டியொன்றில் இரு அணிகளும் மோதவுள்ளன.

# நிலமாற்று வரி...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

கடனை கொண்டுள்ளார்கள்.

b) 29% ஆனவான மாறுகின்ற (Variable Mortgage) அடமானக்கடனும் (Variable Mortgage)

c) 5% மாறாத மற்றும் மாறுகின்ற வட்டிவீதத்தை கொண்டுள்ள அடமானக் கடனை வைத்துள்ளார்கள்.

**(குறிப்பு - கனடியர்கள் மிகவும் பொறுப்பானர்கள் என்பதனைக் காட்டுகின்றது)**

- 2009 இல் பெற்ற கடனில் 18 வீதமானவர்கள் 25 வருடத்திற்கு குறைந்த காலத்தில் கடனை திருப்பி கொடுக்கும் முறையை (Amortization Period) பெற்றார்கள்.
- 2010 இல் பெற்ற கடனாளர்கள், 22 வீதமானவர்கள் 25 வருடத்திற்கு அதிகமான Amortization Period ஐ பெற்றுள்ளார்கள்.
- கடந்த வருடத்தில் பெற்ற அடமானக்கடனில் 25 வீதமான கடன் மோட்கேஜ் Brokers களினூடாக பெறப்பட்டது. இதே எண்ணிக்கை இவ்வருடம் 40% ஆக அதிகரித்துள்ளது.

### 2010 நவம்பர் 15 இல்

- கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 3%
- முதன்மை வட்டிவீதம் 2.25% (Prime Rate + 0.75%)
- 5வருட வட்டிவீதம் (3.6% - 4%)
- சராசரி வீட்டு விலை கனடா ரீதியில் $346,881 (மே 2010)
- சராசரி வீட்டு விலை GTA இல் $430,802. (Oct. 31, 2010)
- GTA இல் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை Oct. 31, 2010 வரை 75,582.



அண்மையில் Globe & Mail பத்திரிகை 3,000 வாசகர்களிடம் பெற்ற தகவலிலிருந்து

a) அடமானக்கடன்
1. 49% ஆனவர்கள் Closed Mortage வைத்துள்ளனர்.
2. 40% ஆனவர்கள் variable Mortgage வைத்துள்ளார்.

b) வட்டிவீதம் அதிகரிப்பு பற்றி
ஆண்கள் 36% கவலைப்படுகிறார்கள்
பெண்கள் 45% கவலைப்படுகிறார்கள்

c) மிகுதியாக உள்ள அடமானக்கடனின் பெறுமதி
1. 28%... $100,000 ஐ விட குறைவான கடன்கொள்வது
2. 16% $ 299,000 - $499,000
3. 4% .... 499,000 - $699,000
3. 3% $699,0000 ஐ விட அதிகம்


ANG MAINTENANCE SERVICES






**RESIDENTIAL & COMMERCIAL**
**REASONABLE PRICES TO SUIT YOUR BUDGET**
**CALL NOW FOR A FREE ESTIMATE!**

CALL GAJAN
BUS: 416-642-8570
CELL: 647-710-3231

- Carpet Cleaning
- Tile & Grout Cleaning
- Stripping, Buffing, Waxing & Refinishing
- Pressure Washing
- Interior/Exterior Painting

- Plumbing Services
- Electric Home Improvement
- Heating & Air Conditioning Services
- Major Appliance Repairing Services (Dishwasher, Dryer, Range, Refrigerator,

- Licensed, Insured & Bonded
- Low cost additional Services
- No job is too big or

# மனித வாழ்க்கைத்தராதர சுட்டெண் கனடா - 8 ஆம் இடம்

மனிதவாழ்க்கைத்தராதர சுட்டெண் (Human Development Index) எனப்படும் HDI ஐக்கிய நாடுகள் சபையால் வருடாவருடம் கணிக்கப்படும் ஒரு எண் ஆகும். இவ் எண் கணிக்கும் முறையை 1990 இல் ஆரம்பித்து வைத்தவர் பாகிஸ்தானை சேர்ந்த பொருளாதார நிபுணர் Mahbub ul Hag. 1990 ஆம் ஆண்டுவரை நாடுகளின் அபிவிருத்தியை அவற்றின் பொருளாதார வளர்ச்சியில் மட்டும் கணிக்கப்பட்டு வந்ததை மாற்றி மக்களின் வாழ்க்கைத்தராதரத்திலும் சேர்த்து கணிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அவர் இம்முறையை ஆரம்பித்து வைத்தார்.

இம்மனித வாழ்க்கைத்தராதர சுட்டெண் ஐக்கியநாடுகள் சபையில் உறுப்பினர்களாக இருக்கும் 192 நாடுகளில் 169 நாடுகளுக்கு கணிக்கப்படுகிறது. போதிய தரவுகள் இல்லாதபடியால் மற்யை 23 நாடுகளுக்கும் இவ் எண் கணிக்கப்பட முடியாமல் இருக்கிறது. இவ் எண் ஆறு தசம தானங்களில் கணிக்கப்பட்டு மூன்று தசம தானங்களில் எழுதப்படுகிறது. இச்சுட்டெண் 0.000 இற்கும் 1.000 இற்குமிடையில் தான் இருக்கும். உதாரணமாக 2010 ஆம் ஆண்டில் முதலாமிடத்தில் வந்த நோர்வே பெற்றது 0.938 ஆகும். இறுதி இடத்தில் வந்த ஸிம்பாவே பெற்றது 0.140 ஆகும்.

அதிக சுட்டெண்களைப் பெற்ற முதல் 42 நாடுகளும் மிகவும் உயர்ந்த (very high) மனித வாழ்க்கைத்தராதரத்தை உடைய நாடுகள் அல்லது அபிவிருத்த அடைந்த நாடுகள் (Developed Countries) என்று அழைக்கப்படுகின்றன. மற்றைய 127 நாடுகளும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் (Developing Countries) என அழைக்கப்படுகின்றன. இவ் அபிவிருத்தி அடைந்துவரும் 127 நாடுகளும் திரும்பவும் மூன்றுவகையாக பிரிக்கப்படுகின்றன. இந்த 127 நாடுகளில் அதி கூடிய சுட்டெண்களை கொண்ட முதல் 43 நாடுகளும் உயர்ந்த (High) மனித வாழ்க்கை தராதரத்தை உடைய நாடுகளென்றும் அடுத்த 42 நாடுகளும் மத்திய (Medium) மனித வாழ்க்கை தரத்தை உடைய நாடுகள் என்றும் இறுதி 42 நாடுகளும் குறைந்த (Low) மனித வாழ்க்கைத்தராதரத்தை உடைய நாடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இலங்கை (91ஆவது இடம்), இந்தியா (119 ஆம் இடம்) மற்றும் பாகிஸ்தான் (125 ஆம் இடம்) போன்ற நாடுகள் மத்திய மனித வாழ்க்கைத் தராதரத்தை உடைய நாடுகளுக்குள் அடங்குகின்றன. பங்களாதேஷ் (129 ஆம் இடம்), நேபாளம் (138 ஆம் இடம்) மற்றும் ஆப்கானிஸ்தான் (155ஆம் இடம்) போன்ற நாடுகள் குறைந்த மனித வாழ்க்கைத் தராதரத்தையுடைய நாடுகளுக்குள் அடங்குகின்றன.

ஆசிய நாடுகளில் மலேசியா (57 ஆவது இடம்) உயர்ந்த வாழ்க்கைத்தராதரத்தை உடைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும், சிங்கப்பூர் (27 ஆம் இடம்) மிகவும் உயர்ந்த வாழ்க்கைத்தராதரத்தை உடைய அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மனித வாழ்க்கைத்தராதர சுட்டெண்ணை கணிப்பதற்கு ஒரு நாட்டின் மூன்று முக்கிய காரணிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவையாவன: மனிதனின் வாழ்வுக்காலம் (Life Expectancy), கல்வி அறிவு பெறும் வசதிகள் (Access to Knowledge) மற்றும் மொத்த தேசிய வருமானத்தின் சராசரி (Cross National Income Per Capita) ஆகும். இங்கு மிகவும் முக்கியமாக நாங்கள் கவனிக்க வேண்டியது 2010 ஆம் ஆண்டிற்கான இச்சுட்டெண் கணிக்கும் முறையில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதையே. இதனால் ஒரு நாட்டின் 2009 ஆம் ஆண்டிற்கான சுட்டெண்ணையும் அதே நாடு 2010 இல் பெற்ற சுட்டெண்ணையும் ஒப்பிட்டு நோக்க முடியாது.

கனடா 2009இல் 4 ஆம் இடத்திலிருந்து 2010 இல் 8 ஆம் இடத்திற்கு வந்ததால் கனேடிய மக்களின் வாழ்க்கைத்தராதரம் ஒரு வருடத்திற்குள் விழுந்து விட்டதாகவோ அல்லது அமெரிக்கா 2009 இல் 12ஆம் இடத்திலிருந்து 2010 இல் 4ஆம் இடத்திற்கு வந்தால் அமெரிக்க மக்களின் வாழ்க்கைத்தராதரத்தை ஒரு வருடத்தில் உயர்ந்து விட்டதாகவோ கருதமுடியாது.

2009 ஆம் ஆண்டுவரை ஒரு நாட்டின் கல்வி அறிவு பெறும் வசதிகள் அந்த நாட்டிலுள்ள எழுத்தறிவு பெற்ற வயது வந்தவர்களின் (Adult Literacy) எண்ணிக்கையை கொண்டு ஒரு சூத்திரத்தின் மூலம் கணிக்கப்பட்டது. ஆனால் 2010 இல் ஒரு நாட்டின் கல்வி அறிவு பெறும் வசதிகள் அந்த நாட்டின் மாணவர்கள் பாடசாலை செல்லும் காலத்தை (Expected Years of Schooling) கொண்டு ஒரு புதிய சூத்திரம் மூலம் கணிக்கப்பட்டது. இவ்வாறே மற்றைய இரண்டு முக்கிய காரணிகள் கணிக்கும் சூத்திரத்திலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் மனித வாழ்க்கைத்தராதர முன்னேற்றத்தை (அல்லது வீழ்ச்சியை) மனித வாழ்க்கைத்தராதர சுட்டெண் மூலம் ஒப்பிட வேண்டும் என்றால் அவ்வெண் கணிக்கும் முறை எப்போதும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும். இதைக் கருத்திற்கொண்டு கனடாவினதும் மற்றும் அமெரிக்காவினதும் மனித வாழ்க்கைத் தராதர சுட்டெண்ணை 2010 இல் கணிக்கப்பட்ட முறையை உபயோகித்து 1980, 1985, 1990, 1995, 2000, 2005, 2010 ஆம் ஆண்டுகளுக்கு கணித்து பார்க்கப்பட்டது. கனடாவின் சுட்டெண் முறையே 0.789, 0.821, 0.845, 0.857, 0.867, 0.880 மற்றும் 0.888 ஆகவும் அமெரிக்காவின் சுட்டெண் முறையே 0.810, 0.842, 0.857, 0.873, 0.893, 0.895 மற்றும் 0.902 ஆகவும் இருந்தது. இது இந்த நாடுகளில் ஏற்பட்ட ஒரு சீரான வாழ்க்கைத் தராதர முன்னேற்றத்தை காட்டுகிறது. இதிலிருந்து கனேடிய மக்களின் வாழ்க்கைத்தராதரம் ஒரு வருடத்தில் வீழ்ச்சி அடையவில்லை என்பதும் (4இலிருந்து 8இடம்) அமெரிக்க மக்களின் வாழ்க்கைதராதரம் ஒருவருடத்தில் அபரித வளர்ச்சியை அடையவில்லை (12இல் இருந்து 4ஆம் இடம்) என்பதும் தெளிவாக தெரிகின்றது.



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# கற்றறிந்த...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

நிராகரித்திருக்கின்றன.

யுத்தம் முடிந்துவிட்ட போதிலும், யுத்தப் பிரதேசங்களில் இருந்து யுத்தம் நடைபெற்ற வேளை பொதுமக்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டு, அந்தப் பிரதேசங்கள் இராணுவத்தினரின் முழுமையான கட்டுப் பாட்டினுள் வைக்கப்பட்டிருந்தது. இப்போது இடம்பெயர்ந்த பொதுமக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. ஆயினும் அந்தப் பிரதேசங்களை, அரசாங்கம் யுத்தகாலத்தைப் போலவே, இன்னும் முழுமையான இராணுவ கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கின்றது. இதனால் அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் இயல்பான சமூக வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மீள்குடியேற்றப் பிரதேசங்களில் நவீன வசதிகளுடன் கூடிய இராணுவ முகாம்கள், இராணுவ பயிற்சித் தளங்கள், இராணுவ வெற்றியைக் குறிக்கும் நினைவுச் சின்னங்கள் என்பன பல அமைக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் விடுதலைப்புலிகளின் நினைவுச் சின்னங்கள், அவர்களின் மாவீரர் துயிலும் இல்லங்கள் என்பன அடையாளமே இல்லாத வகையில் திட்டமிட்ட வகையில் துடைத்து அழிக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் கடைசியாக வவுனியா ஈச்சங்குளத்தில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்டு அந்த இடத்தில் இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மீள்குடியேற்றப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை அங்கேயே குடும்பங்களுடன் வசிப்பதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் இராணுவ குடியிருப்புக் கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் பெருமளவான காணிகள் இராணுவத்தினரால் எடுக்கப்பட்டிருக் கின்றன. இதனால், இந்தப் பகுதிகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் தமது கிராமங்களை இழந்துள்ளார்கள்.

இத்தகைய இராணுவ ஆக்கிரமிப்பிற்கு அதிகம் பேசப்பட்ட முறிகண்டி பிரதேசம் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது. முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அமைந்துள்ள இந்தப் பகுதியில் 4011 ஏக்கர், பொதுமக்கள் குடியிருந்த மக்கள் குடியிருப்பு காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

இதுமட்டுமல்லாமல், பௌத்த விகாரை-களை அமைப்பது, பாரிய புத்தர் சிலைகளை நிறுவுவது, ஏ9 வீதியின் இரு மருங்கிலும் யாழ்ப்பாணத்திற்கு உல்லாசப் பயணம் மேற்கொள்கின்ற பல்லாயிரக்கணக்கான உள்ளூர் உல்லாசப் பயணிகள் ஆறி இருந்து செல்வதற்கு, சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய தரிப்பிடங்கள், பொதுமக்களின் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இதையும் விட உல்லாசப் பயணிகளுக்கான ஸ்டார் ஹோட்டல்கள் பாணியிலான ஹோட்டல்களும் வவுனியா முறிகண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் முறிகண்டி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டல் கட்டிமுடிக்கப்பட்டு திறந்து வியாபார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியா சிவன்கோவிலுக்கு அருகில் தனியாருக்குச் சொந்தமான காணியில் அந்தக் காணி உரிமையாளரே அரசாங்கத்தின் தூண்டுதலில் பெரிய ஹோட்டல் ஒன்றை நிர்மாணித்து வருகின்றார். இந்தப் பிரதேசத்தில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கி வந்த மகேஸ்வரலிங்கம் மாஸ்டர் என்பவருடைய காணியிலேயே இந்த ஹோட்டல் அவருடைய மருமகனின் பொறுப்பில் கட்டப்பட்டு வருகின்றது.



இவ்வாறான இராணுவத்தினருடைய பிரசன்னம், பல்வேறு வடிவங்களிலான நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட சிங்கள மற்றும் ஆக்கிரமிப்பு குடியேற்றம் என்பன வடக்கில் மட்டுமல்லாமல் கிழக்கிலும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவற்றைச் சுட்டிக்காட்டி, வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற சிங்களக் குடியேற்ற முயற்சிகள் அபாயகர மான விடயமாக அமைந்துவிடும் என எச்சரிக்கை செய்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் மக்கள் தொகையினை மாற்றக்கூடிய வகையில் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு முயற்சிக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள் ளது. இது அரசாங்கத்தின் மறைமுகமான ஆதரவுடன் மேற்கொள்ளப்படுகின்ற புதுவித மான அபாயகரமான விடயமாக இருக்கின்றது. இதன் மூலம் இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களின் பாரம்பரிய சம்பிரதாயங்களை மாற்றுவதற்கு முயற்சிக் கப்படுகின்றதா என்ற சந்தேகம் வலுவாக எழுந்துள்ளது. இத்தகைய முயற்சிகள் தவிர்க்கப்பட வேண்டும் என அண்மையில் கர்தினாலாக திருநிலைப் படுத்தப்பட்டுள்ள மல்கம் ரஞ்சித் ஆண்டகை நல்லிணக்க ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

(மிகுதி அடுத்த இதழில்)




முழுநாள் கிண்டர்கார்ட்டன்

ஆன்டரியோவில் இந்த இலையுதிர்காலத்தில் தொடங்குகிறது



செப்டம்பரில் ஆன்டரியோவில் கிட்டத்தட்ட 600 பள்ளிகள் முழுநாள் கிண்டர்கார்ட்டன் வகுப்புகளை வழங்கத் தொடங்கின. அடுத்த ஆண்டு 200க்கு மேற்பட்ட பள்ளிகள் இதில் சேரும். வகுப்பில் ஒரு ஆசிரியரும் ஒரு இளங்குழந்தைப்பருவக் கல்வியளிப்பவரும் இணைந்து செயல்படுவார்கள்; கற்றலை விளையாட்டுடன் இணைக்கும் புதிய பாடத்திட்டம் ஒன்று இருக்கும். குழந்தைகள் மொழி, கணிதம் ஆகியவை உள்பட எல்லா விஷயங்களிலும் வளர்ச்சி பெறவும் அவர்கள் கிரேடு 1 மற்றும் அதற்குப் பின்வருவனவற்றுக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளவும் இது உதவும். இந்தத் திட்டத்தைப் பற்றி மேலும் அறிவதற்கும் 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் உங்கள் பகுதியில் எந்தப் பள்ளிகள் அதை வழங்கும் என்று அறிவதற்கும் எங்கள் வலைத்தளத்திற்கு வாருங்கள்.

ontario.ca/kindergarten

ஆன்டரியோ மாகாண அரசின் நிதி அனுசரணையுடன்

Ontario

நாள்: 11.02.2010, வியாழக்கிழமை
இடம்: ஒட்டாவா சிவன் கோயில்
நிகழ்வு: திரு. குமார் புனிதவேல் அவர்களின் Saiva Saints என்ற நூலின் அறிமுக விழா

# பெருஞ்செல்வம்

அறிமுகவுரை

வணக்கத்துக்குரிய அந்தணப் பெருமக்களே!
நண்பர் குமார் புனிதவேல் அவர்களே!
ஆலய நிருவாக சபை உறுப்பினர்களே!
புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களே!
நல்ல கலைநிகழ்ச்சிகளை வழங்கிய வளரும் கலைச் செல்வர்களே!
அன்பர்களே!

முதலிலே எல்லாம் வல்ல சிவபெருமானுக்குக் கோயில் கண்டுள்ள ஒட்டாவா சைவத் தமிழ் மக்களைச் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன். சிவராத்திரி நாளிலே திருத் தொண்டர்கள் பற்றிய இந்த நூலைச் சிவனடியார் முன்னிலையில் அறிமுகஞ் செய்து வைத்து உரை நிகழ்த்தக் கிடைத்த வாய்ப்பைத் தந்தருளிய திருவருளைச் சிந்தையில் இருத்தி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் பற்றி நீங்கள் அறிவீர்கள். ஆனாலும் அதன் அருமை பெருமையை எத்தனைபேர் உணர்ந்திருக்கிறீர்களோ அறியேன். சைவப் பெருமக்களின் செம்மையான வாழ்க்கைமுறைக்கும் தெய்வ தரிசனத்துக்கும் இன்றியமையாத புராணங்கள் மூன்று - கந்தபுராணம், திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம். இவற்றுள் சேக்கிழார் பெருமான் செய்த திருத்தொண்டர் புராணம் வித்தியாசமானது. இது 63 நாயன்மார்களின் வாழ்க்கையைச் சொல்லுகின்ற ஒரு வரலாற்று நூல்.

நாயன்மார்களின் வரலாற்றை வரைகையில் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்கள் கட்டிக்காத்த விழுமியங்களையும் சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் சேக்கிழார் பெருமான் விளக்குகின்றார். அந்த வகையில் இது ஒரு மக்கள் காப்பியமாக விளங்குகிறது, அன்பர்களே!

திருத்தொண்டர் புராணம் எமக்குக் கிடைத்த பெருஞ் செல்வம். சிவபெருமான்தானே உலகத்துச் செல்வங்களுக்கு உரியவன். அவனுடைய கழல்களை வணங்குவதுதானே பெரிய செல்வம். ஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார்:

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.



இத்தகைய செல்வனை ஏத்திய திருத்தொண்டர்களும் செல்வர்தாம் - திருவருட் செல்வர்கள். சைவத்தைத் தொண்டுச் சமயமாக்கிய பெருமைக்குரிவர்கள். தொண்டர்கள் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்களாக இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர்கள். அன்பைப் பெருக்கி அமைதியை நிலைநாட்டியவர்கள். அகில காரணர் தாள் பணிவார்கள்தாம் அகில லோகமும் ஆளக் கடவர் என்று மக்கள் அவர்களைப் போற்றினர். அதனால் அவர்களுடைய வரலாறுகள் நிலைபெறலாயின.

இத்தகைய பெருமைக்குரிய நமது முன்னோர்களை இளஞ் சந்ததியினருக்கு அறிமுகஞ் செய்வதும் அவர்களது ஆன்மிக வழிகளில் எமது குழந்தைகளை இட்டுச்செல்வதும் எமது கடமை. இந்தக் கடமையை, பொறுப்பை நன்கு உணர்ந்தவர் திரு. குமார் புனிதவேல் அவர்கள்.

இவர் ஒரு பொறியில் வல்லாளர். தாயகத்திலும் நைஜீரியாவிலும் பொறியிய லாளராகப் பதவி வகித்தவர். பொதுவாக விஞ்ஞானிகள் தாங்கள் கற்ற துறையிலேயே ஆர்வம் உள்ளவராக இருப்பர். ஒருசிலர் இதற்கு விதிவிலக்காகவும் உள்ளனர். கனடா வில் டாக்டர் இலம்போதரன், டாக்டர் சண் சண்முகவடிவேல், குமார் புனிதவேல் போன்றவர் எமது சமயத்தை வளர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டிவருகிறார்கள்.

குமார் புனிதவேல் பெயருக்கேற்பப் புனிதமான ஒரு பணியைச் செய்திருக்கிறார். புனிதமான திருத்தொண்டர்களின் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியிருக்கின்றார். நான் பிள்ளைகளுக்குத் தமிழ் படிப்பியுங்கள், தமிழ்ப் படிப்பியுங்கள் என்று அடிக்கடி மேடைகளில் பெற்றோருக்குச் சொல்லிவந்ததினால், இப்பொழுதும் சொல்லிவருவதனால் ஆங்கிலப் பாவிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆங்கிலத்தில் சங்கீதம் கற்பிக்கின்ற இன்னிசைவேந்தர் சுந்தரலிங்கம் அவர்களுடன் ஒரு விவாதமே நடத்தி யிருக்கிறேன். தமிழிலே சொல்லிக் கொடுத்தால் பிள்ளைகள் இசையுடன் தமிழையும் கற்பார்களல்லவா என்று அவரைக் கேட்டபொழுது அவர் சொன்னார், தமிழிலே சொல்லிக் கொடுத்தால் தமிழும் இல்லை, சங்கீதமும் இல்லை என்றார்.

அதற்கான காரணத்தை எண்ணிலும் பார்க்க நன்கு விளங்கிக் கொண்டவர் குமார் புனிதவேல் அவர்கள். கனடியத் தமிழ்க் குழந்தைகளுக்கு நன்கு வரக்கூடிய ஆங்கிலத்தில் சமயக் கருத்துக்களைப் புகட்டுவது எளிது என்பதை உணர்ந்து ஆங்கிலத்தில் 63 நாயன்மார்களின் வரலாற்றை எழுதித் தந்திருக்கிறார். அதற்கான தகைமைகளும் அவரிடத்தில் நிறையவே இருப்பதை நான் நன்கு அறிவேன். அவர் ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசவும் எழுதவும் வல்லவர். அத்துடன் சமயத்திலும் நல்ல அறிவு வாய்ந்தவர்.

இத்தகைய தகைமையாளரால் எழுதப்பட்டிருக்கும் இந்த அரிய நூலை நீங்கள் எல்லோரும் வாங்கிப் பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நூலின் தனிச் சிறப்பு என்னவென்றால், இது இளஞ் சந்ததியினருக்கென்றே எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் மட்டத்துக்குரிய ஆங்கில நடையில் அழகாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதனாலே, மிகவும் முக்கியமாக, உங்கள் பிள்ளைகளுக்கு இதனைக் கொடுத்து அவர்களைப் படிக்க வைக்க வேண்டும். அவர்களோடு நீங்களும் படிக்க வேண்டும். அவர்களுக்கு எழக்கூடிய சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். புனிதவேல் அவர்களே ஆங்காங்கு விளக்கம் கொடுத்திருக்கின்றார். அது இந்த நூலின் மற்றுமொரு சிறப்பு.

இத்தகைய பயனுள்ள பணியைச் செய்த புனிதவேல் அவர்களைப் பாராட்டுகின்றேன். அவர் தொடர்ந்து சைவத்தை இந்த மண்ணிலே வளர்க்கும் பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்நூலின் அறிமுகவிழாவைச் சிறப்புற நடத்திய ஆலய நிருவாக சபைக்கும் நன்றியைக் கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்.



கவிஞர் வி. கந்தவனம்



# இதயத்தின் இறுதி விருப்பம்

## ஓடும் நீர் உறைவதில்லை 12 இரண்டாம் பாகம்

நமது பிறப்பில் இருந்து இறப்புவரை எண்ணிலடங்காத அளவு விருப்பங்களும் விருப்பம் இன்மைகளும் இடம்பெறுகின்றன. ஒவ்வொருவரது விருப்பு வெறுப்புக்கள் அவரவர் வாழ்வியல் நிலைக்கு ஏற்ப மாறுபடுகின்றன. ஒருவரது விருப்பம் இன்னொருவருக்கு விருப்பமாகவோ அல்லது விருப்பமற்றதாகவோ அமையலாம். விருப்பம் எனும்போது ஒருவருக்கு ஒன்றின் மீது உள்ள பற்று, ஆசை அல்லது ஆர்வம் என்று பொருள் கொள்ளலாம். இந்த விருப்பங்களில் பல எமது உளவியல், உடலியல் மாற்றங்களுக்கேற்ப மறைந்து விடுவனவாக அல்லது மாறுபாடு உடையன-வாக அமைகின்றன.

ஒரு காலத்தில் சில விருப்பங்கள் நிலையானவையாக எமக்குத்தோன்றும். அவை நமது இறுதிநாள்வரை நீடிப்பனவாகக் கூட எண்ணுவதுண்டு. இப்படிப்பட்ட விருப்பங்களில் பல வாழ்க்கை மாற்றங்களால், வயது முதிர்ச்சியால், உடல்நிலை மாற்றத்தால் கைவிடப்பட வேண்டியனவாக அமைவதுமுண்டு. உதாரணமாக இனிப்புப்பண்டம் ஒரு குழந்தைக்கு மிகவும் விருப்பமானது. இந்த விருப்பம் சிலருக்கு குழந்தைப் பருவத்தில் இருந்து நீண்டகாலத்திற்கு விருப்பம் உடையதாக அமையும். காலப்போக்கில் உடலியல் மாற்றங்கள் காரணமாக அந்த விருப்பத்தைக் கைவிட வேண்டிய நிர்பந்தங்களும் ஏற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் சில விருப்பங்கள் மனதளவில் இருந்தாலும் செயற்பாட்டளவில் நடைமுறைப்படுத்த முடியாத நிலையும் ஏற்படுகின்றது. விருப்பங்கள் நிலையற்றனவாயும் அவை கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப மாற்றப்பட வேண்டியனவாகவும் அல்லது கைவிடப்பட வேண்டியனவாகவும் அமைவதால் எந்த விருப்பம் இறுதிவரை இதயத்தில் இறுக்கமாக்கப்பட்டு எடுத்துச் செல்லப் படுகின்றது என்ற கேள்விக்கு விளக்கம் தருவதே இக்கட்டுரையின் நோக்கம். இறுதிவரை இணைபிரியாது இதயத்துடன் பிணைக்கப்பட்டு இதயத்தின் துடிப்புகள் ஓய்கின்றபொழுது வெளிப் படுத்தப்படும் இந்த விருப்பத்தை நாம் வாழும் நாட்களில் உணர்பவர்களாகவே அல்லது உடல் தென்பாக இருந்த போது அதற்கான பிரதி உபகாரத்தைச் செய்பவர் களாகவோ நடந்து கொள்வதில்லை என்பது தான் வாழ்வியல் அனுபவங்களில் பெரும்பாலானவர்களது வெளிப்பாடு.

இதயத்தின் இறுதிவிருப்பம் மண்ணாசை யாக இருக்கமுடியாது. மண்ணின் மீது அளவுகடந்த ஆசைகளை வாழும்போது கொண்டவர்கள், இந்த மண்ணின் மீதான அளவுகடந்த பற்றுதலால் உற்றம் உறவு அத்தனையையும் பகைத்தவர்கள், உடம்பு தென்பாக இருந்த போது மற்றவர்களின் மண்ணையும் தனதாக்கி மார்புதட்டியவர்கள் அனைவரும் மண்ணால் ஆளப்பட்டு ஆறடிக்குள் அடங்கிப் போய்விடுவார்கள். மண்ணாசையில்லாதவர்களும் மண்ணால் ஆளப்பட்டு ஆறடிக்குள் அடக்கப்படுகிறார் கள். ஆனால் இரண்டுக்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடுண்டு. மற்றவர்களின் மண்ணைச் சொந்தமாக்கியவனுக்கு ஆறடி ஒரு தண்டனை. மாறாக மண்ணாசை யற்றவனுக்கு அந்த ஆறடி பூமித்தாயின் ஓர் அன்பளிப்பு. எனவே மண்ணாசை அல்லது மண்ணின் மீதான விருப்பம் ஒருவரது இறுதிவிருப்பமாக இருப்பதில்லை. உயிர் ஊசலாடும் போது, இறுதி மூச்சுக்களை நெருங்கும்போது ஒருவரும் எத்தனை ஏக்கர்காணி தன்னிடம் இருக்கிறது என்றோ அல்லது என்னிடம் ஒரு அடி நிலம் கூட இல்லையே என்றோ எண்ணுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் ஒருவரது உயிர்பிரிவதற்கு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் போது மண்ணாசையாக இருக்குமோ என்று எண்ணி சிறிதளவு மண்ணைக் கரைத்து வாயில் ஊற்றுவார்கள். அந்த மனிதனோ அதையும் குடித்துவிட்டு தொடர்ந்தும் மூச்சை இழுத்துக்கொண்டே இருப்பார். அதாவது மண்ணின் மீதான ஆசையல்ல ஓர் இதயத்தின் இறுதி விருப்பம்.

மண்ணாசையைவிடப் பொன்னாசை கொண்டவர்கள் கோடானகோடி. திரைகடல் ஓடிய் திரவியம் தேடுபவர்களும், திருட்டுத் தனமாகத் திரவியம் தேடுபவர்களும் இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ்பவர்களுமாக பலதரப்பட்டவர்கள் வாழ்கின்றார்கள். காசு, சொத்து என்று கட்டுக்கடங்காத ஆசைகளால் கால்நடை-களாக மாறுபவர்களும், காசேதான் கடவுள் என்று கும்பிடுபோடுபவர்களும் உள்ளம் சாக்கடையானாலும் உடுப்பும் எடுப்பும் உயர்ந்தவனாக்கட்டும் என்று போலியாக வாழ்பவர்களும் இறுதியில் ஒவ்வொரு மூச்சும் இறுக்கமானதாகவும் பரா-மானதாகவும் உணரப்படும்போது இந்தப் பொன்னாசை கூடப் பொடிப்பொடியாகி விடும். மண்ணைக் குடித்துவிட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவருக்கு சிறிதளவு பொன்னைக் கரைத்து வாயில் ஊற்றுவார்கள். அதையும் குடித்து விட்டு இன்னும் போராடிக் கொண்டிருப்பார். எனவே இதயத்தின் இறுதி விருப்பம் மண்ணும் இல்லை, பொன்னும் இல்லை. அப்படியாயின் எது இதயத்தின் இறுதி விருப்பம்?

தாயகத்தில் திருவிழாக்காலங்கள் என்றால் தனிச்சிறப்பு. குறிப்பாக என்னைக் கவர்பவை இசைக்கச்சேரிகள், மேளச்சமாக்கள், வில்லுப்பாட்டுகள் எனப்பல. ஒருமுறை வில்லுப்பாட்டுக் குழுவினரின் நிகழ்ச்சி யொன்றில் கூறப்பட்ட விடயம் ஒன்று அப்போது சிரிப்பதற்கு வாய்ப்பைக் கொடுத்திருந்தாலும் வாழ்வியலில் அடுத்தடுத்த நிலைகளுக்கு நாம் செல்லுகின்ற பொழுது நம்மைச் சிந்திக்க வைப்பதாகவும் அமைகின்றது. அந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் ஒருவருக்கு மூன்று ஆசைகள் உண்டு என்றும் அது மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்றும் கூறி, இதில் பெண்ணாசை தான் இறுதிவரை நிற்பது என்று ஒரு கதை கூறப்பட்டது. அதாவது ஒருவர் தனது இறுதிக் கட்டத்தை அண்மித்துவிட்டார். உயிர் பிரிவதற்குப் போராடிக் கொண்டிருக்கிறது. மண்ணைக் கரைத்து ஊற்றினார்கள். பொன்னைக் கரைத்து ஊற்றினார்கள். பலன் கிடைக்கவில்லை. உடனே மூத்தமகன் தந்தையின் காதில் மெதுவாக கேட்டானாம்; அப்பு! "உங்கட கடைசி ஆசை என்னவென்று". உடனே அப்பு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோரையும் தனக்கருகே வரச்சொல்லி விட்டு மூச்சை இன்னும் அழுத்தமாக இழுத்துக் கொண்டிருந்தார். "அப்பு என்னவென்று சொல்லுங்கோ" என்று சுற்றி நின்றவர்கள் அழுதுகொண்டு கேட்டபோது தடுமாறிய குரலில் அப்பு சொன்னாராம் "ஆச்சியை கண்கலங்கவிடாதீங்கோ" என்று. அத்துடன் அப்புவின் உயிர் பிரிந்துவிட்டது. இங்கே பெண்ணாசை தான் இதயத்தின் இறுதிவிருப்பம் என்று அந்த நிகழ்ச்சியில் நகைச்சுவையாகக் கூறப்பட்டது. சிறுவனாக இருந்தபோது நானும் சிரித்துவிட்டுப்போய் விட்டேன். இப்போது சிந்தித்துப்பார்க்கும் போது அதற்கானவிடை கிடைக்கிறது. பெண்ணாசையல்ல அது. தன்னை நேசித்த அந்த ஜீவனின் உள்ளம்தான் அது. ஆமாம். ஒரு இதயத்தின் இறுதிவிருப்பம் தன்னை நேசித்தவர்களும் தன்னால் நேசிக்கப்பட்டவர்களும் நன்றாக வாழ வேண்டும் என்பது தான். அப்புவின் விடயத்தில் அவர் மனைவி. மற்றவர்கள் விடயத்தில் எவராகவும் இருக்கலாம். நிச்சயமாக அவர்கள் தூய மனத்துடன் நேசித்தவர்களாகவும், நேசிக்கப்பட்டவர் களாகவும் இருப்பார்கள். இந்த உண்மை நிலையானது. எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் ஒருவரது இறுதிவார்த்தை எனது பெயராக இருந்ததாகக் கூறினார்கள். உண்மையில் அவரை என் குருவாக நான் நேசித்தேன். அவரும் என்னை ஒரு சிஷ்யனாக நேசித்தார்.

ஆம் வாசகர்களே! நிச்சயமாக நமது உள்ளத்தின் இறுதிவிருப்பம் நம்மை நேசித்தவர்களும் நம்மால் நேசிக்கப்பட்டவர்களும் தான். ஒரு குடும்பம் என்ற வரையறைக்குள் அப்புவுக்கு ஆச்சியும் ஆச்சிக்கு அப்புவாகவும் அமையாலம். ஆனால் குடும்பம் என்ற நிலைக்கு அப்பால் எத்தனையோ ஆன்மாக்கள் நேசிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளார்கள். அன்பையும் ஆதரவையும் எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். தூய உள்ளத்துடன் தேடிப்போனால் எண்ணற்றவர்கள் உங்களால் நேசிக்கப்படுவார்கள். அவர்களது இதயத்தின் இறுதி விருப்பம் நீங்களாக இருப்பீர்கள். இது என்றும் அழியாத உண்மை.



**KG Master-kgmaster@rogers.com**

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

மஹாராஜியின் உரைகள்



On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219

# தேசிய மாவீரர் தினம் (National Heroes day)

## நவம்பர் 11ஆம் திகதி

ஐரோப்பிய நாடுகளிலே 1900 ஆண்டளவில் ஒரு உத்வேகம் ஏற்பட்டது. ஏற்கனவே பலரும் பிரயாணங்களை மேற்கொண்டு நாடுபிடித்து தம்மை வல்லரசுகளாக்கிக் கொள்ள விழைந்தனர். பிரிட்டன் போன்ற நாடுகளைப் பார்த்துத் தாமும் சென்று நாடுகளைப் பிடித்து தம் ஆசைகளையும் தணிக்க வேண்டும் என்பதே.

நாடுகளைப் பிடித்து அங்கு, தம் அதிகாரத்தைச் செலுத்தவும் தமது பொருள்களை விற்பனை செய்யவும் அங்குள்ள செல்வங்களைத் தம் நாட்டுக்குக் கொண்டு வந்து செல்வச் செழிப்பை உண்டாக்கவும் ஏதுவான போட்டிகள். இதன் காரணமாக ஜேர்மனிக்கும் பிரான்சுக்கும் இடையே தகராறு தொடங்கியது. ஒருவரை ஒருவர் நம்பாத காரணத்தினால் ஐரோப்பிய நாடுகள் கூட்டுச் சேரத் தொடங்கின.

பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் ஒரு கூட்டாகவும் ஜேர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா - ஹங்கேரி இன்னொரு கூட்டாகவும் மல்லுக்கட்டத் தொடங்கின.

ஆஸ்திரியா - ஹங்கேரி பகுதியில் அமைந்திருந்த சாறாஜீவோ எனும் நகரத்துக்கு ஒரு காலத்தில் ஆஸ்திரியாவுக்கு சக்கரவர்த்தியாக வரக்கூடிய வேர்டினன்ட் பிரபுவும் மனைவி சோபியாவும் 1914 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதி ஞாயிறு காலை வந்திருந்தனர். கோலாகலமான வரவேற்பு. தீவிரவாதிகள் யாரோ ஒரு குண்டு எறியவே அது லிமோசின் காரின் மேற்கூரையை தட்டிப் போனதே தவிர ஒருவருக்கும் ஆபத்தில்லை. அப்படியிருந்தும் ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. பிரபு மிகக் கோபத்தோடு "ஒரு அலுவலுமில்லாது பொழுது போக்குக்காக வந்த எனக்கு குண்டெறிந்தமை சகிக்க முடியாது; ஆத்திரமடைய வைக்கிறது" என்று சொன்னார். ஆனால் நகரமேயரும் பொலீஸ் அத்தியட்சகரும் இனி ஆபத்தொன்றும் இல்லை என்று உறுதி கூறி கவர்னரின் மாளிகையை நோக்கிச் சென்றனர்.

சிறிது நேரத்தில் 19வயது மதிக்கத்தக்க கவ்றிலோ என்னும் தீவிரவாதி காருள் குதித்து தன் கைத்துப்பாக்கியால் இருதடவை சுட்டு விட்டுத் தப்பி ஓட முயற்சித்தான். பிரபுவின் தொண்டையில் குண்டு பாய்ந்தது. அடுத்த குண்டு சோபியாவின் வயிற்றில் பாய்ந்தது. அதனைக் கண்ட பிரபு "சோபியா சாகாதே! உயிரோடிருந்து எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்று" என்று சொன்னபடியே மயங்கி விட்டார். ஆனால் இருவருமே உயிர் நீத்தனர். பயங்கரவாதிகள் தாமும் தற்கொலை செய்து கொள்வது என நினைத்தாலும், அது சம்பந்தமாக ஆறுபேர் பிடிபட்டனர். இவர்கள் சேர்பியாவைச் சேர்ந்த 'கறுப்புக்கரங்கள்' எனும் குழுவைச் சேர்ந்தவர்கள். இந்த செய்தி சேர்பியாவின் தலைநகரத்துக்கு 'இரு குதிரைகளும் நல்ல விலைக்குப் போயின' என்ற சங்கேதக் குறியுடன் அறியப்பட்டது. (மூவர் தூக்கிலிடப்பட்டனர். மற்றைய மூவரும் சிறையிலே இறந்து விட்டனர்.). ஒரு பெரிய போரொன்றின் அத்திவாரம் அன்றுதான் ஆரம்பிக்கப்பட்டது என்பதை அவர்கள் அறியவில்லை. சேர்பியா, ஆஸ்திரியா மாகாணமான பொஸ்னியாவின் எல்லையில் அமைந்திருக்கும் ஒரு தேசம். சேர்பியர்கள் பலரின் பரம்பரை பொஸ்னியாவிலும் இருந்தன. ஆஸ்திரியாவுக்கு அடிமைப்படாமலே தாம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதே அவர்களின் இலட்சியம். 'சேர்பியாவுடன் எங்களைச் சேரவிடு அல்லது சாகவிடு' என்பதே பொஸ்னியாவின் கோரிக்கை.




1900 ஆண்டளவில் விஞ்ஞான வளர்ச்சியும் கைத்தொழிற்புரட்சியும் இராணுவபலமும் நாடுகளிடையே போட்டியை விதைத்து வல்லரசு ஆசையை வருவித்தது. பிரான்ஸ் வடமேற்கு ஆபிரிக்காவின் பெரும் நிலப்பரப்பையும் தூரகிழக்கு நாடுகளையும் தமதாக்கியுள்ளது. ரஷ்யா, வடஐரோப்பா வின் பெரும்பகுதியையும் ஆசியாவின் பெரும்பகுதியையும் கொண்டிருந்தது. பிரித்தானியாவே மிக அதிகமான சாம்ராஜ்யத்தை உள்ளடக்கியிருந்தது. கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, இலங்கை பர்மா, மலாயா, தென்ஆபிரிக்கா, கிழக்கிந்திய, மேற்கிந்திய நாடுகள் பசுபிக் சமுத்திரத்தில் சில தீவுகள் ஆபிரிக்காவின் சில பிரதேசங்கள் என்பன. இப்படியாக ஒவ்வொரு நாட்டுக்கும் வருமா னம் கிடையாது விடினும் இரண்டொரு தீவுகளாயினும் சொந்தமாக இருந்தன.

1914 ஆண்டு ஆவணி மாதம் வரை இத்தாலியைத் தவிர அனைத்து நேசநாடு களும், முப்பெருங்கூட்டும் போரை நடத்தத் தொடங்கி விட்டனர். கனடாவைப் பொறுத்த வரையில் அது பொதுநலவாய நாடுகளில் அங்கம் வகிப்பதாலும் பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்துள் அடங்குவதாலும் பிரித்தானியாவுக் காக போரில் ஈடுபடவேண்டி நேர்ந்தது.

கனடாவின் குடியேற்றவாசிகளும் பிரான்சையும் பிரிட்டனையும் சேர்ந்தவர் களாயிருந்தனர். அதனால் உணர்வு பூர்வமாகவே போருக்கு ஆயத்தமாயினர். பிரஞ்சியரும், பிரித்தானியரும் மொன்றியலில் கை கோர்த்து பிரஞ்சிய தேசிய கீதத்தைப்பாடி வலம் வந்தனர். ஜேர்மனிக்கு எதிராக முதல் அனுப்பப்பட்ட படையே 20,000 கனேடியர்கள். காலத்துக்குக் காலம் 400,000 போர் வீரர்கள் போயிருந்தனர்.

முதலில் போனவர்கள் ஜேர்மனியின் எல்லையில் சிறிது தூரத்தில் பங்கர்கள் அமைத்துத் தங்கியிருந்தனர். 3½ கிலோ மீற்றர் தொலைவில் ஜேர்மனியரின் பாசறை அமைந்து விமானத் தாக்குதல் நடந்து கொண்டிருந்தது. திடீரென முன்னெப்போதும் கேள்விப்பட்டிராத நச்சுவாயுக்குண்டு கனேடியர் பக்கம் வீசப்படவே, மூச்சுத்திணறி பலர் மாண்டனர். தொடர்ந்து எரிவாயுக் குண்டும் ஜேர்மனியரால் பயன்படுத்தப் பட்டது. அது தோல் எல்லாவற்றையும் எரித்து அழுகி தப்பியவர்களையும் கொன்றது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியை பிரயோகிக்கும் இடமாக முதலாம் மகாயுத்தம் செயற்பட்டது. தரையும் ஆகாயமும் மட்டுமல்ல நீர் மூழ்கிக் கப்பல்களோடு கடலிலும் யுத்தம். பல யுத்தமுனைகளிலும் கனடியர் இழந்தும் வென்றும் இறுதிப்போர் நடைபெற்றது. விம்றிட்ஜ் போரைக் கனேடியர் வென்றெடுத்தனர்.

இந்தப் போரில் மட்டும் இழப்பு மிக அதிகமாக இருந்தது. 60,661 பேர் மாண்டுபோக, 13,000 பேர் காயமடைந்தனர். கப்பல், நீர்மூழ்கி போன்ற பொருட்சேமும் சொல்லும் தரமன்று.

இந்த முதலாம் உலகப் போரில் மாத்திரம் 100,000 போர்வீரர் ஈடுபடுத்தப்பட்டு நான்கு முனைகளில் ஆக்ரோஷத்தோடு போராடி பலரைச் சிறைப்பிடித்தாலும் 11,000 போர்வீரர் மாண்டனர். போர் முடிந்த காலத்தில் பல விருதுகளைப் பெற்றாலும் ஜேர்மனி சரணாகதியடையவே யுத்தம் முற்றுப் பெற்றது. பல நிபந்தனை களால் நாடிழப்புகள் நடந்தாலும் புதிய வரைபடம் கீறுமளவுக்கு எல்லைகள் சுருங்கியும் விரிந்தும் மாற்றங்கள் ஏற்பட்டன.

அப்போது கனடாவுக்கு ஆகாயப்படை இல்லாது விடினும் 25,000 வீரர் பிரித்தானிய ஆகாயப்படையில் சேரச் சென்றார்கள். கடற்படை இருந்தது. சிறிதும் பெரிதுமான 600 நீர்மூழ்கிக் கப்பல்கள், இதைவிட பிரித்தானிய கடற்படையில் கப்பல்களோடு கப்பலோட்டிகளும் சேர்ந்திருந்தார்கள்.

மொத்தத்தில் 60,660 வீரர் அறியப்பட்ட இழப்புகளாகக் மாண்டு போயினர். 173,000 பேர் படுகாயப்பட்டோர். காணாமல் போனவர்களின் கணக்கு நிச்சயப்படுத்த முடியவில்லை. ஆயினும் ஜேர்மனி சரணாகதி அடைந்தது. மேலதிக சேதம் ஏற்படாத வகையில் 1918 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி 11 மணிக்கு போரின் முடிவு ஏற்பட்டதால், கனடா இத்தினத்தை தேசிய தினமாக பிரகடனம் செய்துள்ளது. அத்தினம் 11 மணிக்கு பாட சாலைகள், ஆலயங்கள் மற்றும் வேலையிடங்கள் எங்கும் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்து, தேசிய உணர்வை ஊட்டக் கூடிய செயல்களில் இறங்குவர். ஆலயங்களில் மணி ஒலிக்கும் வேர்ஸ்செயில்ஸ் நகரில் உடன்படிக்கை ஒன்றில் எழுதப்பட்டு சம்பந்தப்பட்ட நாடுகள் எல்லாம் கையொப்பமிட்டு ஜேர்மனி என்னென்ன நட்டஈடு கட்ட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. இவற்றை சாதிக்க வேண்டிய பணிக்காக ஒத்துழைப்புக் குழு (League Of Nation) செயற்படத்தொடங்கியது.



வள்ளிநாயகி இராமலிங்கம்

$100 $250 $100

## Ontario Vegetarian Food Bank
## Thanks giving food drive 2010

$100 $100

www.vegfoodbank.ca

$250 $250

தொண்டர் சேவை மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பு - Employment

**WESTERN & HWY 7 WOODBRIDGE**
3 Bedroom house for rent with bsmt. Close to all facilities. Avail. December 01, 2010. Rent $1400 + utilities.
தொடர்புகளுக்கு: 416.991.8365

**BRIMLEY & FINCH**
3 + 1 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
416.450.9152 / 416.297.9152

**647MARKHAM & LAWRENCE**
Newly renovated 3 Bedroom house for rent. Rent $975 + 60% utilities per month. Laundry, cable & parking. Avail. December 01, 2010
தொடர்புகளுக்கு: 416.836.0074

**NEILSON & MCLEVIN**
3 Bedroom மேல்தளத்திலும், 1 bedroom bsmt இலும் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately.
416.282.2668 / 416.799.0352

## ஆடைகள் விற்பனைக்கு

**தீபாவளி மலிவு விற்பனை**
நவீன Design wedding sarees, heavy work sarees, calcutta designer sarees, hand work banarasi sarees, masakali hand work patiala, fancy hand work choli set. என பல வகையான தெரிவுகள். ஒரு முறை நேரில் வந்து பார்த்தால் புரியும்.
416.400.7398 / 905.201.6791

## தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

## JOB JOB JOB

**WARDEN & 16THAVE**
வயோதிப பெண்மணி ஒருவரை பராமரிப்பதற்கு ஒரு பெண் தேவை. தொடர்புகளுக்கு: 905.927.9258 (after 6:00pm) / 416.292.9966

**MARKHAM & STEELES**
தமிழ் உணவகம் (Restaurant) ஒன்றுக்கு parttime / fulltime cook தேவை. அனுபவமுள்ளவர்கள் வரவேற்கத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.618.5028

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238

## Computer Services

All your computer needs. Pickup, delivery Available.
தொடர்புகளுக்கு: 416.558.1799

## SALE SALE SALE

Brand new watersoftner installed $1300. 10 Years warranty. Washer & dryer for sale. Liverpool. 2 years old. $500 only.
தொடர்புகளுக்கு: 416.671.5025

**பிள்ளைகள், முதியோர் பராமரிப்பு**
பாடசாலைக்கு பிள்ளைகளை கூட்டிச்செல்லுதல், பெற்றோர் வேலை முடிந்து வரும் வரை பிள்ளைகளைப் பராமரித்தல் (Day care), Tuition, முதியோர்களை பராமரித்தல் போன்றவற்றிற்கு அழையுங்கள். **சிற்றுண்டி வகைகள்** orderக்கு செய்து delivery செய்யப்படும்.
தொடர்புகளுக்கு: 416.731.2833

## மணமகள் தேவை

Toronto வில் CGA, MBA முடித்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.808.9142

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் உரும்பராயை சேர்ந்த கனடாவில் வேலை செய்யும் அவிட்ட நட்சத்திரம், 41 வயது மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் மணமகள் தேவை. யாழ்பாணத்தில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: ***416.431.1345***

## மணமகள் தேவை

உயர்குல சைவவேளாளர் 30 வயதுடைய ஆண் தாதி கிறிஸ்தவ மணமகனுக்கு கிறிஸ்தவ மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 647.342.3313

## TUTORING

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS. ***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 24, 26



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 270

(1) $9x^2 - 28x + 3 = 0$ $(9x - 1)(x - 3) = 0$ $x = 1/9$, $x = 3$

Hence $\text{Log}_3 x + \text{Log}_3 s = \text{Log}_3{}^{rs}$ $= \text{Log}3(1/9)^3$

(2) $\text{Log}_{10} 3/2 + \text{Log}_{10} 4/3 + \text{Log}_{10} 5/4 + .................. + \text{Log}_{10} 200/199$

$= \text{Log}_{10}(3/2 \times 4/3 \times 5/4 \times .................... 200/199)$

$= \text{Log}_{10}\ 200/2$ $= \text{Log}_{10} 100 = 2$

(3) I.H.S = 1 - $\text{Sin}^2 0/1 + \text{Cos}\varnothing/\text{Sin}\ \varnothing - \text{C}\ ^2\varnothing/1 + \text{Sin}\varnothing/\text{Cos}\varnothing$

$=1 - \text{Sin}^2\varnothing/\text{Sin}\varnothing + \text{Cos}\varnothing\ /\ \text{Sin}\varnothing\ \text{Cos}20/\text{Cos}\varnothing + \text{Sin}\varnothing/\text{Cos}\varnothing$

$=1 - \text{Sin}^3\varnothing + \text{Cos}^3\varnothing/\text{Sin}\ \varnothing + \text{Cos}\varnothing$

$=1 - (\text{Sin}\varnothing + \text{Cos}\varnothing)\ (\text{Sin}20 - \text{Sin}0\ \text{Cos} + \text{Cos}20)/\ \text{Sin}\varnothing\text{Coso}\varnothing$

$=1 - (1 - \text{Sin}\varnothing\text{Cos}\varnothing)$

$=\text{Sin}\varnothing\ \ \text{Cos}\varnothing = \text{Sin}2\varnothing/2$

(4) Slope of AB = 0 - (-4)/3 - 2 = 4 $f(x) = x^3 - 3x^2$ $f(x) = 3x^2 - 6x$

Let $x_1$ be the point the sloes are equal. Then $3x_1 2 - 6x_1 = 4$

$3x_1 2 - 6x_1 - 4 = 0$ $x_1 = 6 \pm \sqrt{36} + 48/6$

$= 6 \pm 84/6$ $= 6 \pm 9.17/6$

$=15.17/6$ or $- 3.17/6$ $=2.53$ 0r $- 0.5^3$

(5) X + 2Y + Z = -3 ...............(1) X + 7Y + 4Z = -13............(2)

2X - Y -2 = 4 (1)+(3) X + Y = 1 .............(4)

(2) + (4 - (3): 9X + 3Y = 3, ie. 3X + Y =1

let X = T, Y = 1 - 3t and from (1) t + 2 - 6t + z = -3

z = -5 + 5t

The three planes intersect in a line with equation r = (0, 1, -5) + t (1, -3, 5)

### Tutorial 271 Questions

(1) Solve the system of Equahons $3^{2x - y} = 27$

$2^{3X + 2Y} = 32$ (For Gr. 11 & 12)

(2) If $F(x) = 49^{3x}$ and $g(x) = \text{Log}_7{}^{x.}$ What is the value of g [f (100)] (For Gr. 11)

(3) Prove the identity Sin 4x/1 - cos 4x = Cos - 1/2 csc x sec x (Gr. 11& 12)

(4) P devides Q R in the ratio 10: -3

(a) Express O P as a line as combination of O Q and O R

(b) Express as O R as a linear combination of O P and O Q

(5) Find the scalas equation of the line which is Perpendicular$^r$ to the line 2x - 3y + 18 = 0 and has the same y - intercept as the line (x, y) = (0, 1) + t (-3, 4) (Gr. 11 & 12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

**Contact: 647.340.9490 / 647.831.0363**

**Tutoring**

Gr.1-12; College & University

* English * French * Math * Physics * Chemistry * Biology *

❖ Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas

❖ Strict Adherence to Ontario Curriculum

❖ Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

GTA Tutors

Ph: (647) 705 0725

Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates

BUR OAK NEIGHBOURHOOD TUTORING - Tutoring over 20 years

Telephone: (905) 927 -2411 Operating at the location over 5 years

Bur Oak Ave (NW of McCowan & 16th Ave) Markham

Days of operation: Weekdays: 3 to10pm Weekends: 8am to 4pm

| Grade 5 to 8 | Grade 9 to 12 | $65per Month |
|---|---|---|
| Mathematics | Calculus & Vectors | (For up to grade 8, straight 1.5 per week) |
| Social Studies/Science | Physics | Learns one or more subjects with a single fee |
| Geography/History | Advanced Functions/Functions | Accepting New Students |
| English & Home Work | General Science / Math | Call: Week days 9am to 9pm Weekends 10am to 4pm |

## கூந்தன் குளம்...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

பெறுபவர்கள், கேரளப் பலகலைக்கழக மாணவர்கள், தென் மாவட்டங்களில் தாவர வியல், விலங்கியல் படிப்பவர்கள், ஆசிரியர் பயிற்சி பெறுபவர்களுக்கும், இங்கு வரும் பறவைகளைப் பற்றி கற்றுத் தந்திருக்கிறார். இவரின் சூழலியல் ஆர்வம் பறவைகளோடு நின்றுவிடவில்லை. கூந்தன்குளத்தைச் சுற்றி ஆயிரம் மரங்களுக்கு மேல் நட்டு, வளர்த்திருக்கும் பெருமை அவரையும் அவருடைய மனைவி வள்ளித்தாயையும் சேரும். பறவைகள் மீதான இவரது ஈடுபாட்டைப் பாராட்டி 'பறவை மனிதன்' என்ற பட்டத்தை அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்று வழங்கியுள்ளது.



நாம் செல்லும் போது பால்பாண்டி இருந்தால், பறவைகளை மட்டுமல்ல, அவற்றின் வாழ்வியல் ரகசியங்களையும் அவர் நமக்குக் காண்பிப்பார்.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

திருநெல்வேலியில் இருந்து சுமார் 38 கி.மீ. தொலைவில் நாங்குனேரி அருகே உள்ளது கூந்தன்குளம் சரணாலயம். அரை மணி நேர பயணம். ஆனால், கிராமம் என்பதால் போதுமான பஸ் வசதி கிடையாது. பேருந்துக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டும். அந்த நேரத்தில் பக்கத்திலுள்ள மரக்கூட்டையோ, பறவைகளையோ ரசிப்பவர்களுக்கு பிரச்சினை இல்லை. இங்கு சுற்றுலா பயணிகள் தங்க வனத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

**CARS FOR BUY & SELL**

Toyota Camry, Corolla, Honda, Honda Civic கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. 2005 Corolla, 1995 Honda விற்பனைக்கு உண்டு. அத்துடன் **Van Service** உம் உண்டு. அழையுங்கள் : **416.625.4146**

**WANTED**

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition. Raj - **647.269.6552**

**TUITION CLASSES**

Maths, English, Science, Art & Tamil.
Gr. 8 Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

FREE DIAGNOSE **Computer Repair**

PC Repair, Upgrade,Virus Removal, Antivirus, Firewall,Data Recovery, Etc...

கணனி சார்ந்த திருத்த மற்றும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் - Niruthan N

Laptops & Desktops Accessories, Used Computers ,Scanning, printing, Etc...

Pro-Win Computer Ser. Ltd
919 Ellesmere Road, Suite # 302
Scarborough, M1P 2W7.
Tp: 647-3405568/ 416-8797489
(Kennedy & Ellesmere)

**LOCKER ROOMS AVAILABLE**

5 அடி, 6 அடி, 7 அடி அளவுள்ள தனித்தனியான Locker Rooms ஸ்காபரோவில் வாடகைக்கு உண்டு. குறைந்த காலம் அல்லது நீண்ட காலத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: Email: vlambaram@sympatico.ca


மேலும் பக்கங்கள் 24, 25


**Commercial Basement For Rent**

**MARKHAM & ELLESMERE**

Smart Baby's Diaper Factory Outlet இன் நில அறை வாடகைக்கு உண்டு. Very Busy area.
தொடர்புகளுக்கு: **416.499.8517 / 647.321.7575**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


# கூந்தன் குளம்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

பறவைகள் உலகின் ஆச்சரியங்கள் மிக ஆர்வமூட்டுபவை. அதுவும் இயற்கையின் ரகசியங்களை அவை புரிந்து, அதனோடு இயைந்து வாழும் தன்மை பிரமிப்பூட்டுபவை. கூந்தன்குளத்தில் இரவு மழை பெய்தால், அடுத்த நாள் காலையில் வெளிநாட்டு பறவைகளைப் பார்க்கலாம். இந்த நாள் கூந்தன்குளத்தில் மழை பெய்யும் எனக் கணக்கிட்டு, அதற்கும் ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்பே அவை தங்கள் பயணத்தைத் தொடங்கியிருந்தால்தான் இது சாத்தியம்.

கூழைக்கடா, மஞ்சள்மூக்கு நாரை, அரிவாள் மூக்கன், நீர்க்காகம் போன்றவற்றின் இரையான மீன் கூந்தன்குளம் ஏரியில் அதிகம் இருக்கிறது. பூநாரை எனப்படும் பிளமிங்கோ நுண்ணுயிரிகளை உண்ணும். அதுவும் இங்கு கிடைக்கிறது. 10,000க்கும் மேல் வரும் பிண்டெய்ல்டக், கார்கெனி, பார் ஹெடட் கூஸ் போன்றவற்றுக்கு தானியமே முக்கிய உணவு.

பறவைகளை சுற்றுலா பயணிகள் சிரமமில்லாமல் பார்வையிட வசதியாக வனத்துறையினரால் உயர்ந்த கோபுரமும் பைனாகுலர்களும் குளத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளன. அழகான டவர். பறவைகளின் அழகிய அணிவகுப்பையும் மீன்களை கொத்திக்கொண்டு போகும் காட்சிகளையும் இங்கிருந்து பார்த்து ரசிக்கலாம். தமிழகத்தின் பல ஊர்களில் இருந்தும் பள்ளி, கல்லூரி மாணவர்களை பறவைகளை காண்பதற்கு இங்கே அழைத்து வருகிறார்கள். இவர்கள் தவிர ஏராளமான சுற்றுலா பயணிகளும் ஆராய்ச்சி மாணவிகளும் வருவார்கள். பறவைகள் பற்றி ஆய்வு செய்யும் ஆராய்ச்சி மாணவர்களுக்காக இங்கு தனியாக தங்குமிடமும் உள்ளது.

கூந்தன்குளத்தில் மற்றுமொரு சிறப்பு இங்கு வலசை வரும் பறவைகளுக்கும் ஊர் மக்களுக்கும் உள்ள உறவு. பல கிலோமீட்டர் கடந்து வீடு தேடி விருந்துக்கு வரும் பறவைகளை கூந்தன்குளம் மக்கள் உபசரிக்கும் விதம் உலக மக்களுக்கெல்லாம் ஒரு பாடம்! பல தலைமுறையாக இந்த கிராமத்து மக்கள் காட்டும் பிரியமும், சுற்றுப்பகுதி குளங்களில் கிடைக்கும் தாராளமான உணவுமே பறவைகள் இங்கு அதிக அளவில் வருவதற்குக் காரணமாக அமைந்துள்ளன என்கிறார்கள் பறவையியலாளர்கள். பறவைகள் வந்தால் மழை பெய்யும், ஊர் செழிப்பாக இருக்கும் என்பது இந்த ஊரில் நிலவும் பாரம்பரிய நம்பிக்கை. பறவைகளுக்கு ஐந்தறிவுதான் என்றாலும் முகத்தைப் பார்த்து, நடந்து கொள்ளும் முறையைப் பார்த்து மனிதர்களைப் புரிந்து கொள்ளும் என இவர்கள் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு வீட்டுக்கு அருகேயும் உள்ள மரங்களில் பறவைகள் கூடு கட்டி, குஞ்சு பொரித்து, வளர்ந்து பெரிதாகும் வரை இந்த மக்கள் அவற்றை எந்த வகையிலும் தொந்தரவு செய்வதில்லை. மேலும், அவற்றின் எச்சம் தினமும் கீழே விழுகிறது. மழை பெய்தால் மிக மோசமான வாடை அடிக்கும். பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட முடியாது. கீழே முள் விழுந்து கிடக்கும். தினசரி கூட்டி சுத்தப்படுத்த வேண்டும். இவற்றை இக்கிராம மக்கள் தொந்தரவாக நினைப்பதில்லை. கிராமத்துக்குள் மட்டும் 4000க்கும் மேற்பட்ட கூடுகள் இருக்கின்றன.




குளத்தில் தண்ணீர் எடுக்கவோ, குளிக்கவோ, ஆடு மாடு குடிக்கவோ அனுமதி கிடையாது. இதனால் நீர் பச்சை நிறத்தில் இருக்கும். மேலும் குளத்து மீனை யாரும் ஏலம் எடுப்பதில்லை. பறவைகளுக்கு தண்ணீர் வேண்டுமென்றால் பாசனத்துக்கு விடப்படும் தண்ணீரைக்கூட அடைத்து விடுவார்கள். அந்த அளவு இம்மக்கள் பறவைகளை நேசிக்கிறார்கள். தை, அமாவாசைக்குப் பறவைகள் கூடுகட்டவில்லை என்றால், விளைச்சல் இல்லாமல் விதைத்த பயிர்கள் எல்லாம் தீய்ந்து போய்விடும், அறுவடை கிடையாது என்பது ஊர் நம்பிக்கை. “15 வருடங்களுக்கு முன் ஒரு முறை பறவைகள் வரவில்லை. அந்த ஆண்டு குடிக்கக்கூட தண்ணீர் இல்லை” என்கிறார்கள். தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளின் போதுகூட பறவைகளை அச்சுறுத்தும் பட்டாசுகள் மற்றும் வெடிப்பொருள்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

அனைத்திலும் உச்சமாக பால் பாண்டி என்ற இக்கிராமத்து தனிமனிதரின் பங்களிப்பு பிரமிப்பூட்டுவது. கூந்தன்குளம் மக்களுக்கு வலசை வரும் பறவைகள் விருந்தாளிகள் என்றால், பால்பாண்டிக்கு பெற்றெடுத்த பிள்ளைகள்!

கூந்தன்குளத்தில் 37 வருஷம் தலையாரியாக இருந்தவர் பால்பாண்டியின் அப்பா. பறவைகள், வீட்டு விலங்குகளின் மீது அவருக்கு தனி ஆர்வம் உண்டு. கிளி, மைனா, பூனை, கீரிப்பிள்ளை என நிறைய பறவைகளையும் விலங்குகளையும் வளர்த்திருக்கிறார். இந்தச் சூழலில் வளர்ந்து பால்பாண்டிக்கும் பறவைகளின் மீது ஆர்வம் ஏற்பட காரணமாக ஆகியுள்ளது.

எட்டாவது வகுப்பு படிக்கும்போதே மரங்களில் இருந்து தவறி விழுந்த பறவைக் குஞ்சுகளை எடுத்து வளர்ப்பது, மரக்கன்றுகள் நட்டுப் பராமரிக்கும் பழக்கத்தைத் தொடங்கிவிட்டார். அக்காலத்திலேயே, இந்தியப் பறவை உலகின் தந்தை எனப்படும் சலிம் அலி, கூந்தன்குளம் வந்தபோது பால்பாண்டியைப் பாராட்டி பேசியுள்ளார். கூந்தங்குளத்துக்கு பறவைகளைப் பார்க்க வந்த பேராசிரியர் டாக்டர் சைலாஷ், பால்பாண்டியின் ஆர்வத்தை பார்த்துவிட்டு, ‘பறவை நண்பன்’ என்று பாராட்டினார்.

தினசரி காலை 5 மணிக்கே சரணாலயத்துக்குப் புறப்பட்டு விடுகிறார், பால்பாண்டி. புதிய பறவைகள் வந்திருக்கின்றனவா, கூடு இருக்கிறதா, எந்தப் பறவையாவது புதிதாக முட்டையிட்டிருக்கிறதா, அடை காக்கிறதா என்று 11 மணி வரை பறவைகளை நோக்குகிறார். ஒரு குஞ்சு முட்டையில இருந்து வெளியே வருவதற்கான காலம், ரோமம் முளைக்க ஆகும் காலம், கண் திறக்க ஆகும் காலம் உட்பட கூந்தன்குளம் பறவைகள் தொடர்பான எல்லா தகவல்களும் பால்பாண்டியின் விரல்நுனியில் உள்ளன.

வாப்விங்க், சாண்ட் கிரோஸ், குரோசர், லார்க், புளோவர் தரையில் கூடு கட்டும். அதை வெறும் கண்களால் எளிதில் பார்க்க முடியாது. அவ்வளவு சிறியதாகவும் சுற்றுப்புறத்துடன் ஒன்றி, மறைந்தும் இருக்கும். இவற்றையும் கண்டுபிடித்துச் சொல்கிறார், பால்பாண்டி. கால் ஒடிந்து, உடலில் காயம்பட்ட இளம் குஞ்சுகளை எடுத்து காப்பாற்றி குணமாக்கும் அரிய பணியை கிட்டத்தட்ட முப்பத்தைந்து வருடங்களாக செய்துவருகிறார். ஐ.எப்.எஸ். போன்ற வனத்துறையில் பயிற்சி

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

# புறந்தள்ளப்படும் பாலஸ்தீனியம்

## கான்சில் திரையிடப்பட்ட *Atom Egoyan* இருபடங்கள்

## *Adoration*

(love given with deep affection) Canada

சபின் என்ற பிரெஞ்ச் மொழி ஆசிரியை பிரெஞ்ச் பத்திரிகையில் இருந்து ஒரு செய்தித் துண்டை தனது வகுப்பில் வாசிக்கின்றார். ஒரு பயங்கரவாதி தனது காதலியின் பயணப்பையில் குண்டு ஒன்றை வைக்கின்றான். காதலியின் வயிற்றில் கரு வளர்கின்றது. இக்குண்டை ஒரு இஸ்ரேலிய அதிகாரி கண்டு பிடித்து விடுகின்றார். இதனை ஒரு கதையாக மாற்ற வேண்டும். இதுவே மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி.

சிமன் தனது மாமாவுடன் வாழ்ந்து வருகின்றான். அவனது கற்பனை வித்தியாசமானது. இவனது தாயும் தந்தையும் ஒரு கார் விபத்தில் இறந்து விடுகின்றனர். தந்தையே இந்த விபத்திற்கு காரணம் என சிமனின் பாட்டனார் கூறுகின்றார். செய்தியில் பயங்கரவாதியாக தனது தந்தையையும், காதலியாக தனது தாயையும் வயிற்றில் வளரும் கருவாக தன்னையும் கற்பனை செய்து கொள்கின்றான். இறுதியில் பயங்கர வாதி வெற்றி பெறுவதாகவும் தானும் தாயும் இறப்பதாக முடிக்கின்றான். வகுப்பறையில் சிமன் இதனை வாசிக்கின்றான். மாணவர்கள் கலந்துரையாடுகின்றார்கள். இதனை சபின் என்ற பிரெஞ்ச் ஆசிரியை பிரெஞ்ச் ... ன் மாமனார். இருவரும் உரையாடும் பொழுது பல விடயங்கள் வெளிப்படுகின்றன. சமினின் முன்னாள் கணவனின் மகனே சிமன். குடும்ப பெயரை வைத்து இதனை கண்டு பிடித்த சபின் திட்டமிட்டே சிமனை இவ்வாறான கட்டுரையை எழுதச் செய்கின்றார். ஏன்?

இப்படத்தில் வரும் ஒரு முக்கிய பாத்திரம் இணையத்தளங்கள். இவரது படங்கள் அனைத்திலும் நவீன தொழில் நுட்பம் ஒரு பாத்திரமாக மிளிரும். இப்படத்திலும் அது வெளிப்படுகின்றது. மற்றொரு முக்கிய பாத்திரமான சமின் பாத்திரத்தில் இவரது மனைவி நடித்துள்ளார்.

இயக்குனர் ஒரு வகுப்பறைக்குச் சென்று இவ்வாறு நடைபெற்றிருப்பின் உங்களது கருத்துக்கள் எவ்வாறு இருக்கும் எனக் கேட்டு சேகரித்த தகவல்களை மையமாகக் கொண்டே திரைக்கதை அமைக்கப்பட்டுள் ளது. இப்படத்தில் வரும் சிமனின் பாத்திரத்தை இயக்குனர் சரியானது என வாதிடுகின்றார். இளம் மாணவர்கள் சரித்திர சம்பவங்களில் தங்களது விம்பத்தை தேடுகின்றார்கள். அதன் வெளிப்பாடே சிமன் என்ற பாத்திரம்.

கூறாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இயக்குனரும் மதம் பற்றியும், பயங்கரவாதம் பற்றியும் தனது பாத்திரங்களுக்கூடாக வெளிப்படுத்துகின்றார். பயங்கரவாதிகள் மனிதத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்பது இயக்குனரின் குற்றச்சாட்டு. இரண்டாவதாக மதம். இப்படத்தில் சபின் சிமனின் வீட்டில் உள்ள கிறிஸ்மஸ் அலங்காரத்தை பார்த்து கேள்வி கேட்கின்றார். "Jews killed Christ" இது சபினின் குற்றச்சாட்டு



இது பற்றி இயக்குனர் நியு யோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி முக்கியமானது. Every religion is culpable for having inflicted horrors in the name of God. It's all the same God, yet it's based on these various interpretations and it gets down to these fights about the children's crusade. There is such a litany of things that can be brought up against them and for, but ultimately the only thing that has any relevance is whether or not these things lead to a sense of personal dignity and value. I'm suspicious of any collective use of religion because it seems to systematically, at some level, oppress people. It's not because of the way the individual has treated it, but rather, the people who control the orthodoxy."



வகுப்பறையில் தனது வாழ்க்கையில் நடை-பெற்ற உண்மைச் சம்பவம் என விபரிக்கின்றான். அதற்கு சாட்சியாக சிமனின் பாட்டனார் உனது தந்தை ஒரு கொலையா-ளி என்று சொன்னதை ஒரு வீடியோ கமாராவில் படமெடுத்து வகுப்பறையில் காட்டுகின்றான். இச்சம்பவம் மாணவர்களால் இணையத்தளங்களுக்கு சென்று விடுகின்றது. இணையத் தளங்களில் சுடச்சுட பிந்திய செய்தியாக பரவலடைகின்றது. பத்திரிகை செய்தியில் உள்ள உண்மைச் சம்பவத்தில் குறிப்பிட்ட விமானத்தில் பறந்த பலர் இணையத்தளத்தில் வந்து பயங்கரவாதத் துக்கு எதிராக கதைக்கின்றனர். இச்சம்பவம் நடைபெற்றிருப்பின் சுமார் 300 பேர் கொல்லப்பட்டிருப்பார்கள். சிமனின் தாய் ரிச்சல். தந்தை சாமி.

இக்கதை இணையத் தளங்கள் மூலம் பிரபல்யமடைய சபின் வேலையில் இருந்து நீக்கப்படுகின்றார். சபின் வழக்கறிஞரை நாடுகின்றாள். வழக்கறிஞர்கள் கைவிரித்து விட வெளியில் வரும் இவளுக்கு மற்றொரு அதிர்ச்சி. இவளது காரை வெளியேற்ற முயற்சிக்கின்றனர். அதனைக் கண்ட சமின் அதிர்ச்சியடைந்தாலும் தடைசெய்யால் விட்டு விடுகின்றாள். காரை வெளியேற்றுபவர் சிமனி

இப்படத்தில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன் றும் தனித்தன்மை கொண்டுள்ளன. மாமா ரொம் யதார்த்த உலகில் வலம் வரும் ஒரு ரோ ரக் ஓட்டி. இவருக்கு பணம் முக்கியம். அநாதரவாக இருக்கும் சிமனை வளர்க்க வேண்டும். வீட்டுக் கடன் மாதா மாதம் கட்ட வேண்டும். சிமன் தனது தாயின் நினைவாக வைத்திருக்கும் வயலினையே விற்க கேட்கு மளவிற்கு பணம்தான் ரொம்மின் தேவை.

சபின் இவருக்கு ஒரு உள் நோக்கம் உள்ளது. முதலாவது தனது முன்னாள் கணவனின் மகன் எனத் தெரிந்திருந்தும் சிமனை பொய்யாக கதை எழுத தூண்டு கின்றார். இரண்டாவதாக அந்த குறிப்பிட்ட செய்தித் துண்டை தேர்வு செய்வதன் காரணம். இதனை படம் நேரடியாக கூறவில்லையாயினும் இவர் பாலஸ்தீனியத் தை ஆதரிக்கின்றார் என்பது வெளிப்படை. இவர் ஒரு முஸ்லீம் -பிரெஞ்ச் ஆசிரியை. சிமனின் தாத்தா நேரடியான சாட்சிகளும், உண்மையும் தெரியாமலே சிமனின் தந்தையை கொலைகாரன் எனக் கூறுகின்றார்.

இப்பாத்திரங்கள் அனைத்தும் தங்களது மனதில் உள்ள ஒன்றை வெளிப்படையாகக்

அரசியல் படங்கள் இன்று மனிதத்தின் பெயரால் ஒடுக்கப்படுபவர்களின் குரல்களை ஒடுக்கச் செய்கின்றன. இளம் சிறார்கள் மத்தியில் இது இன்று பிரபலமடைகின்றது. ஒரு புறத்தில் தங்களது உரிமைகள், உடமைகள், உயிரிழப்புக்கள் போன்றவற்றிக்காக போராடும் மக்கள். மறுபுறத்தில் இவர்களது போராட்ட வடிவங் கள் விமர்சிக்கப்படுகின்றன. இப்படமும் பாலஸ்தீனத்துக்கு எதிரான குரலாகவே வெளிப்படுகின்றது. முஸ்லீம் ஆசிரியையே பயங்கரவாதத்துக்கு எதிராக கருத்து தெரிவிக்கின்றார். மறுபுறம் யேசுவைக் கொன்றது யூதர் என்ற விமர்சனமும் வெளிப்படுகின்றது. இவை இரண்டும் முஸ்லீம் பாத்திரத்தினூடாகவே வெளிப்படுகின்றன. இயக்குனர் ஒரு ஆமேனியர். தனது அடையா-ளத்தை ஒவ்வொரு படத்திலும் வெளிப்படுத்தி யுள்ளார். இப்படத்தில் தனது மதத்தின் அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இப்படம் இவரது முஸ்லீம் தீவரவாதிகள் மீது கொண்ட எதிர்ப்பையும் வெளிப்படுத்த தவறவில்லை.

## *The Adjuster*

இப்படம் காப்புறுதி மதிப்பீடு செய்யும் ஒருவரைப் பற்றியது. இயக்குனரின் படங்கள் பொதுவாகவே மனித வாழ்வியல் சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன.



## வானரன்

அவ்வகையில் இப்படம் காப்புறுதி முகவரின் முகவரியை வெளிப்படுத்துகின்றது. இவரைப் போன்ற முகவர்களை இயல்பாக பார்க்க முடியாது. இவரை முகவர் எனக் குறிப்பிடுவதை விட இழப்புக்களை மதிப்பீடு செய்பவர் எனக் கூறுவதே சரியாக இருக்கும். எமது வாழ்வில் சில தடவைகளாவது இவர்களை சந்திப்பது தவிர்க்க முடியாது. வாகன விபத்து இதற்கு சிறந்த உதாரணம். பண்பாட்டு கலாச்சார விழுமியங்களை மீறி கனடாவின் சட்டங்கள் இறுக்கமாகவே இவற்றை கட்டுப்படுத்துகின்றன. ஆனால் இது ஒரு "இழப்புக்களை மதிப்பீடு செய்பவரின் குறுக்கு வெட்டு. Noah Render ஒரு காப்புறுதி முகவர். இவர் தனது வாடிக்கையாளர்களுக்கு பல வழிகளிலும் உதவி புரிகின்றார். அவர்களுக்கு இழப்பு ஏற்படும் பொழுது மனோநிலைரீதியாகவும் பொருளியல்ரீதியாகவும் அவர்களை இழப்பி லிருந்து வழமைக்கு கொண்டுவருவது முக்கியம் எனக் கருதுகின்றார். "You may not know it, but you're in shock," இது நோ தனது வாடிக்கையாளர்களிடம் கூறுவது வழமை. நோ ஒரு workaholic. அதாவது எந்த நேரமும் வேலை செய்பவர். மழையோ வெய்யிலோ புயலோ கடும் பனி மழையோ இவரை வேலையில் இருந்து அந்நியப்படுத்த முடியாது. இவரது வாடிக்கையாளர்களை இவர் மோட்டல் ஒன்றில் தங்கவைப்பது வழமை. உண்மையில் ஒரு பாரிய இழப்பின் பின்னர் அவர்களுக்குள்ள துயரம் வார்த்தைகளால் சொல்ல முடியாது. நோ வின் பெரும்பாலான வாடிக்கையாளர்களின் வீட்டை நெருப்பு இரையாக்கிக் கொண்டது. அவர்களது வீடு மாத்திரமல்ல, ஆசையாய் வாங்கிய பொருட்கள், விலை மதிப்பற்ற உணர்வுபூர்வமான பல பொருட்கள், நினைவுகள் இவையாவும் ஒரு சில மணி நேரத்தில் சாம்பலாகி விடுகின்றன. இந்த இழப்பை பணரீதியாக ஈடு செய்யலாம். ஆனால் உணர்வுபூர்வமான பல விடயங்களை ஈடு செய்ய முடியாது. வழமையான மதிப்பீடு செய்பவர்கள் நட்டத்தை மதிப்பீடு செய்வதுடன், தற்காலிக இருப்பிடம் போன்ற விடயங்கள் ஏற்பாடு செய்து கொடுத்து விட்டு சென்று விடுவார்கள். நோ வித்தியாசமானவர். ஒவ்வொரு இழப்பின் பின் உள்ள உளவியல் தாக்கங்களை நன்கறிந்தவர். அவர்களை உணர்வுபூர்வமாக வழமைக்கு கொண்டு வர தன்னாலானவற்றை செய்கின்றார். அவ்வாறான சமயங்களில் பெண் வாடிக்கையாளர்களுடன் உடலுறவு கொள்வதுமுண்டு.

இவர் வாழும் வீடு ஒரு சிறு பிரதேசத்தில் தனித்துள்ளது. இப்பிரதேசத்தில் வீடு கட்டுவதெற்கென அறிவித்த நிறுவனம் நோ வின் வீடு மட்டும் கட்டிய நிலையில் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது. இவரது வீடு ஒரு "மாதிரி வீடு" (Model Hosue) இப்பொழுதும் வீடு கட்டுவதற்கான விளம்பரங்களை காணலாம். இவருடன்

தொடர்ச்சி 30ம் பக்கம்

# திரை விமர்சனம் - மைனா, உத்தமபுத்திரன்

## மைனா



- பிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

பெரிய நடிகர்கள், பெரிய முதலீடு மீது நம்பிக்கை வைத்து 'நிச்சய வெற்றி' என்ற களேபரத்துடன் வெளிவந்த படங்களில் பெரும்பாலானவை வெளிவந்த வேகத்தில் 'உலகத் தமிழ் தொலைக்காட்சிகளில் முதன்முறையாக' என சேட்டிலைட் சேனல்களை நோக்கி ஓடிக்கொண்டிருக்க, அதிகம் பரிட்சயமில்லாத நடிகர்கள், சிறிய முதலீடு என்றாலும் திரைக்கதை மீது நம்பிக்கை வைத்து எடுக்கப்பட்ட படம், தமிழில் மீண்டும் வெற்றிவாகை சூடியிருக்கிறது. கதைதான் திரைப்படங்களின் நாயகன் என்பதை மீண்டும் உரக்கச் சொல்லியிருக்கிறார்கள். கலைஞர் குடும்பத்தினர் தமிழ் சினிமாவை கபளீகரம் செய்துவிட்டார்கள் என்ற விமர்சனத்துக்கு, 'நாங்கள் நடுவாந்திரமான படங்களையும் எடுப்போம்' என இப்படத்தின் மூலம் ஒரு ஆறுதல் சொல்லியிருக்கிறார் உதயநிதி ஸ்டாலின்.

காடும் காடு சார்ந்த இடமும் தான் கதைக்களம். உயிருக்கு உயிராக காதலிக்கும் காதலனும் காதலியும் கடைசியில் காதலுக்காக உயிரைவிடுகிற உருக்கமான காதல் கதை. தீபாவளிக்கு முதல் நாள் ஆரம்பித்து, தீபாவளியன்று முடிகிறது.

தீபாவளிக்கு முன் தினம்... பாஸ்கர், ராமையா இரு காவல்துறை அதிகாரிகளும் தப்பி ஓடிய கைதி சுருளியை தேடி தேனி அருகில் மூணாறு மலை அடிவாரத்தில் இருக்கும் குரங்கணி மலைக் கிராமத்துக்கு வருகிறார்கள். தப்பி ஓடிய சுருளி யாரு? சிறுவயதிலேயே தாயை இழந்தவன். படிப்பு வராததால் இளம் வயதிலேயே வேலைக்குப் போகும் சூழல், ரவுடித்தனம் செய்துகொண்டு அலைகிறான். குடித்து குடித்து இறந்து போன அப்பாவால் சின்ன வயதிலேயே குடியிருக்கும் வீடு உள்ளிட்ட சொத்து பத்துகளையும் சொந்தபந்தங்களையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் மைனாவையும் அவளது அம்மாவையும் ஒருநாள் சந்திக்கிறான் சுருளி. நடுத்தெருவில் அழுதுகொண்டிருக்கும் மைனாவைப் பார்த்து இரக்கம்கொண்டு, அவர்களை கூட்டி வந்து அடைக்கலம் கொடுக்கிறான். பணியாரம் சுட்டு விற்று வரும் காசில் வயிற்றை கழுவும் மைனாவின் அம்மாவால், நன்றாக படிக்கும் மைனாவை படிக்க வைக்க முடியாத சூழல். அதனால், தானே கூலி வேலையெல்லாம் செய்து அவளைப் படிக்க வைக்கிறான்.

இளம் சிட்டுக் குருவிகளாக ஒன்றாய் சுற்றித் திரியும் சுருளிக்கும் மைனாவுக்கும், ஒருவர் மேல் ஒருவருக்கு இனம் புரியாத வயதில் இருந்தே காதல்! வளர்ந்து இளைஞன், இளைஞி ஆகும் போது இது உயிர் காதலாக மாறுகிறது. மைனாவின் அம்மாவும் சுருளியை 'மருமகனே, மருமகனே' என்று அழைக்கிறாள். இந்நிலையில் பணத்துக்கு ஆசைப்பட்டு மைனாவை வேறு ஒருவனுக்கு கட்டித்தர முடிவு செய்கிறாள், அவளது அம்மா. கோபம் கொள்ளும் சுருளி மைனா அம்மாவின் கடையை அடித்து நொறுக்குகிறான். அம்மாவை அடித்து கல்லை தூக்கி போட்டு கொலை செய்ய முயன்றான் என்று போலீஸ் வழக்குப்பதிவு செய்து பதினைந்து நாள் காவலில் வைக்கிறது. விடுதலை அடைவதற்கு இன்னும் ஒருநாள் தான் இருக்கும் நிலையில், அவசர அவசரமாக மைனாவுக்கு திருமணம் செய்ய, அவளது அம்மா முயற்சிப்பது தெரிந்து, சிறையிலிருந்து தப்பிக்கிறான், சுருளி. கல்யாணத்தை தடுத்து மைனாவோடு தப்பிக்கிறான்.

தலை தீபாவளி கூட கொண்டாடா முடியாத கடுப்பில் சுருளியைத் தேடிவரும் காவல் அதிகாரி ராமையா, அவனை எப்படியாவது கண்டுபிடித்தே ஆகவேண்டும் என்று குரங்கணி கிராமத்திற்கு போக மலை ஏறுகிறார்கள். ராத்திரியாகிவிட மலையில் வழி தெரியாமல் அலைந்து திரிந்து, பல சிரமங்களுடன் ஒரு வழியாக அடுத்த நாள் காலை சுருளியை கைது செய்கிறார்கள். சுருளி காவலர்களுடன் திரும்பும்போது, ஒரு பெரிய பேருந்து விபத்தில் காவல் அதிகாரிகள் பாஸ்கரையும் ராமையாவையும் காப்பாற்றுகிறான். உயிரைக் காப்பாற்றிய சுருளி, நல்லவன் என்பதை காவலர்கள் உணர்ந்து கொள்கிறார்கள். சுருளி விடுதலையானதும் தானே கல்யாணம் செய்து வைப்பதாக சொல்கிறார் காவலர் பாஸ்கர். நிறைவான சந்தோஷத்தோடு தேனி திரும்பி, காவலர்கள் உதவியோடு மைனாவுக்கும் சுருளிக்கு கல்யாணம் நடக்க இருக்கும் வேளையில் அதிர்ச்சி தரும் திருப்பமொன்றுடன் முடிகிறது படம்.

சுருளியாக வரும் வித்தார்த், மைனாவாக வரும் அமலா பால் இருவரும் கதாபாத்திரமாகவே வாழ்ந்திருகிறார்கள். அமலாவின் பரு முகமும், வசீகர பெரிய விழிகளும் ஆயிரம் கதை சொல்கிறது. 'சிந்து சமவெளி' அனகாவா இவர் என ஆச்சரியம். என்னதென்று சொல்ல முடியாத கண் நிறைந்த ஏக்கங்களுடன் படம் முழுக்க வருகிறார். ஹோட்டலில் அனகா தண்ணீர் குடிக்கும்போது சிறு தண்ணீர் துளி வித்தார்த் கன்னத்தில் பட்டு தெறித்ததும், அதை அவர் ரசிக்கிறார் என்பதை உணர்ந்து வெட்கப்படும் அனகா பிரமிப்பூட்டுகிறார். ராமையாவாக வரும் தம்பி ராமையாவுக்கு இப்படம் ஒரு மைல் கல். நகைச்சுவை, வில்லத்தனம், கண்ணீர் என எல்லாம் கலந்த குணச்சித்திரக் கதாபாத்திரத்தில் முத்திரைப் பதித்திருகிறார். இன்னொரு காவலராக வரும் சேது நடிப்பில், நூறு படத்தில் நடித்தது மாதிரி ஒரு முழுமை. படத்தின் பெரும்பாலான நேரம் நான்கு பேருடன் மட்டுமே கரைகிறது. சிறிது நேரமே வந்தாலும் மற்ற அனைவரும்கூட நன்றாக செய்திருக்கிறார்கள்.

டி. இமானுக்கு இந்தப் படம் நிச்சயம் பெயர் வாங்கித் தரும். 'ஜிங்கு... ஜிங்கு...' பாடல் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும். ஆனால், படத்தின் உண்மையான கதாநாயகன் ஒளிப்பதிவாளர் சுகுமார்தான். மலையில் இருந்து பஸ் விழும் காட்சியில் படத்தைப் பார்க்கும் நாமே மலையில் தொங்கும் ஒரு உணர்வு. 'லைட்' பயன்படுத்தியதே தெரியாத மாதிரி, பெரியகுளம், மூணாறு, குரங்கணி அடர்ந்த காடுகளில் கிடைத்த வெளிச்சத்தில் ஒளிப்பதிவு செய்தது போல் அவ்வளவு அருமை. உயரமான மலைகள், செங்குத்தான பாறைகள், குறுகிய ஓடைகள், நீர்நிலைகள், பசுமையான பிரதேசங்கள், காட்டை ஊடுருவி செல்லும் சாலைகள் என அனைத்தையும் சுகுமார் அழகுற படமாக்கியிருக்கிறார்.

'கண்ணோடு காண்பதெல்லாம்', 'கிங்', 'லீ', 'கொக்கி' போன்ற தன் முந்தையப் படங்களிலும் கொஞ்சம் வித்தியாசமான கதையோடுதான் வந்தார் இயக்குநர் பிரபு சாலமன். ஆனாலும், அப்படங்கள் இவருக்குப் பெரிய பெயர் வாங்கித் தரவில்லை. அந்தக் குறையை மைனா போக்கியிருக்கிறது. 'மைனாவின்' நாயகன், நாயகி கதாபாத்திரங்கள் 'பருத்திவீரன்' படத்தை ஞாபகப்படுத்துகின்றன. அதுவும் 'பருத்தி வீரன்' கார்த்தியின் அப்பட்டமான நகலாக இருக்கிறார் வித்தார்த். இதைத் தவிர்த்திருக்கலாம்.

மைனா - பறக்கும்.

தொடர்ச்சி 40ம் பக்கம்


APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*

Pl. Call: 416.264.2818

# ஒடுக்கப்பட்ட பெண்ணின் ஓங்கிய குரலாக வெளிப்படும் குறும்படங்கள் மூன்று

## மனுசி

நிர்வாண கிரியேசனின் தயாரிப்பான இப்படம் உலக தமிழ் குறும்பட உலகில் வெளிவந்த பெண்ணிய கருத்துக்களை சீரிய வடிவில் வெளிக்கொணர்ந்த முதல் படம் என்றால் மிகையாகாது. இதன் கருவை-கதையை சுதையை சுமதி ரூபன் எழுதியிருக்க ரூபன் இயக்கியுள்ளார். சிறுகதையாசிரியராகவும் கவிஞராகவும் நாடகராகவும் அடையாளங் காணப்பட்ட சுமதி ரூபனின் இரண்டாவது படமிது. இதில் இவர் நடித்துமுள்ளார்.

வீட்டில் ஹாயாக வேலைக்கு போகாமல் உடகார்ந்திருக்கும் கணவனின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்கின்றாள் மனைவி. இதன் பின் உள்ள பெண்ணின் வலியை இப்படம் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது. மனைவியாக சுமதியும் கணவனாக சுரேஸ் குமாரும் நடித்துள்ளனர்.
இயல்பாக வழமைபோல் அனைத்தையும் செய்யும் மனைவி ஒரு இடத்தில் கணவனை திரும்பிப் பார்க்கின்றார். அந்த ஒரு இடறலைத் தவிர மற்ற அனைத்தும் சிறப்பாக உள்ளது. கணவன் இறுதியில் கட்டிலுக்கு அழைக்கும் போது சிரிக்கும் குழந்தை சிரிப்பு சுரேஸை ஒரு தேர்ந்த நடிகர் என வெளிப்படுத்துகின்றது. 9.55 நிமிடங்களுள் மிகத் தாக்கமான ஒரு படத்தை பதிவு செய்துள்ளனர்.

இயக்குனர் ரூபன் ஒரு புகைப்படக் கலைஞர். http://www.youtube.com/watch?v=J77Mlhw_D1A

## வதை

வதை கிராவின் இயக்கத்தில் வெளிவந்துள்ள 6 நிமிடக் குறும் படம். முதல் 1.5 நிமிடங்களை எழுத்தோட்டம் விழுங்கிவிட மிகுதி 4.5 நிமிடங்களே இப்படம். இந்தியாவில் உள்ள புழல் அகதி முகாமில் ஒரு இளம் பெண் சோர்வுடன் நடந்து வருகின்றாள். மிகவும் ஆறுதலாக கலைந்த கசங்கிய உடைகளுடன் சோகமான முகத்துடன் அங்குள்ள மரத்தடி தேநீர்க்கடைக்கு வருகின்றாள். அங்கு தேநீர் அருந்திக் கொண்டிருக்கும் பொழுது பலர் அங்கு வந்துவிட்டனர். காட்சி மாறுகின்றது. இலங்கையில் இப்பெண் இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகின்றாள். பாவாடையை தூக்கடா என்ற சத்தம் கேட்கின்றது. புழலில் பலரைக் கண்டவுடன் இராணுவம் என மனதில் நினைத்து பாவாடையை தூக்குகின்றாள்.



# ஒளியின் மொழி

இப் பெண்ணின் வலியை இப்படம் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளது. இது போன்று ஒரு அசோக கந்தகமவின் This is my moon என்ற சிங்களப் படம் வெளிவந்துள்ளது. இதிலும் இராணுவச் சிப்பாயைக் கண்டவுடன் சங்கிலி-யைக் கழற்றிக் கொடுப்பாள். வாங்க மறுக்க பாவாடையைத் தூக்குகின்றாள். அவன் புணர்ந்து விட்டுச் செல்கின்றான்.

பெண்கள் மீது கட்டவிழக்கப்பட்டுள்ள வன்முறைகளை கொடுமைகளை வதை பதிவு செய்துள்ளது. காட்சிகள் இயல்பாக இல்லாமல் ஒரு செயற்கைத்தனம் வெளிப்படுகின்றன.
http://www.youtube.com/watch?v=avAy2d7NtyQ

## கோப்பை

குமார் மூர்த்தி என்ற அற்புதமான எழுத்தாளரின் கதையே கோப்பை. இவர் இறந்து பல வருடங்களாகிவிட்டாலும் இன்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இப்படத்தை இயக்கியிருப்பவர் வரன்-மாமூலன்.

கோப்பை கழுவுபவராக வேலை செய்யும் கணவன், வீட்டில் மனைவி சாப்பிட்டு முடிந்த பின்னர் கோப்பையை கழுவுமாறு கேட்கின்றார். கழுவுவதா விடுவதா என்பதே கணவனின் சிந்தனை. ஒரு வகையில் இது ஒரு ஆணாதிக்க வெளிப்பாடு. கோப்பை கழுவுதல் என்பது பெண்களுக்குரியது. இரண்டாவது அவரது தொழில் மீதான வெறுப்பின் வெளிப்பாடு. இவ்விரண்டையும் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார் திலீப் குமார். ஒரு நாடகரான இவர் தனது இயல்பான நடிப்பால் படத்திற்கு கனத்தை கொண்டு வந்துள்ளார்.

**- ரதன் -**

இப்படத்தின் மற்றொரு சிறப்பம்சம் இயக்கம். மாமூலன் சிறப்பாக இயக்கியுள்ளார். ஒரு சிறு கதையை படமாக்குவது என்பதே கடினமானது. சிறுகதையில் வெளிப்பட்ட அது தாக்கத்தை படத்திலும் வெளிக் கொணர்ந்துள்ளனர். தமிழில் இது போன்ற குறும் படம் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# புறந்தள்ளப்படும்...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

இவரது மனைவி மகன் மனைவியின் சகோதரி நோா வுடன் இவ் வீட்டில் வாழ்கின்றனர். இவரது மனைவி ஹேரா திரைப்படத் தணிக்கையாளர். தணிக்கை செய்யப்படாத படங்களை தனது வீடியோ கமாராவில் பதிவு செய்து வீட்டிற்கு கொண்டுவருவார். இதனை ஹேராவின் சகோதரியும் பார்ப்பதுண்டு.

இவரது வீட்டை ஒரு தயாரிப்பாளர் படம் எடுப்பதற்காக கேட்கின்றார். வீட்டை படமாக்குவதற்கு கொடுத்து விட்டு நோா வின் குடும்பம் மோட்டலில் தங்குகின்றது. தயாரிப்பாளரின் நோக்கம் வேறு. இறுதியில் தயாரிப்பாளர் நோா வின் வீட்டை எரித்து விடுகின்றார். இப்பொழுது நோா பாதிக்கப்பட்டவர்.

இயக்குனரின் குடும்பம் பிரிட்டிஸ் கொலம்பியாவில் தங்கியிருந்த பொழுது இவர்களுக்கு சொந்தமான தளபாடக்கடை நெருப்பிற்கு பலியானது. இவர்கள் ஒரு ஹொட்டலில் தங்க வேண்டி வந்தது. அப்படி தங்கியிருந்த பொழுது அங்கு அடிக்கடி "இழப்புக்களை மதிப்பீடு செய்யும் காப்புறுதி முகவர்" வருவது வழமை. அவருடனான அனுபவத்திலேயே இப்படத்தின் கரு தோன்றியது.

ஒரு இழப்பின் வியாபார நட்டஈட்டுக்கும் அதன் பின் உள்ள உணர்வுபூர்வமான இழப்புக்களுக்கான நட்டஈடின்மைக்கும் உள்ள வேறுபாட்டை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது இப் படம். இவ்வாறான சமயங்களில் காப்புறுதி நிறுவனங்களின் அசட்டையீனத்தையும் பதிவுசெய்துள்ளது.






**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# மேலைத் தேசத்தில்
# கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

25

# என் இதழியல் அனுபவங்கள்

**என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள் நலம் பெறப் பிரார்த்திக்கிறேன்.**

1955ஆம் ஆண்டு. யாழ். இந்துக் கல்லூரியிலே எங்கள் வகுப்பில் நவீன இலக்கியங்கள் பற்றிய சுவையை எங்களுக்கு ஊட்டியவர் ஏரம்பமூர்த்தி என்ற ஆசிரியர். இவர் யாழ். கஸ்தூரியார் வீதியிலிருக்கும் செல்லம்ஸ் ஸ்ருடியோ உரிமையாளர்களில் ஒருவர். கலைத்துறை யில் கரிசனைமிக்கவர். சிவந்த செந்தளிப்பான நெடியசிவலை. இவர் மாணவர்களிடம் ஆளுக்கு இரண்டு ரூபாக்காசு வசூலித்து சிறுகதைத் தொகுதி, நாவல், கட்டுரைத்தொகுதி, நாடகம், கவிதைத் தொகுதி எனப் பலவற்றைப் புத்தகக்கடைகளில் தானே வாங்கிவந்து முப்பத்தைந்து மாணவர்களுக்கும் வாசிக்கத் தருவார். வாசிப்பு இரசனையை எமக்கு ஊட்டிய பெருந்தகையும் இவரே. பாடநூல் களைப் படிப்பதற்கும் இந்த இரசனையே தூண்டுகோலாய் அமைந்ததும் உண்மையே.

ஒருநாள் வகுப்பில் ஏரம்பர் மாணவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். எதிர்காலத்தில் கலைத்துறைசார்ந்த எந்த முயற்சியில் ஈடுபடப்போகிறீர்கள்? என்பது கேள்வி. அன்று என்னுடன் பயின்ற செங்கையாழியான், செம்பியன் செல்வன், அங்கையன், து. வைத்திலிங்கம், மகாதேவன் (தேவன்கலட்டி), ஆனந்த விகடனில் ஒரு தேவன், யாழ்ப்பாணத்தில் ஒரு தேவன், கலட்டியில் ஒரு தேவன் என ஏரம்பரால் உயரப்பாய்ந்தவர் தேவன் கலட்டி, வவுனியா தயாபரன் ஆகியோர் சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை எழுதும் முயற்சியில் இறங்கப்போவதாகவும், மற்றும் எஸ்.ரி.சண்முகலிங்கம், எஸ்.ஆர்.கனகசபை, பொ.கணேசானந்தன் ஆகியோர் கரகாட்டம், வில்லுப்பாட்டு, பொய்க்கால் குதிரை ஆட்டம் என்றெல்லாம் சொன்னார். என் முறைவந்தது. நான் இவர்களை விட வித்தியாசமாய் சொல்ல வேண்டும் என்னும் துடிப்பில் பத்திரிகை ஆசிரியர் என்றேன். அந்தக்காலத்தில் இதழ், சஞ்சிகை, என்ற சொற்கள் அதிகம் பாவனையில் இல்லை. கலைச்செல்வி, மல்லிகை, கலைமதி இதழ்கள் தொடங்கி மெல்ல மெல்ல நின்றும், இருந்தும், நடந்தகாலம். பத்திரிகை, தினசரி, பேப்பர், நாளேடு என்ற பதங்களே பரவியிருந்த காலம் எல்லோருக்கும் அவரவர் விருப்பப்படி ஆகக்கடவது என்று ஏரம்பர் சிரித்தபடி ஆசி கூறவும், கந்தையா அண்ணன் கல்லூரி மணியை ஓங்கி அடித்து வகுப்பை மாற்றி விடவும்; நாற்பது நிமிட தமிழ் இன்பப் பொழுது காரித்தது. நாராணி ஐயர் என்ற மாணவர்களின் தலையை கரும்பலகை யோடு சேர்த்து அடிக்கும் அல்ஜிப்பிறா, யோமற்றி ஆசிரியர் வந்தார். இவர் இந்தியர். அப்பொழுது யாழ். இந்துவில் கிருஷ்ணசாமி, நாராணசாமி, இராம கிருஷ்ணன் என இந்திய தமிழகப் பிராமண வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள் படிப்பித்தார்கள். இராமகிருஷ்ணன் நடிகர் ஜெமினிகணேசனோடு இந்தியாவில் பல்கலைக்கழகத்தில் படித்தவர். அப்பொழுது வெளியான ஜெமினிகணேசன் சாவித்திரி நடித்த மிஸ்ஸியம்மா படத்தைப் பார்த்துவிட்டு இராமகிருஷ்ணனைப் பார்த்து பொச்சம் தீர்த்த மாணவர்கள் இன்று கனடாவில் இருக்கிறார்கள். நிற்க!

ஒருவருக்கு விதியில் இருப்பது தான் மதியிலும் வரும்போலும். பத்திரிகைத்துறை சார்ந்த பிடிப்பு எனது இதயத்தில் கருவாய் அரும்பி உருவாய் எழுவதற்கு வித்தொன்று எப்போதோ விழுந்திருக்க வேண்டும். எப்போது எந்தச் சூழலில் என்று எண்ணிப் பார்க்கிறேன். 1950களில் இந்தியத் தமிழ் அறிஞர்கள் ஈழத்துக்கு வருகை தந்து சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அவர்களில் கி.வா.ஜகந்நாதன். அ.ச.ஞான சம்பந்தன், முத்துச்சிவன், மு.வ.கல்கி, ம.பொ.சி. முதலியோர் குறிப்பிடத்தக்கவர் கள். இவர்களில் கி.வா.ஜ, சைவசித்தாந்த மாநாடு தமிழ்விழா, பண்டிதர் கா.பொ. இரத்தினம் நடத்திய தமிழ் மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடு. மன்னார் திருக்கேதீஸ்வரம் திருவாசககழகத்தின் திருக்குறள் மாநாடு. மன்னார் திருக்கேதீஸ் வரம் திருவாசகமடத்தில் சரவணமுத்துச் சுவாமிகள் நடத்திய திருவாசகவிழா முதலியவற்றிற்காக அடிக்கடி வந்து போவார். கி.வா.ஜ ஒரு சைவ சித்தாந்தி. இதனால் என் தந்தையாரோடு நட்புப் பூண்டவர். அண்ணர் சிவராமலிங்கத்தோடும் ஐக்கியமானவர். ஊருக்குவரும் போது தந்தையாருக்கு கதர் வேட்டி சால்வை கொண்டு வந்து கொடுப்பார். ஈழத்தில் இருக்கும்போது எங்காவது ஒரு மேடையில் கி.வா.ஜ தும்மினால் அல்லது இருமினால் சித்தவைத்தியரான என் தந்தையார் அங்கு போய் அவர் கையைப் பிடித்து நாடிபார்த்து ஏதாவது சூரணமோ, செந்தூரணமோ கொடுத்து மாற்றிவிடுவார். இது நட்புக்கு நெருக்கம் கொடுத்தது. என் மனைவியின் பேரனார் சரவணமுத்துச் சுவாமியார் திருவாசகவிழாவுக்கு கி.வா.ஜ வை அழைத்து பத்து நாட்கள் சொற்பொழிவு களை ஒழுங்கு செய்து நடத்தியபொழுது என் தந்தையாருக்கும் கி.வா. ஜயாவுக்கும் உள்ள புலமைச்சங்கமம் 'உவப்பத் தலைகட்டி உள்ளப்பிரிதல்' ஆனது.

கி.வா.ஜகந்நாதன் வித்துவான் பட்டம் பெற்றவர். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயரின் தலைமாணாக்கர். இவர் படிப்பை முடித்ததும் 'கலைமகள்' இதழுக்கு ஆசிரியரானார். சங்க இலக்கியங்கள் மட்டுமல்ல; நவீன இலக்கியங்களிலும் தேர்ச்சி உள்ளவர். நவீன இலக்கிய வடிவங்களில் ஆக்கங்களும் செய்தவர். அகிலன் போன்ற நவீன எழுத்தாளர்களை வளர்த்துவிட்டவர். சிறந்த சொற்பொழிவாளர். நான் சின்னப்பெடியனாய் இருந்தபோது எங்களூரில் நடந்த முத்தமிழ் விழாவில் கி.வா.ஜவுடன் மேடையில் பேசியிருக்கிறேன். எம்மோடு அன்று பண்டிதார் கா.பொ. இரத்தினமும் பேசினார். கண்ணகியம்மன் கோயில் கடற்கரையில் நடந்த இந்தவிழாவை முன்னின்று நடத்திய அதிபர் ஐயாத்துரை சிவசாமி இன்று கனடா ஒட்டாவாவில் வாழ்கிறார், நிற்க.

கி.வா.ஜ. தமிழ் படித்துவிட்டு 'கலைமகள்' இதழ் ஆசிரியராய் விளங்குவதோடு; சமய, இலக்கியச் சொற்பொழிவுகள் செய்வது போன்று நானும் செய்ய வேண்டும் என்ற ஆசை அன்று பற்றிக்கொண்டது. யாழ். இந்துவில் ஏரம்பருக்குச் சொன்னது காலம் கனிய விருட்சமாகியது.

நண்பா! இனித்தான் இருக்கிறது இடக்கரடக்கல். நினைக்கத்தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா? என்று கேட்டாரே கவிஞர் கண்ணதாசன். அவர் வாயில் கற்கண்டோடு, சீனி சக்கரையையும் போடவேண்டும். எதை மறக்க வேண்டுமோ அதையே நினைப்பதுவும், எதனை நினைக்க வேண்டுமோ அதனை உடனே மறப்பதும் மனதின் குரங்குச்சேட்டை. மனம் ஒரு குரங்காமே? அதை ஓடவிட்டுத்தான் பிடிக்க வேண்டும். இல்லையேல் அது நம்மை ஒட்டா..வா...வில் இருத்திவிடும். ஏன் சிரிக்கிறீர்? ஒட்டாத வாழ்வில் செலுத்திவிடும். (பைத்தியம் ஆக்கிவிடும்)

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தால் திரும்பியதும் வேலை தேடும் படலம். கொழும்புக்குப் போக முடியாத சிக்கல். வீட்டில் நோய்வாய்ப்பட்டு கிடந்த எண்பது வயதுத் தந்தையை பார்க்க வேண்டிய பொறுப்பு. யாழ்ப்பாணத்தில் தான் வேலை தேட வேண்டும். எனக்கு விருப்பமான பத்திரிகைத்துறையில் முயற்சி. அப்பொழுது யாழ். சிவன்கோயில் மேற்குவீதியில் 'ஈழநாடு' நாள் இதழ் நடந்து கொண்டிருந்தது. அதன் ஆசிரியர் கே.பி.கரன். எனது ஈழத்தில் யான் கண்ட சொற் செல்வர்கள்' என்ற நூலுக்கு 1962ஆம் ஆண்டு நல்ல முன்னுரை தந்த திருவையாற்றுக்காரர். அவரும் சிம்மக்குரலோன் உடுப்பிட்டி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரமும் சிதம்பரம் கோயிலைத் தரிசிக்க வந்த போது, அண்ணாமலைப்பல்கலைக்கழகத்துக்கு அழைத்து நான் செயலாளராக இருந்த தமிழச் சங்கம் மூலம் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் பாராட்டு விழா எடுத்த பழக்கம். ஈழத்து மேடைகளில் அருகிருந்து உரையாடிய உரிமை. அவரிடம் வேலை கேட்கலாம் என நினைத்துப் போனேன். பலே! பலே! போட்டு வரவேற்றார் வரவேற்பு மரியாதையில் கிறங்கிக் கூச்சப்பட்டு வந்த வேலையை மறந்து திரும்பி விட்டேன். பிறிதொருநாள் அவரிடம் போகாமல் ஆசிரியர் குழுவில் இருந்த நண்பர்களுடன் உரையாடி பத்திரிகையில் வேலைக்கு எப்படி முயற்சிப்பது என்று யோசனை கேட்கச் சென்றேன்.

மகிழ்வோடு உரையாடிக் காரியாலயத்திற்கு முன்னால் இருந்த தேநீர் கடையில் தேநீர் அருந்தி விட்டு மௌனமாயிருந்த கணத்தில் என் எண்ணத்தை வெளியிட்டேன். உனக்கு இங்கு வேலை தரமாட்டார்கள். நீ சும்மாயிருந்திருக்க வேண்டும். புத்தகம் வெளியிட்டு, மேடைகளில் பேசி பிரமுகர் வட்டத்துக்குள் இருக்கிறாய். உன்னிடம் எப்படி வேலை வாங்குவது? உன்னோடு எப்படிப் புளங்குவது என்பது பற்றியெல்லாம் யோசிப்பார்கள். சும்மா மரியாதையாய் வந்து விட்டுப் போ. ஏதாவது எழுதுபோடுகிறோம் என்றார் எழுத்தாள நண்பர் ஒருவர். தகுதி கூடினாலும் வேலை இல்லாப் பிரச்சினை உருவாகும் என்ற புரிதலுடன் வீடு திரும்பினேன்.

யாழ். ஈழநாட்டிற்கு அடுத்ததாக அந்தக் காலத்தில் இருந்த பத்திரிகை 'இந்து சாதனம்' சைவ பரிபாலனசபையின் வெளியீடு, சைவபரிபாலன சபை நெறியாளர்களில் அண்ணர் சிவராமலிங்க மும் ஒருவர். குடும்ப நண்பர். சுருவில் கிராமசபைத்தலைவர் சண்முகலிங்கமும் ஒருவர். அப்பொழுது இந்து சாதனத்தில் வேலை பார்த்த ஒருவர் விலகியிருந்தார். வெற்றிடம் இருந்தது. விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்ட பொழுது அண்ணர் சிவராமர் ஒன்றும் பேசாமல் இருந்தார். அன்பர் சண்முகலிங்கனார் சிபார்சு செய்து வாதாடினார். யாழ். இந்துக் கல்லூரியின் ஆசிரியர் என்னையும் படிப்பித்தவர் சாமி மயில் வாகனார் சபையில் வீற்றோ பவர் உள்ள வல்லரசு, சைவப்பழம். என் தந்தையாரின் ஆத்ம நண்பர். அவருடைய அனுசரணையும் கிடைக்கும் என்ற மனத்தெம்பு எனக்கு.

ஆலோசனைக் கூட்டத்தில் ஆக்ரோசமாய் குரல் எழுப்பி இரத்தக் கொதிப்பையும், அழுத்தத்தையும் அதிகரித்தாராம் சாமியார். சண்முகலிங்கனார் விடவில்லை. காரணத்தைச் சொல்லுங்கள். தகுதியில்லா தவரா? கள்ளனா? சமயப்பற்றில்லாதவரா? எங்களுக்கு அங்கத்தவர் காரணத்தைச் சொல்லவேண்டும் என்று கத்திவிட்டார். அவன் என் மாணவன். தகுதியானவன் தான். கள்ளன் இல்லே நேர்மையானவன் தான். சமயப் பற்றாளன்தான். ஆனால் வேண்டாம். இது சாமியார். யாழ்ப்பாணச் சமூகத்தில் இப்படியும் ஒரு அபிப்பிராயமா? விளங்கிக் கொள்ள முடியவில்லை. அங்கத்தவர் சாமியார் இதனைத் தெளிவாக விளக்க வேண்டும் என்று மறுபடியும் சண்முகலிங்கனார் கேட்டார்.

அவன் குன்றக்குடி அடிகளாரின் கொள்கைகளைப் பின்பற்றுபவன். இந்து சாதனத்துக்கு வந்தால் சைவபரிபாலன சபையின் கொள்கை, கோட்பாடுகளை மாற்றிவிடுவான். யாழ்ப்பாணச் சமய நிலை தலைகீழாகிவிடும். நாவலர் மரபு என்னாவது? என்று சொல்லியபடியே எழுந்து சாமியார் கூட்டத்தினின்றும் வெளியேறி விட்டார். அங்கத்தவர்கள் அனைவரும் திகைத்து வாயடைத்துப் போனார்கள். அண்ணர் சிவராமர் உட்பட.

நண்பா! ஒரு கொள்கையுடையவன். இலட்சியப்பற்றாளன். நேர்மையானவன். தங்கள் அணிக்குத் தேவையானவன். இலட்சிய தாகத்தை வளர்த்து அடுத்த கட்டத்துக்கு நகர்த்தக் கூடியவல்லமை உள்ளவன் என்றாலும் எங்களை விழுங்கி விட்டால் என்று எண்ணுபவர்களால் இடர்பாடுகள் இயற்கை போலும். கால நகர்வில் எனக்கு கல்யாணமும் நடந்தது. வேலைகள் அதிகம் நிறைந்த வேலை யில்லா மாப்பிள்ளை. இரவில் கூட்டங்கள். பகலில் தூக்கம். சொத்துப்பத்து இருந்ததால் சோற்றுக்குப் பஞ்சம் இல்லை. கட்சி அமைப்பு. கழகம் என்பன தமக்குச் சாதகம் ஆனவர் என்றாலும், தம்மைச் சாப்பிட்டு விடுவார் என்ற பயத்தில் தகுதியான திறமையான ஒருவரை



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

# இன்னொரு... ஆச்சி வீடு

**பகுதி 8**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

என்ன சொல்ல வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார் நீலகண்டர். குறிப்பைக் கணித்து கிரகநிலையின்படிதான் நான் சொன்னனான். மற்றும்படி எனக்கொண்டும் தெரியாது. எத்தனையோ பேர் வந்து குறிப்புக் காட்டினம். அத்தனை பேருக்கும் என்ன நடக்குதெண்டு எனக்கெப்படித் தெரியும். குரலில் கொஞ்சமாய் எரிச்சல் தெரிந்தது. நல்ல நிலையில் இருந்த வீடு. பாவனையும் அதிகமில்லை. திடீரென அண்டைக்கு நெருப்புப் பத்தி எரிஞ்சிருக்கெண்டால் ஆரோ நெருப்பை வைச்சிருக்க வேண்டும் அல்லது நெருப்பு வரக் கூடியதான ஏதோ ஒன்றினை வைச்சிருக்க வேணும். நல்லை நாதன் கூற, வச்சிரவேலு இடைமறித்து போன மாதம் இருபத்தி நாலாம் திகதி, கிட்டத்தட்ட

**◊ சி.வி. நாதன் ◊**

இரண்டு, மூண்டு மணியளவில் நீங்கள் எங்கிருந்தீர்கள் இவர்கள் இருவரும் தன் மேல் சந்தேகப்படுகின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டார் நீலகண்டர்.

நீங்கள் என்ரை தொழிலிக்கே களங்கம் செய்யப் பாக்கிறியள் எனத் தைரியமாகவே கூறிய நீலகண்டர், மேசை அறையைத் திறந்து அங்கிருந்தவற்றில் எதையோ கிளறிப் பார்த்தார். பின்னர் அவற்றில் இருந்து ஒரு 40 தாள் பயிற்சிப் புத்தகத்தை எடுத்துத் தாள்களை புரட்டினார். ஒரு பக்கத்தில் யூலை 24 என எழுதியிருந்தது. அப்பக்கத்தை விரித்து அப்படியே நல்லைநாதனிடம் கொடுத்த நீலகண்டர், நீங்களே வாசித்துப் பாருங்கோ என்றார். வாங்கிய நல்லைநாதன் அப்பக்கத்தினை பார்த்தார். தெளிவாகவும் ஒழுங்காகவும் அந்த நாளுக்கான அவரது நடவடிக்கைகளும், அவர் செய்யவேண்டிய காரியங்களும் பிரித்துப் பிரித்து எழுதி வைக்கப்பட்டிந்தன. அப்பக்கத்தில் இருந்த நேர ஒழுங்கில் நல்லைநாதனின் கண்கள் மேய, ஒரு மணியில் இருந்து ஐந்து மணிவரை இதே ஊரில் இருந்த தலைமைப் பூசகரின் வீட்டில், பூசகரின் மகளின் திருமணத்திற்கு நாள் குறிப்பதற்காகச் சென்றிருந்தார் என்பது எழுதப்பட்டிருந்தது தெரிந்தது.

அப்பக்கத்திலே தனது வலது கையின் ஆள்காட்டி விரலை வைத்துக் கொண்டு நீலநிறத்தில் மாணவர்களின் பயிற்சிக் குறிப்புப் புத்தகம் போலிருந்த அக்குறிப்புப் புத்தகத்தின் தாள்களை மறு கையால் புரட்டிப் புரட்டிப் பார்த்தவர் பின்னர் வச்சிரவேலுவிடம் கொடுத்தார். வச்சிரவேலு அதனைப் பார்த்துக் கொண்டிருக்கையில், நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டு எனக்கு நல்லாய் விளங்குது. எங்கை என்ரை கணிப்புச் சரியாக வரவேணும் எண்டதுக்காக இந்தப் பொல்லாத வேலையைச் செய்திருப்பேனோ எண்டு என்னிலை உங்களுக்கு ஐமிச்சம். நாலு தலை முறையாக, அதுவும் தெய்வ அனுக் கிரகத்துடன் இந்த உதவியை நாங்கள் செய்து வாறோம். என்ன செய்யிறது, எல்லாம் என்ரை தலைவிதி, நடக்கிறது நடக்கட்டும்.

கணியர் நல்லைநாதன் இது எங்கடை கடமை. யார் யாரை விசாரித்தோம், என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தோம், என்றெல்லாம் ரிப்போட் கொடுக்க வேணும். நெருப்பிலை எரிஞ்சவங்கள் தொடர்பான எல்லாரையும் விசாரிக்க வேண்டியது எங்கடை வேலையிலை ஒண்டு. அதைத்தான் நாங்கள் செய்யுறோம். நாங்கள் இந்தக் கொப்பியை கொண்டு போறோம். இன்னும் சில நாளிலை திருப்பித் தாறோம் என்ற வச்சிரவேலு நீலகண்டரைப் பார்க்க, அவரிடம் இருந்து மறுப்பு வரவில்லை. அந்தக் குறிப்புப் புத்தகத்தை எடுத்துக் கொண்டார். இன்னமும் சில கேள்விகளை நீவகண்டரிடம் கேட்ட பின்னர் இருவரும் புறப்பட்டார்கள்.

விடைபெறும்போது ஒரு மாசத்திற்கு வெளியூரில் எங்கையும் போய்த் தங்கவேண்டாம். அப்படி இனியில்லை எண்ட அவசியமெண்டால் எங்களுக்கு அறிவிச்சுப் போட்டுப் போங்கோ. மற்றது, அவசிய மெண்டால் சில சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு திரும்பவும் வரவேண்டியிருக்கும் எனக் கூறினார் நல்லைநாதன்.

நீலகண்டரிடம் விடை பெற்றுக் கொண்டு, திரும்பி வருகையில் வாகனத்தில் இருவம் பேசிக் கொண்டார்கள்.

ஏன் வச்சிரவேலு. நீலகண்டரிலை சந்தேகப்படத்தான் வேணுமா? எனக்கப்பிடித் தெரியேலை. யாரை நம்புறது நாதன்? தன்ரை கணிப்பிலை ஆணித்தரமாக இருக்கிறார் மனிசன். அதோடை பரம்பரை பரம்பரையாச் செய்யிற தொழில். நல்லாய் பேரும் எடுத்திட்டினம். தங்கடை பேரைக் காப்பாத்திறதுக்காக இப்பிடிச் செய்யிறவை யளும் இருக்கு. எதுக்கும் இவரிலை ஒரு கண் வைச்சிருக்கிறது நல்லது.

வாகனத்தில் இருவரும்தான் இருந்தார்கள். இப்படியான நேரங்களில் வாகன ஓட்டுனரை விட்டு இருவரும் மாத்திரமே வருவார்கள். வச்சிரவேலு எதுவும் கூறாமல் இருக்கவும், நல்லைநாதன் வாகனத்தை கோவிற் தலைமைப் பூசாரியின் வீட்டுக்குச் செலுத்தினார். அங்கு விசாரித்ததில் நீலகண்டர் கூறியது சரி எனத் தெரிய வந்தது. இருவரதும் காவல்துறைப் புத்தி நீலகண்டரை சந்தேகத்துடன் பார்த்தது. பல இடங்களில் துருவித் துருவி விசாரணைகள் செய்த போதிலும், உருப்படியான விபரம் எதுவும் கிடைக்கவில்லை. முடிவில் நிலகண்டர் இந்த விடயத்தில் சுத்தம் என்ற முடிவுக்கே இவர்களுக்கு வரவேண்டி வந்தது.

ஆனால், ஆச்சிவீடு எப்படி எரிந்தது? நாகராசனினதும் இன்பனினதும் மரணத்திற்கு என்ன காரணம்? ஏனோ தெரிய வில்லை இது வெறும் விபத்து என்று இருவரது மனமும் ஒப்பவில்லை.

இன்னமும் வரும்.


**IDOL BANQUET HALL**



50 - 250 பேர் கொள்ளக் கூடிய Banquet Hall இல் திருமணவிழா, பூப்புனித, பிறந்தநாள் வைபவங்கள் அனைத்தையும் சிறப்பாக கொண்டாடுவதற்கு

அழையுங்கள்: **416.908.8344**


# என் இதழியல்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒதுக்கினால், புறக்கணித்தால் அவர் என்னாவார் என்பதை நண்பனே! நீ நன்றாய் அறிந்திருப்பாய். தி.க. தி.மு.க ஆனதும், தி.மு.க.அ.தி.மு.க ஆனதும் பிறிதொரு பக்கமாய் தே.தி.மு.க தோன்றியதும் புறக்கணித்தல், ஒதுக்கல், கண்டுகொள்ளாமை என்பவையும் காரணங்களில் சில என்பது தெளிவானது தானே!

இலங்கையில் தேர்தல் வந்தது. தமிழரசுக் கட்சியிலிருந்து சுயாட்சிச் சிந்தனைகளோடு பிரிந்த எங்கள் தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினர் வ. நவரெத்தினம் புதிய கட்சி தொடங்க ஆயத்தமான நேரம். எங்கள் ஊர் கல்விக்கூடத்திறப்பு விழாவுக்கு வந்திருந்தார். நானும் சொற்பொழிவுக்காகப் போயிருந்தேன். நவத்தார் தனது பேச்சோடு பேச்சாகத் தமது கழக இதழான விடுதலைக்கு ஆசிரியராக வரும்படி எனக்குப் பகிரங்க அழைப்பு விடுத்தார். இதழுக்கு மட்டுமல்ல மேடைகளுக்கும் நீங்கள் வர வேண்டும். பச்சையப்பன் கல்லூரியால் வெளிவந்த அறிஞர் அண்ணாவை விடுதலை இதழுக்கும், மேடைக்குமாய் பெரியார் ஈ.வெ.ரா அழைத்தது போன்று புலவரை நான் அழைக்கிறேன் என்று பொதுமக்கள் மத்தியில் நவத்தார் மரியாதை தந்ததும் என் மனம் கனிந்தது.

சிதம்பரத்தில் இருந்தபோது தமிழ் தேசியக் கட்சி தொடங்கிய ஈ.வெ.கி.சம்பத், கவிஞர் கண்ணதாசனுடன் தமிழ் தேசியம் என்ற கோட்பாடு பற்றி உரையாடித் திரும்பியகாலம். தமிழர் சுயாட்சி பற்றிய உடன்பாடான சிந்தனை எனக்கிருந்ததால் குறிகாட்டுவான். 'பராசக்தி வித்தியாலயத் திறப்புவிழா முடிந்து நவத்தார் வீடு திரும்பும் போது விடுதலை இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்க வருகிறேன் என்று சம்மதத்தை அவருக்குத் தெரிவித்தேன். அவரும் சந்தோஷத்தில் தமது திறீறோசஸ் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு புறப்பட்டார். மிகுதியை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

# அந்தக் குளியல் அறைக்காட்சி...

"என் இனிய பொன் நிலாவே, பொன் நிலவில் என் கனாவே" பாடல் படு "பேமஸ்"! மூடுபனி படத்தில் பிரதாப் போத்தன் கிடார் வாசித்துக் கொண்டு பாட "சிம்பிள்" ஷோபா எதிரில் இருந்து கொண்டு இயற்கையான முக பாவங்கள் கொடுத்துக்கொண்டு இருப்பார். ஈரோஸ் (பாமன்கடை) திரையரங்கில் படம் பார்த்து விட்டு வந்து, "என்ன படமடா பார்த்தனி", என்ற வீட்டுக் கேள்விக்கு ஏதோ அப்போது ஓடிக்கொண்டிருந்த சிவாஜி படம் பெயர் சொன்ன நினைவு. (ஏனென்றால் "மூடுபனி" வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று திரையிடப்பட்ட படம்!) ஒரு சில கொலைகள், காரணம் பிரதாப் ஒரு "சைக்கோ" என்ற கிளைமாக்ஸ் ஒடு முடியும் படம் ஒரு பாலு மகேந்திரா ஸ்பெஷல்! அவரின் முக்கிய படங்கள் மூடுபனி, மூன்றாம் பிறை, அழியாத கோலங்கள் என்று சொல்லலாம். ஆனால் பின்பு "நீங்கள் கேட்டவை" என்று நாங்கள் அவரிடம் கேட்காததைப் படம் எடுத்துத் தோல்வி கண்டார். பல காலத்துக்குப் பின்னர் மறுபடியும் "அட, பாலுமகேந்திரா" என்று சொல்ல வைத்த படம் "மறுபடியும்"!

மூடுபனி பற்றி வந்த விமர்சனங்களில், அது "சைக்கோ" படத்தை அடியொற்றியது எனப் பலர் எழுதி இருந்தார்கள். அண்மையில் Bell Light Box திரையரங்கில் திகில் பட மன்னர் Alfred Hitchcock, 1960 இல் இயக்கி மாபெரும் வெற்றி பெற்ற 'Psyhco' படம் பார்த்தேன். கறுப்பு வெள்ளையில் அந்தக் காலத்தில் பல லட்சம் பேரைப் பயமுறுத்திய படம், 50 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும் போது சாதாரணமாகத் தான் இருக்கிறது. இதன் முக்கிய காரணம் இந்தப் படத்தின் கருவை பலர் பல்வேறு படங்களில் பயன்படுத்தி விட்டது தான்.

தன் முதலாளியிடம் இருந்து 40,000 டாலர்ஸ் திருடிக்கொண்டு தப்பி ஓடும் மரியன் (Janet Leigh) வழியில் இருட்டி விட ஒரு தனிமையான விடுதி ஒன்றில் தங்குகிறாள். "எங்களிடம் 12 அறைகள் இருக்கின்றன, 12 உம் இப்போது காலி. எது வேண்டும்?" என்று கள்ளமில்லாச் சிரிப்புடன் வந்து நிற்கும் நோர்மன் (Anthony Perkins) தான் படத்தின் "சைக்கோ" நாயகன். ஒதுக்குப்புறமான தங்கும் விடுதி அதை அடுத்திருக்கும் பாழடைந்த மாளிகை. அங்கே தான் தானும் அம்மாவும் தங்கி இருப்பதாகச் சொல்கிறான் நோர்மன். எதைப் பற்றியும் சந்தேகம் கொள்ளாமல் அங்கே இரவு தங்குகிறாள் மரியன்.

"சைக்கோ" திரைப்படம் என்றதும் எல்லோருக்கும் நினைவு வருவது, படத்தில்



**- கிறிஸ்ரி-**

இடம் பெறும் மரியனின் குளியல் அறைக் காட்சி! (கற்பனைக் குதிரைகளைத் தட்டி விடாதீர்கள் ஏனென்றால் படம் வந்த ஆண்டு 1960!) சுகமான குளியல் போட்டுக் கொண்டிருக்கும் மரியனுக்கு, மங்கலாகக் குளியல் திரைக்கு (shower curtain!) வெளியே தெரியும் உருவம், கையில் கத்தி! அதைப் பார்த்து மரியன் போடும் கூகூகூகூச்சல் பல பார்வையாளர்களின் தூக்கத்தை பல வாரங்களுக்குக் கலைத்தது. பல பெண்கள் குளியல் அறைப் பக்கமே போகப் பயப்பட்டார்கள். (உங்கள் நண்பர்கள் பல நாட்கள் குளிக்காமல் இருக்கிறார்களா?, அவர்கள் மேல் கருணை வையுங்கள் அண்மையில் அவர்கள் "சைக்கோ" படம் பார்த்திருக்கலாம்!) இந்தக் காட்சியின் பின்னணி இசைக்கு 100 வயலின்கள் பயன்படுத்தப்பட்டன என "உலக சினிமா" புத்தகம் தெருவிக்கிறது (எஸ். ராமகிருஷ்ணன்)

மரியன் கொல்லப்பட அதைத் துப்புத் துலக்க வரும் துப்பறிவாளரும் மர்மமான முறையில் மறைந்து விட, மரியனின் காதலனும் அவளின் தங்கையும் கடைசிக் காட்சியில் அந்த மர்ம மாளிகையில் கண்டு பிடிக்கும் ரகசியம் நிச்சயம் அந்தக் காலத்தவர்களின் இதயத் துடிப்புகளை சில விநாடிகளுக்குத் துண்டித்திருக்கும். திகில்



படங்களின் தந்தை எனப் போற்றப்பட்ட Alfred Hitchcock எடுத்த படங்களிலேயே வர்த்தக ரீதியாக வெற்றி பெற்ற ஒரே படம் "சைக்கோ" எனச் சொல்லப்படுகிறது.

Universal Studios, California வில் இன்றும் திரைப்படத்தில் இடம்பெறும் தங்கும் விடுதி, மற்றும் கொலையாளியின் வீடு இரண்டும் ஒரு model set ஆக காட்சிக்கு இருக்கிறது. நீங்கள் அங்கு இருக்கும் Studio வைச் சுற்றிக்காட்டும் குட்டி ரயில் பயணத்தில் போகும் பட்சத்தில் இதைப் பார்க்கலாம். ரயில் அந்த இடத்தை தாண்டும் போது நோர்மன் கொல்லப்பட்ட ஒரு பெண்ணை தன் கார் ட்ரன்க் உள்ளே ஏற்றுவதாக காட்சி நடித்துக் காண்பிக்கப்படும். பின்பு கொலையாளி உங்களைத் திரும்பிப் பார்ப்பான். திடீர் என்று கத்தியை எடுத்துக்கொண்டு உங்களை நோக்கி "சைக்கோ" போல ஓடி வருவான். "வீல்" என்று கத்துவதும் கத்தாமல் இருப்பதும் உங்களைப் பொறுத்தது. (ஆனால் சுற்றுலா ரயில் அங்கு வந்தவுடனயே உங்களுடன் உட்கார்ந்திருக்கும் பயணிகள் சிலர் அலறத் தொடங்குவது பெரிய பகிடி!)

தமிழ் சினிமாவிலும் ஆங்காங்கே திகில், கொலை, பேய், ஆவி என சில படங்கள் வந்து போய் இருக்கின்றன. "அதே கண்கள்" திரைப்படம் பார்த்த போது, ஆரம்பத்தில் ஒரு அறிவிப்பு இருந்தது. "இந்தப் படத்தின் முடிவை தயவு செய்து யாருக்கும் சொல்லாதீர்கள்!". பின்பு ஜெய்ஷங்கர் பல திகில் படங்களில் நடித்து இருந்தார். அதில் "துணிவே துணை" என் நினைவில் நிற்கும் படம். ஆனால் என் அபிமானத் திகில் படம் "ஊமை விழிகள்" (தலைப்பில் இருந்தே கலக்கி இருந்தார்கள்)

அற்புதமான பாடல்கள், (படம் வெளிவரும் முன்னே "தோல்வி நிலையென நினைத்தால்" பாட்டு "காம்பில" எடுத்த பாட்டாம் என்று ஒரு பரபரப்பு அடிபட்டது!)

தமிழுக்கு வித்தியாசமான கதை, மாறுபட்ட இசை என திரைப்படக் கல்லூரி மாணவர்கள் ஒரு உலுக்கு உலுக்கிய படம் ஏனோ எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை என்றே சொல்லலாம். நம்மவர் படங்களில் "Red Winter" ஒரு அருமையான முயற்சி என்று பாராட்டலாம்!

"ஹலோவீன்" நேரத்தில வந்திருக்க வேண்டிய கட்டுரை, என்ன செய்யுறது குட்டிக் குட்டிப் பேய்களுக்குப் பயந்து ஒளிஞ்சு இருந்தனான். இப்பதான் உயிர் வந்தது!

ஹி, ஹி, ஹி!

ADROIT HOME INSPECTION
Qualified, Professional Inspector
Home Renovation
& Preventive
Maintenance Tips
Call : Siva
416-875-6474
www.adroithomeins.com


# முகம் பொலிவு பெற முத்தான ஆலோசனைகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

பொதுவாக ஆண்களும் பெண்களும் தத்தமது முகம் அழகாகவும் இளமைப் பொலிவுடனும் திகழவேண்டுமென்று விரும்பினாலும் பெண்களே இதில் கூடிய கவனம் செலுத்துகின்றனர். ஆனால் பெரும்பாலான ஆண்கள் தாம் எப்படி இருந்தாலும் பரவாயில்லை தமது மனைவிமார் அழகாகக் காட்சிதரவேண்டுமென்றே விரும்புகின்றனர். எல்லோருக்கும் பருவவயதில் வரக்கூடிய பருக்கள், அவர்களின் உணவு முறைகள், நாளமில்லா சுரப்பிகளின் தொழில்பாடுகளைப் பொறுத்து அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வரும். இனி பருக்கள் வரும் காரணத்தையும் அதைக் குணப்படுத்தும் வழிகளையும் பார்ப்போம்.





1. கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவை முடிந்தவரை தவிர்க்க வேண்டும்.

2. ஐஸ்கீரிம் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

3. பருக்களை கிள்ளக்கூடாது. அதனால் மேலும் அதிக பருக்கள் உண்டாகும்.

4. பருக்கள் உடையவர்கள் முக கிரீம்களை அறவே உபயோகிக்க கூடாது. காரணம் தோலில் அடைப்பை உண்டாக்கி வேர்வை நீர் தடைப்பட்டு பருக்கள் அதிகம் உருவாகும்.

5. மலச்சிக்கல் உருவாகாது பார்ப்பதுடன் அசைவ உணவை உட்கொள்ளாது விடுவது நல்ல பலனைத் தரும்.

6. முகத்தில் அதிகம் எண்ணெய் பசை உண்டாகாது பார்ப்பதுடன் சோப்பையும் அடிக்கடி மாற்றக்கூடாது.

### முகப்பருக்களை குணமாக்குதல்

1. சீரகத்தைப் பொடி செய்து தேங்காய் பாலுடன் சேர்த்து முகத்தில் தடவி வந்தால் குணமாகும்.

2. முட்டையின் வெண்கருவை மட்டும் எடுத்து முகத்தில் தடவி சிறிது நேரம் உலரவிட்டு பின் சோப்பின் உதவியுடன் முகத்தை கழுவி வந்தால் பருக்கள் உதிர ஆரம்பிக்கும்.

3. பாசிப் பருப்பை பவுடராக்கி அதைத் தேய்த்து முகத்தை கழுவி வர பருக்கள் மறையும்.

4. சந்தனத்தையும் பன்னீரையும் கலந்து முகத்தில் பூசி வந்தால் பருக்கள் தோன்றாது.

### முகத்தை அழகுபடுத்தும் பயிற்சிகள்

**மூச்சுப்பயிற்சி**

முதுகுத் தண்டினை வளைக்காது நேராக இருந்து கொண்டு (தூய்மையான இடத்தில்) வாயினைச் சுருக்கி குவித்தபடி வேகமாக வாய்வழியாக காற்றை உறிஞ்சி உள் இழுக்கவும். பின் இழுத்த காற்றை வாயை மூடியபடி மூக்கின் வழியாக மெதுவாக வெளிவிடவேண்டும். திரும்பவும் அதேபோல் வாய்வழியாக உள்வாங்கி மூக்கின் வழியாக 10 தடவைகள் வெளிவிடவேண்டும். இதனை காலை மாலை தினமும் செய்துவர முகம் புதுப்பொலிவு பெறுவதுடன் தோலும் பளபளப்பாக மாறும்.

### முகத்தின் எழிலும் இயற்கை உணவு முறையும்

இயற்கை உணவுகளான பச்சைக் காய்கறிகள் பழங்கள் இன்றும் புரதச் சத்துகள் நிறைந்த தானியவகைகளை நாள்தோறும் உண்ணும்போது முகத்தின் நிறத்திலும் தோற்றத்தில் ஏற்படுத்தும் மாற்றத்தையும் ஒருசில வாரங்களிலேயே அவதானிக்க முடியும். எனினும் மலச்சிக்கலும் செரியாமையும் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும். வெந்நீரில் அதிக நேரம் குளிப்பது தோலில் சுருக்கத்தை ஏற்படுத்தும்.

### முகப்பொலிவும் யோகாவும்

முகத்தின் அழகைத் தீர்மானிப்பதில் தைரொய்டு சுரப்பி முக்கியபங்கு வகிக்கின்றது. பொதுவாக 80%மான பெண்களுக்குத் தைரொய்டு குறைபாடுகள் காணப்படுகிறன. இதனை நிவர்த்தி செய்யக்கூடிய சர்வாங்க ஆசனத்தை தினமும் 5 நிமிடமாவது பயிற்சி செய்துவர முகம் பொலிவு பெறும்.

அடுத்து தலைப்பகுதிக்கு போதுமான தூய்மையான ரத்தம் கிடைக்குமாயின் முகம் மிகவும் இளமைப் பொலிவும் கவர்ச்சியும் உடையதாக மாற்றமளிக்கும். பொதுவாக வயது ஏற ஏற இருதயத்திலிருந்து தலைக்கு வரும் ரத்தத்தின் அளவு குறைந்து கொண்டு போகும்.

சிரசானம், ஹலாசனம் போன்ற ஆசனப்பயிற்சிகள் பெரும் துணை புரிகின்றது. இறுதியாக தினமும் குறைந்தது 5 நிமிடமாவது தியானப் பயிற்சி (Meditation) செய்து வருவது அனைவருக்கும் இன்றியமையாதது. இதன் மூலம் உள்ளத்தில் ஏற்படும் பரபரப்பு, மன இறுக்கம் என்பன நீங்குவதால் முகம் சாந்தமாகவும், பிரகாசமாகவும் காட்சிதரும்.

மேற்கூறியவற்றை அனைவரும் கடைப் பிடிக்கும்போது முகப்பொலிவும் இளமையும் அழகும் அதிகரித்து வாழ்வில் அமைதியும் ஆரோக்கியமும் நீடிக்கும்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

**HERBALL WELLNESS CENTRE**
3005 Islington Ave., NorthYork, ON
**(Wellness Centre To Nurture Spirit Mind & Body)**

(1) மருந்தை அருந்தாமல் மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தி அமைதி காணும் வழிமுறை

(2) எந்த வயதில் உள்ளவராயினும் மன அமையின்றி தவிகிகிறீர்களா? உடல் பருமன், உள உளைச்சல், மனவிரக்தி இவற்றினால் கவலைப்படுகிறீர்களா?

(3) கவலையை விடுங்கள். உங்களுக்கு வாழ்க்கை முறைப்படி இயற்கை வழியில் உங்கள் மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தும் மூலிகைகள், தியானம், யோகப் பயிற்சிகள், ஓய்வு எடுக்கும் முறை என்பன கற்றுத்தரப்படும்.

(4) பலவிதமான சித்த வைத்திய ஆலோசனைகள் உடலுக்கேற்ப அருந்தும் உணவு என்பன விசேட சேவைகளாகும்.

(5) 3 நாள் பயிற்சிப் பட்டறை, 5 நாள் பயிற்சிப் பட்டறை, 7 நாள் பயிற்சிப் பட்டறை என்பன நடைபெறும்.

(6) இங்கே 3 நாள் பயிற்சி பட்டறையில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பயன் நீங்கள் 30 நாட்கள் விடுமுறை செல்வதால் ஏற்படும் பயனுக்கு சமனாகும்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு Clinic ஆரம்பித்தது வைக்கப்படும். குறிக்கப்பட்ட இருப்பிடங்களே உண்டு. உங்கள் தேவைக்கு முந்துங்கள்.

அமைதியை நாடி அழையுங்கள் 416.997.4357
குறள்நெறி - லலிதா ஜசிக்கா

YARL WINDOW BLINDS & DRAPERY
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
VENETIAN/VERTICAL/ROLLER WOOD/FORMWOOD BLINDS WOOD & VINYL SHUTTERS
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds
CALL: N. SELVAM





We have experience to make your home more beautiful

# பொன்னர் - தம்பர்

தம்பர்: வணக்கம் தம்பி. நாலைஞ்சு மாதமாய் ஆளைக்காணவே முடியவில்லை. என்ன நடந்தது.

பொன்னர்: ஒன்றுமில்லை அண்ணை. இடம் மாறிவிட்டேன். அதனாலே காணமுடிய வில்லை. இனிமேல் அடிக்கடி சந்திக்கலாம்.

தம்பர்: உன்னைக் கண்டால் தானே எனக்கு வாற சந்தேகங்கள் சிலவற்றைக் கேட்கலாம். நான் நேற்றைக்குப் பத்திரிகையில் பார்த்த ஒரு விசயம் மண்டைக்கை குடைஞ்சு கிடக்குது. உன்னைக் கண்டால் அதற்கான விளக்கம் கேட்கலாம் என எண்ணினேன். நான் நினைத்தேன் நீ நிற்கிறாய். உனக்கு நூறு வயது தம்பி

பொன்னர்:அதென்ன அண்ணை உங்கடை மண்டையைக் குடையுற விசயம்.

தம்பர்: அதுதான் தம்பி அந்த மாக்மாஸ்ரர் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சியாளர்கள் ஏதேதோ கண்டு பிடிச்சிட்டாங்களாம். தோலிலையிருந்து இரத்தம் எடுக்கப் போகிறாங்களாம். ஏன் தம்பி தெரியாமல் தான் கேட்கிறன். தோலிலை கீறு விழுந்தல் குபுக்கென இரத்தம் வருகுது. டாக்குத்தர் மார் இரத்தம் எடுக்கேக்கையும் தோலைக் குத்தித் தானே இரத்தம் எடுக்கினம். அப்ப இவை என்னத்தைக் கண்டு பிடிச்சிட்டனம் எண்டு இவ்வளவு போட்டுக் குதிக்கினம் தம்பி.

பொன்னர்: இல்லை அண்ணை. நீங்கள் விளங்காமல் கதைக்கிறீங்கள். எங்கடை தோலிலை இரண்டு பகுதிகள் உள்ளன. இவை மேற்றோல் (Epidermis), உட்டோல் (Dermis) என்பார்கள். மேற்றோலிலே தான் கலங்கள் படை-களாக உள்ளன. உட்தோல் தொடுப்பிழையம், குருதிக்கலன்கள் நாரூரம்பர்கள் போன்ற தனிக்கலங்கள் போன்றவற்றின் சேர்க்கையாக உள்ளது. இங்கிருந்து தான் குருதி வெளியே வருகிறது. ஆனால் ஆய்வாளர் சொல்வது அதையல்ல. மேற்றோலிலே உள்ள கலங்களை குருதியாக



மாற்றும் வித்தை பற்றியே அவர்கள் கூறுகிறார்கள்.

தம்பர்: அட, அட அதுவா விசயம். இந்த மரமண்டைக்கு அது தெரியாமல் போச்சு. அது எப்படித் தம்பி.

பொன்னர்: அண்ணை இந்த மேற்றோலிலே நான்கு வேறுவேறான படைகள் உள்ளன. ஆக வெளிப்புறத்திலே உள்ளபடை கொம்புப் பொருட்படை எனப்படுகிறது. அது இறந்த தட்டையான கலங்களால் ஆக்கப்பட்டது. ஏதாயினும் உராய்வின் போது அது உரிந்துவிடும். அதற்குக் கீழே உள்ள படை தெளிவுப்படை எனவும் அதற்குக் கீழே உள்ளதை சிறுமணிப்படை எனவும் அழைப்பார்கள்.. அடியிலே காணப்படும் நாலாவது படை முளைப்படை எனப்படுகிறது.

தம்பர்: தம்பி நான் கேட்டது என்னவோ நீ எனக்கு தோல்பற்றிப் பாடம் எல்லே எடுக்கிறாய். என்ரை விசயத்துக்க வர இன்னும் ஐந்தாறு நாளாவது எடுக்கும் போலை.

பொன்னர்: கொஞ்சம் பொறு அண்ணை. எனக்கும் தெரிந்ததை யாருக்காவது சொல்லலாம் அண்ணையென்றால் பெரிய பிகு பண்ணுகிறாயே.

தம்பர்: மாட்டிப் போட்டன். சரி சொல்லித் தொலை.

பொன்னர்: அண்ணை தோலின் மேற்பரப்பு உராய்ந்து உராய்ந்து போக கீழே உள்ள கலங்கள் அந்த இடத்துக்குத் தள்ளப் படுகின்றன. ஆகவே புதிய புதிய கலங்கள் தோன்ற வேண்டுமல்லவா. அவற்றினை இந்த முளைப்படை தொடர்ந்து உருவாக்குகிறது. புதிதாக உருவாகின்ற கலங்கள் எளிமையான வியத்தம் அடையாத கலங்களாக உள்ளன.

தம்பர்: அதென்ன தம்பி வியத்தம் என்கிறாய்.

பொன்னர்: அதுதான் அண்ணை அந்தக் கலங்கள் இன்னும் இளகு தன்மையில் உள்ளது. குழைத்த மாவைப்போல என்று தேவைக்கு ஏற்ப அதனைப் பிட்டு ஆக்கலாம் அல்லது இடியாப்பமாக்கலாம் ஏன் களிகூடச் செய்யலாம்.

தம்பர்: அதுக்கும் இதுக்கும் என்னப்பா தொடர்பு. தலைக்கே என்னவோ செய்யுது.

பொன்னர்: அண்ணை உட் தோலிலும் வியத்தமடையாத நிலையில் நாரரும்பர்கள் என்ற கலங்கள் உள்ளன. மக்மாஸ்ரர் பல்கலைக் கழகத்தின் டாக்டர் பாட்டியா தலைமையிலான குழாம் இந்த வியத்தமுறாத நிலையில் உள்ள தோற்கலங்களையே குருதிக் கலங்களாக மாற்றியுள்ளனர்.




## எழுதுவது: கனகர்

தம்பர்: அட பரமசிவனே. இப்போதான் விசயத்துக்க வாராய். கேட்கப் பயமாயிருக்கிறது. நீ மீண்டும் பரதேசத்துக்குக் கொண்டு போய்விடுவா யென்று. ஆனாலும் ஒரு சந்தேகம். அது எப்படி மாற்றினார்கள் என்பது பற்றித் தெரிய லாமா. கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லு தம்பி.

பொன்னர்: தண்டுக்கலங்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் தானே. இதுநாள் வரை கருக்கட்டிய முட்டையிலிருந்து பெறப்பட்ட அரும்பரப் பாத்துக்கள் அல்லது தொப்பூள் நாணில் உள்ள கலங்களை உபயோகித்துத் தான் தண்டுக் கலங்களைப் பெற்றனர். அத்தண்டுக் கலங்களை பல்திறனுள்ள (pluipotent) கலங்கள் என்பார்கள். அந்தக் கலங்களை தேவையான இழையத்தினை உற்பத்தி செய்வதற்கு அதற்கான வளர்ப்புக் கரைசலில் வளர்க்க வேண்டும். அவற்றிலிருந்து எந்தவிதமான இழையத்தையும் பெறமுடியும்.

தம்பர்: அப்படிச் செய்யலாம் என்றால் இந்தக் கண்டுபிடிப்புக்கு ஏன் அத்தனை கூச்சல்.

பொன்னர்: இது மிகச் சிறந்த முறை. நேரடியாகவே மனிதனுடைய தோலினை எடுத்து அதனை குருதியாக்க முடியும். ஒரு முட்டைக்கோ அல்லது தொப்பூள் நாணுக்கோ அலைய வேண்டியதில்லை. இன்னும் சொல்லப் போனால் ஒருவருக்குக் குருதி தேவை என்றால் அவருடைய தோலில் ஒரு சிறு பகுதியை எடுத்து குருதியை உருவாக்கினால். இழைய நிராகரிப்பு (tissue rejection) என்பதே ஏற்படமாட்டாது அல்லவா.

தம்பர்: அப்போ பாராட்ட வேண்டியது தான். எனது மருமகளுக்குக் கருப்பையிலை ஒரு சிறிய சினைப் பை (Cyst) உள்ளதாம். அதனை அகற்றப் போகிறார்கள். ஆகவே இரத்தம் கொடுப்பது பற்றிய பிரச்சினை இல்லைத்தானே.

பொன்னர்: சரியாப் போச்சு! அண்ணை இது நடைமுறைக்கு வர இன்னும் குறைந்தது ஐந்து வருடமாவது எடுக்கும்.

தம்பர்: பூ ! அப்படியா அப்போ நாங்கள் எல்லாம் இது நடைமுறைக்கு வருமுன்னர் கைலாயம் போயிடுவம் தம்பி.

பொன்னர்: விசர்க் கதை பேசாதை அண்ணை. இந்தக் கண்டு பிடிப்பால் சமூகம் எத்தனை அனுகூலம் பெறப்போகிறது தெரியுமா? முக்கியமாக இந்தப் புற்று நோய் உள்ளதே அது 2015ஆம் ஆண்டிலே ஒவ்வெரு மூன்று பேரில் ஒருவருக்காவது ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது என ஆராயச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

தம்பர்: ஓம் தம்பி அது பெரிய கொடுமைதான். அதற்கும் இதற்கும் என்ன தம்பி?

பொன்னர்: குருதிப் புற்று நோய் (leukemia) மாற்றுதற்கு என்பு மச்சைக்குத் தேடிக் கிடைக்காமல் இறந்தவர்கள் எத்தனை பேர். பலர் கொடுக்க முன்வருவார்கள், ஆனால் 100,000த்தில் ஒருவருடையதுதான் ஒத்துப் போகும். இந்தக் கண்டுபிடிப்பு சுலபமாக அதனைக் கையாள வழிவகுக்கிறது.

தம்பர்: நல்ல விசயம் தான்.

பொன்னர்: மேலும் அண்ணை பல்வேறு விதமான புற்றுநோய்களுக்கு இரசாயன வைத்தியம் (Chemotherapy) செய்வார்கள். அப்பொழுது அந்த மருந்து புற்றுநோய்க் கலங்களை அழிப்பதோடு நின்று விடுவதில்லை. குருதிக் கலங்களையும் அழித்து விடுவதால் வைத்தியர்கள் ஒரு கட்டத்தில் இரசாயன வைத்தியத்தினை நிறுத்தி விடுவதுண்டு. இந்தக் கண்டுபிடிப்பு செயல் முறைக்கு வந்து விட்டால் தொடர்ந்தும் நோயாளிக்கு இரசாயன வைத்தியம் செய்ய முடியும். புற்று நோயிலிருந்து நோயாளியைக் காப்பாற்ற முடியும்.



தம்பர்: அப்போ நாளைய சமூகத்துக்கு நல்ல நல்ல செய்திகள் காத்திருக்கின்றன என்று சொல்லு தம்பி.

பொன்னர்: ஆம் அண்ணை நோயற்ற சமுதாயம் ஒன்று உருவானால் நல்லது தானே அண்ணை.

தம்பர்: ஏதோ தம்பி. கொஞ்சம் புரிந்ததும் மாதிரியிருக்குது, கொஞ்சம் புரியாதமாதிரியும் இருக்குது. ஆனால் மொத்தத்தில் எனது அறிவு கொஞ்சம் விசாலமாகியிருக்கிறது உன் தயவால். வாறேன் தம்பி

பொன்னர்: அடிக்கடி சந்திப்போம் அண்ணை.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# நான் யார்?

எனது உள்ளார்ந்த சாராம்சம் என்ன என்பது எனக்கு நன்கு விளங்கினபடியால் நான் இப்போ அஞ்சாது விசுவாசத்துடன் வாழ்கிறேன்.

ஒன்றை அடைவதில் தோல்வி கண்டாலும் அதைக் கைவிடு முன் இன்னும் எத்தனை முறை நீ முயற்சி செய்ய வேண்டும்? மனம் தளர்ந்து இப்போ உன் முயற்சியைக் கைவிட்டால் எப்போ வெற்றி காண்பது? உன்னால் இயன்றவரை முயற்சி செய்தும், நீ விரும்பியமாதிரி அது நடக்கவில்லை என்றால் அதன் அர்த்தம் என்ன? இதற்குப் பிறகும் அதை நீ விரும்பக் கூடாது என்பதா? ஆனால் அதை இன்னும் நீ விரும்பினால்? உன்னையே நீ கேட்க வேண்டிய கேள்விகளுக்கு ஒரே ஒரு பதில் தான் இருக்கிறது. அது என்ன? உன்னையே நீ பூரணமாகப் புரிந்து கொள்வதுதான் அது. நீ யார் என்பதை முற்றிலும் நீயே உணர்ந்தால் தான் வாழ்வெனும் யாத்திரையில் உனது குறிக்கோளை எய்திடுவதற்கு வேண்டிய நம்பிக்கை உனக்கு வரும்.

நீ யார்? உண்மையில் நீ விரும்புவது என்ன என்பது உனக்கு நன்கு தெரிந்திருந்தால் இதையா அதையா எனும் ஊசலங்களுடன் முயற்சி செய்து, ஆசையுடன் எதிர்பார்த்து பின்பு ஏமாந்து தத்தளிக்கும் நிலை உனக்கு ஏற்படாது. உன்னைப்பற்றி நல்ல புரிந்துணர்வு உனக்கு இருந்தால் வாழ்வில் உனக்கு ஏற்படும் சகல அனுபவங்களையும் திறந்த மனதுடன் வரவேற்பாய். சுயமுன்னேற்றம் அடைந்து இன்னும் எவ்வளவோ சிறப்புடன் வாழ்வதற்கு உனது ஒவ்வொரு அனுபவமும் உனக்கொரு படிக்கல் என்பது உனக்கு நன்கு விளங்கும். இத்தகைய மனப்பான்மையுடன் புதிய விழிப்புணர்வுகள், புதிய தகவல்களை ஆர்வத்துடன் நீ வரவேற்பாய். நீ விரும்புவதை அடைந்திட உனது பயணத்தில் ஒவ்வொரு கணமும் உனக்கு ஏற்படும் அனுபவங்களால் உனக்கு உதவி செய்யும்.

சுயஅலசலினால் உனது பலம் என்ன பலவீனம் என்ன என்பதைப் பற்றி உனக்கு நன்கு தெரிந்திருக்கும். சரியான பாதையில் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் உன்னைப் பற்றிய பரிமாணம் பற்றி மேலும் மேலும் நீ கற்றுக்கொள்கிறாய். நீ யார் என்பது உனக்கு நன்கு புரிந்ததும், உனக்குள்ளிருந்து நன்றியுணர்வு பொங்கிப் பெருகும். நீ சந்தித்து அனுபவித்தவை, சாதித்தவை, பெற்றுக் கொண்டவை, தொலைத்தவை போன்ற யாவற்றிற்கும் நீ நன்றியாயிருப்பாய். குறைபாடற்ற முழுமையான இந்த நேரத்தில் ஒருவித கேள்விகளுமில்லாமல் வாழ்வில் நீ எங்கே போக வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதும் உனக்கு நன்கு தெரிந்திருக்கும்.

**பதிலே தெரியாத பல கேள்விகளால் இதுவரை நீ உன்னைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்திருக்கலாம். உன்னைப்பற்றி நீ கேட்கும் இந்தக் கேள்விகளே இன்று சுயஅலசலால் உனக்கு உன்னைப் பற்றிய புதிய விழிப்புணர்வை உருவாக்கட்டும். என் வாழ்வைப் பற்றிய என் கேள்விகள், சுயஅலசலினால் என்னைப்பற்றிய பூரண புரிந்துணர்வை இன்றுமுதல் எனக்குக் கற்பிக்கட்டும்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

182

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புருடி

216

நகைச்சுவைத் தொடர்

## ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

விளக்கேற்ற வாருங்கள், விளக்கேற்ற வாருங்கள்.



மழைக்கால இருட்டிலை தோட்ட வெளியாலை வரேக்குள்ளை இடைக்கிடை மின்னிமின்னி எரியும் வெளிச்சம் இப்பவும் கண்ணுக்குள்ளை நிக்குது. அன்னம்மாக்கா எண்டு தொடங்கினா செக்கண்ட்புளோர் செல்லம்மா. கந்தசஸ்டி விரதம் முடிச்சு விரத விசேட மலிவுவிலையில் வாங்கிய நண்டு கணவாய் விளைமீன் எல்லாம் காலியாக்கிவிட்டு களையில் அரைத்தூக்கத்தில் ம்..ம்..என முனகினா. ஆட்டிலறி. அன்னம்மா.



உலகர்..பெருமூச்சுவிட்டபடி சொன்னார்... ரோட்டுத், தெருக்கள்ளை லைற் இல்லாத காலத்தில் விளக்கீட்டுக்கு வீடு.. வளவெல்லாம் கார்த்திகை..விளக்கீட்டுக்கு பந்தங்கள் கொழுத்தி..வைத்து ஊரே ஒளியில் மின்னியது ஒருகாலம்.
இன்று ஒரு பந்தமுமில்லை..வீட்டுக்குள்ளை இருக்கிற லைற்றையே..கறன்ற் செலவெண்டு போடுதுகளில்லை என ரூபியைப்பார்த்து செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்ல..

விளக்கேற்ற வாருங்கள், விளக்கேற்ற வாருங்கள்,





ரூபியின் சிவந்த முகம் மேலும் சிவந்ததை ஆட்டிலறி அன்னம்மா கவனிக்கத் தவறவில்லை. ரூபன் இன்ரநெற்றில் நியூஸ் பார்த்துக்கொண்டிருப்பதை உலகர் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்தார். உலக நாடெல்லாம் மாவீரர் தின நினைவுகள். அதைவிட யார் இறந்தார்கள் யார் உயிரோடிருக்கிறார்கள் எனத்தெரியாமல் பல உறவுகள் நடைப்பிணமாகத் திரிகின்றனர். இதே வேளையில் வீடுகளில் சர்வாலயதீபம் திருக்கார்த்திகையன்று குமாராலயதீபம் யாருக்கு நினைவுவரும்.



முருகேசர் வழமைபோல தனது ஐயப்பன் வழிபாட்டிற்கான ஒழுங்குகளைச் செய்யத்தொடங்கினார். ஓரிருதடவை சபரிமலைக்குச்சென்று வந்திருக்கிறார். ஆனால் இப்போ வீட்டுப்படியேறுவதே கஸ்டமாக இருக்கிறது. 16ம்திகதி ஐயப்பன் மண்டல பூசை ஆரம்பம். முன்புபோல பஸ்சில்கூட பிரயாணம் செய்யமுடியாது. யோசித்துக்கொண்டே ஐயப்பன் பாடலைக் கேட்டுக்கொண்டிருந்தார்.





உலகண்ணை இந்தமாதம் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் தினம். முந்தி கொள்ளைக்காரருக்கு எதிராக கப்பலோட்டியதமிழர் அவர். ஆனால் இன்று எத்தனை தமிழர்களின் கப்பல்கள் எந்தெந்த கடல்களினால் தமது நாட்டிற்குள் வந்துவிடுமோ என்ற பயத்தில் மீனைப்போல தூங்காது விழித்திருக்கிறார்கள் கடற்படையினர் என்று சிரித்துக்கொண்டு சொல்ல, ஏன் உள்ளூர்கலவரத்தை ஊதிப்பெரிசாக்கி ஆயுதங்கள் கொடுத்து அப்பாவி மக்களைக் கொன்ற, கொல்கின்ற, கொல்லப்போகின்ற உலகநாடுகள் கடலில் விழித்திருந்தாலென்ன காட்டில் விழித்திருந்தாலென்ன.



அரசன் அன்றுகொல்வான், தெய்வம் நின்றுகொல்லும்.

விளக்கேற்ற வாருங்கள். விளக்கேற்ற வாருங்கள்.

# என்றும் இனியவை



முகத்தில் மலர்ச்சி
அகத்தில் எழுச்சி
தூக்கத்தில் ஆழம்
துக்கத்தில் நிதானம்
என்றும் இனியவை

வேற்றுமையில் ஒற்றுமை
உறவில் துறவு
நன்மையில் தீமை
தீமையில் நன்மை
என்றும் இனியவை

பள்ளியில் பல கலைகள்
வேலையில் அயராமுயற்சி
நட்பில் சமத்துவம்

பகையில் கனிப்பு
என்றும் இனியவை

கோபத்தில் அமைதி
ஆபத்தில் உதவி
பெருமையில் அடக்கம்
என்றும் இனியவை

பாட்டில் தளம்
வீட்டில் குதூகலம்
தேடலில் முடிவு
என்றும் இனியவை

---ரஞ்சி கதிர்---
ranji24.kathir@gmail.com

# 'மலையக இலக்கியச் செம்மல் தெளிவத்தை ஜோசப்'

மலையக மக்களின் வாழ்வியலை இலக்கியமாக்கி ஈழத்தமிழ் இலக்கியத்தில் தலை நிமிர்ந்து நிற்பவர் தெளிவத்தை ஜோசப். படைப்பாளியும் விமர்சகருமான திரு.மு. நித்தியானந்தன் தெளிவத்தை ஜோசப்பின் 'நாமிருக்கும் நாடே' என்னும் சிறுகதைத் தொகுதிக்கு வழங்கிய முன்னுரையில், 'தாங்களே பாதையும் வெட்டிப் பயணமும் போக வேண்டிய மலையக இலக்கியச் சூழலைக் கவனத்தில் கொண்டால் தெளிவத்தை ஜோசப் ஒரு சாதனையாளர் என்பதில் சந்தேகமில்லை' என்று குறிப்பிடுகின்றார். இவரது கூற்றுக்கு அமைவாகப் பாதை வெட்டி இலக்கியப் பயணம் போன மலையகப் படைப்பாளிகளுள் தெளிவத்தை ஜோசப் முதன்மையாளராக வெற்றிக்கம்பத்தைத் தொட்டு நிற்கின்றார். இவரது இலக்கியப்படைப்புக்கள் தனித்து 'மலையக இலக்கியம்' என்ற பிரதேச எல்லையைத் தாண்டி ஈழத்து இலக்கியத்திற்கு வளமும் செழுமையும் சேர்க்கின்றன.

இக்காரணங்களால், இலக்கியஞானி எஸ். பொன்னுத்துரை அவர்கள் 'ஈழத்து இலக்கியத்திற்கு மலையக எழுத்துக்கள் புது இரத்தம் பாச்சும் வல்லமை கொண்டவை' என எதிர்வு கூறுகின்றார். இதேபோன்று தெளிவத்தை ஜோசப் என்ற படைப்பாளி மலையகத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. அவர் இலங்கை இலக்கியத்திற்குச் சொந்தமானவர். இவரது படைப்புக்கள் இலங்கை இலக்கியத்திற்குச் சொந்தமானவை. அவர் ஆரோக்கியமான இலங்கை எழுத்தாளர். இலங்கையின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவர் எனச் செங்கையாழியான் குறிப்பிடுகின்றார். தெளிவத்தை ஜோசப் 16.02.1934 இல் பதுளை மாவட்டம் ஊவாகட்டவளை தோட்டம் ஹாலி-எல வில் சந்தனசாமிப்பிள்ளைக்கும் பரிபூரணம் என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பகல்வியினை ஊவா கட்டவளை தோட்டப் பாடசாலையில் ஆசிரியராக இருந்து தமது தந்தையாரிடமும், பின்னர் தமிழ்நாடு கும்பகோணத்திலும் 'Little Flower High School' இலும் பின்னர் இலங்கை திரும்பி, பதுளை St. Bede's College இல் கற்று 1956 முதல் 1964 வரை தெளிவத்தை தோட்டப் பாடசாலை ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

**- எஸ் சந்திரபோஸ் -**

இக்காலத்தில் தான் இவர் எழுத்துத்துறையில் பிரவேசம் எற்பட்டது. இவரது முதல் சிறுகதையான 'வாழைப்பழத்தோல்' சென்னையிலிருந்து வெளிவந்த 'உமா' சஞ்சிகையில் வெளிவந்தது. இலங்கையில் வீரகேசரிப் பத்திரிகையின் தோட்டமஞ்சரி பக்கத்திலும் இவரது ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கின. கொழும்பு கே.வி.எஸ் மோகனின் 'கதம்பம்' சஞ்சிகையிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. மலையகத்தில் வெளிவந்த 'மலைமுரசு' சஞ்சிகையிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தபோது 1963 ஆம் ஆண்டு 'மலைமுரசு' சிறுகதைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றுக்கொண்டார். அத்துடன் அதே ஆண்டில் வீரகேசரி நடத்திய மலையகச் சிறுகதைப் போட்டியில் இவரது சிறந்த சிறுகதைகளில் ஒன்றான 'பாட்டி சொன்ன கதை' முதல் பரிசினைப் பெற்றது. இந்தச் சிறுகதைபற்றி கலாநிதி துரை மனோகரன் பின்வருமாறு கூறுகின்றார். 'இலங்கைச் சிறுகதைத் துறையில் தமது



சுவடுகளை ஆழமாகப் பதித்தவர்களில் ஒருவராகத் தெளிவத்தை விளங்குகின்றார். அவரது பல்வேறு சிறந்த சிறுகதைப் படைப்புகளுள் ஒன்று 'பாட்டி சொன்ன கதை'. இக்கதையில் ஒரு பாட்டியும் அவளது பேத்தியுமே முக்கிய கதாபாத்திரங்கள். பக்கத்து வீட்டுப் பரமசிவத்தின் பிள்ளைகளுக்குக் கதை சொல்லும் சாக்கில், தன் பேத்திக்குக் கதை சொல்கிறாள். தனது மகளுக்கு நேர்ந்த கதி, தன்னுடைய பேத்திக்கும் நிகழ்ந்து விடக் கூடாது என்ற ஆதங்கமே பாட்டி கதை சொல்வதற்குக் காரணம். மகளை அநியாயமாக இழந்துவிட்ட தான், பேத்தியையும் இழந்து விடக் கூடாது என்ற அக்கறையும், அவசரமும் பாட்டி கதை கூறிச் செல்கின்றது.

1965 இல் வீரகேசரி நடத்திய சிறுகதைப் போட்டியிலும் 'பழம் விழுந்தது' என்ற இவரது சிறுகதை முதல் பரிசினைப் பெற்றுக் கொண்டதன் மூலம் நாடறிந்த ஒரு எழுத்தாளரானார். பழம் விழுந்தது என்ற கதை பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட வாழ்க்கையில் 'இல்லாமை' என்னும் நிலைமை எப்படி உறவுகளை வஞ்சிக்க முற்படுகின்றன என்பதனை, 'இரண்டு நாளாவது கிழவியின் உயிரை நிறுத்திவைத்து' அவளது ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுவிட ஓடித்திரிந்த வீரன், கிழப்பழம் விழுந்து விட செய்வது அறியாது நிற்கின்றான்' எனக் கதை முடிகின்றது.

1979 இல் சாகித்திய மண்டலம் பரிசினைப் பெற்ற சிறுகதைத் தொகுதியான 'நாமிருக்கும் நாடே' என்ற நூலில் இடம் பெறும் சிறுகதைகள் வெறும் கற்பனைக்கதைகளாக அல்லாமல் மலையக மக்களின் வாழ்க்கை கோர்வையாகக் காணப்படுகின்றது. இத்தொகுதியில் வரும் 'தீட்டுரொட்டி' மலையக சமூகத்தில் சாதிய அமைப்பின் கட்டுக்கோப்பு பெருமளவு சிதைந்து போனநிலையிலும், சாதி உணர்வும், சாதித்தீட்டும் இன்றும் ஆதிக்கம் செலுத்துவதைத் தெளிவாகக் காட்டுகின்றது. 'மண்ணைத் தின்று' என்னும் சிறுகதை 1970 களில் ஏற்பட்ட பட்டினி யுகத்தில், வருமானம் குறைந்த, நிலமற்ற பெரும் தோட்டத் தொழிலாளிகள் 'சேமண்தண்டையும்', பாதை ஓரங்களில் வளர்ந்த புல்லுக்கீரையையும் உணவாக உட்கொண்டு பட்டினிச் சாவை எதிர்நோக்கினர் என்பதனையும் நகரத்தை நோக்கி உணவுக்காக வந்த இளம் பெண்களை காமுகர்கள் காசுக்காக ஆசை காட்டியபோது 'நாயே! பசிதாங்காட்டி மண்ணைத் தின்னுட்டு செத்துப்போனாலும் போவேன்... இந்த நடத்தைக்கு வேறு ஆளைப்பாரு' என்று கதை கூறிச் செல்கின்றது.

அடுத்துக் 'கூனல்' என்ற கதை இஸ்டோரிலிருந்து இரவிரவாக தேயிலை மூட்டைகளை 'டீமேக்கர்' அலுவலக ஊழியர்கள் கடத்தும் நிலையில், குடித்துப் பார்க்க எடுத்த நாலு அவுன்சு பெனிங் தேயிலைக்காய் நாளெல்லாம் இஸ்டோரில்' நாயாய் பாடுபடும் தொழிலாளியை வேலையைவிட்டு நிறுத்தி விடுகின்ற முரண்பாட்டு அவலத்தை 'கூனல்' அநாயசமாகச் சித்தரிக்கின்றது. இக்கதைபற்றி விமர்சகர் மு.நித்தியானந்தன் குறிப்பிடும் இடத்தில் ஈழத்துச்சிறுகதைகளில் தரமான பத்துக்கதைகளைக் தேர்ந்தெடுத்தால் 'கூனல்' அதில் நிச்சயம் ஒன்றாகி இருக்கும் என்கிறார்.

அடுத்து 'மீன்கள்' என்ற சிறுகதை ஒரு அற்புத சித்தரிப்பு. காலமெல்லாம் 'லயம்' என்ற ஒற்றையறைக்குள் ஆறேழு பிள்ளைகளுடன் குடியிருக்கும் தோட்டத் தொழிலாளிகளின் அவலத்தை சொல்கிறது. 'இரவு பத்து மணிக்கு மேல் வேலையில் இருந்து சற்று குடிபோதையில் வரும் குடும்பத்தலைவன் தன் மனைவி வழமையாகப்படுத்திருக்கும் இடத்தில் அவளையே எதிர்பார்த்துச் சென்று தனது உடலைச் சாய்க்கின்றான். ஆசையின் நிமித்தம் அவளைத் துழாவிப் பார்க்குமிடத்து அவள் எழுப்பும் குரலிலின் மூலம் அவன் தன் மனைவியல்ல, மகள் என்பதனை அறிந்து, நடந்து விட்ட சம்பவத்தையொட்டி எழுந்த பதற்றத்துடனும் குற்ற உணர்வுடனும் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது அறையை விட்டு வெளியேறுகின்றான். இந்தநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க பெரிய கங்காணிக்கு சாராயப் போத்திலை வாங்கிக் கொடுத்தாவது காலியாகும் இன்னுமொரு காம்பிராவை பெற்றுக்கொள்ளத் துடியாய் துடித்தவன் இறுதியில் அது கூட நிறைவேறாது போனதைப் பார்த்து கரையில் பிடித்துப் போட்ட மீனாகத் துடிப்பதை கதை கூறிச் செல்கின்றது. அடுத்ததாக நாமிருக்கும் நாடே என்னும் சிறுகதை குரூரமான சுரண்டலுக்கும், அடக்கு முறைக்கும் ஆளாகி நிர்க்கதி அடையும் தோட்டத் தொழிலாளர்களுள் ஒருவனான வீரமுத்து கிழவனின் ஆசை நிராசையாகிப் போனதை சித்தரிக்கும் கதையாக அமைகின்றது. தன் உழைப்பின் மூலம் சிறுகச் சிறுகச் சேர்ந்த பணத்தில் இந்தியாவில் நிலம் வாங்கிய அவனால் அந்நிலத்தில் குடியேறி வாழ முடியாத 'நாடற்ற பிரஜை' ஆகின்ற அவலத்தைக் கூறுகின்றது. வந்தநாட்டிலும் வாழமுடியாமலும், சொந்த நாட்டிற்குச் செல்ல முடியாது தவிக்கும் தொழிலாளர் துன்பங்களைக் கூறுகின்றது.

1960 க்கு முன்னர் ஈழத்தின் அரச பதவிகளில் பெருமளவு யாழ்ப்பாணத்தவர் கள் அமர்ந்திருந்தனர். இது அவர்கள் பெற்ற கல்வியும், ஆங்கிலமொழி அறிவும் காரணமாக அமைந்தன. மலையகப் பிரதேசங்களிலும் ஆசிரியர்களாக, அரசாங்க உத்தியோகத்தர்களாக, பெரும் தோட்டங்களில் அலுவலக உத்தியோகதர் களாக, வர்த்தகர்களாகப் பணிபுரிந்தனர். இத்தகையோரில் பெரும்பான்மையான யாழ்ப்பாணத்தவர்களால் மலையக பாட்டாளி மக்களுக்குச் செய்யப்பட்ட பாரபட்சங்கள் தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் சித்தரிக்கப்பட்டன. இத்தகைய கதைகளுக்கு உதாரணமாக 'நாமிருக்கும் நாடே சிறுகதைத் தொகுதியில் சோதனை', 'பாவசங்கீர்த்தனம்' அமைகின்றன. இதனால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சில இலக்கியகாரர்களின் வெறுப்புக்கும் ஆளாகினார். தொடரும்....


**கனடாவில் கால் நூற்றாண்டு**

1986க்கு முன் கனடாவுக்கு வந்தவர்கள் தமது அனுபவங்களையும், தாம் எதிர்நோக்கிய இன்னல்களையும் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் ஒரு நூலாக வெளியிட எண்ணியுள்ளோம். கட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்படலாம். மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

***416.284.9158 / 416.888.8950 (Cell)***


PREMIUM
ROAST COFFEE
CAFÉ TORRÉFACTION
SUPÉRIEURE
Always made with a freshly cracked
Canada Grade A egg.
The one and only Egg McMuffin®. Try it with a premium roast coffee
for the perfect start to your day.
NOW SERVING BREAKFAST UNTIL 11:00am
EVERY DAY at the following locations:
Kingston Rd. & Lawrence Ave.
Markham Rd. and Progress Ave.
Markham Rd. and Finch Ave.
Malvern Town Centre
Port Union and Kingston Rd.
Walmart - Milner Ave.
Walmart - Steeles Ave.
i'm lovin' it®
©2010 McDonald's


BREAKFAST
BURRITO
$1.39
ONLY
each
plus tax
i'm lovin' it®

# திரை விமர்சனம் - உத்தம புத்திரன்

29ஆம் பக்கத்தொடர்ச்சி

தனுஷ், இயக்குநர் ஜவஹர் இருவரும் இணைந்த தெலுங்கு ரீ-மேக் படங்களான ‘குட்டி’, ‘யாரடி நீ மோகினி’ இரண்டும் வெற்றியடைய, ஆஹா நல்ல பாதையாக இருக்கிறதே என்று மீண்டும் ஒரு தெலுங்கு வெற்றிப்படத்தின் ரீ-மேக்குடன் வந்திருக்கிறார்கள், தனுஷும் ஜவஹரும். பெரிதாக அடிதடி, ஆக்ரோஷம், அதட்டல்கள் இல்லாத ஒரு படம்.

பாக்யராஜ் தலைமையில் உள்ள ஒரு பெரிய கூட்டு குடும்பத்து விடலைப் பையன், தனுஷ். தன் முறை பெண்ணான ஸ்ரேயாவை அவளுடைய காதலனுடன் சேர்த்து வைத்ததால் வீட்டைவிட்டு வெளியேற்றப்படுகிறார். அப்பொழுது இன்னொரு பிரச்சினை. தன் காதலிக்கு வேறு இடத்தில் திருமணம் செய்து வைக்கப் போகிறார்கள் என்று வருகிறார், ஒரு நண்பர். அவருக்கு உதவியாக, மணக்கோலத்தில் இருக்கும் அப்பெண்ணை கடத்துகிறார்கள். ஆனால், கடத்திய பிறகுதான் கல்யாண மண்டபம் மாறிவிட்டது தெரிகிறது. இதனால், மணப்பெண்ணும் மாறிவிட, செய்வதறியாது நிற்கும் நேரத்தில், மணப்பெண்ணாக இருக்கும் ஜெனிலியா, தனக்கு அந்த கல்யாணத்தில் இஷ்டமில்லை என்றும், புதுக்கோட்டையில் உள்ள தன் மாமா வீட்டிற்குப் போக தனக்கு உதவும்படியும் கேட்கிறார். அதுவரை ஜெனிலியாவை தன் வீட்டிலேயே தனுஷ் தங்க வைக்கிறார். இதனிடையே இருவருக்கும் காதல். இவர்களுக்கு திருமணம் செய்து வைக்கலாம் என்று குடும்பமே நினைக்கும் போது, ஜெனிலியா மீண்டும் கடத்தப்படுகிறார். காரணம், பெற்றோரை இழந்த ஜெனிலியாவின் சொத்தை அடைவதற்காக, அவரை தங்கள் மகனுக்கு கல்யாணம் முடிக்க அண்ணன் ஆஷிஸ் வித்யார்த்தியும் தம்பி ஜெயபிரகாஷும் போட்டி போடுகிறார்கள். இதனால் இரண்டு குடும்பத்துக்கும் ஒருத்தருக்கு ஒருத்தர் ஆகாது. இரு குடும்பத்துக்கும் பொதுவான கணக்கு தணிக்கையாளர் விவேக்.



ஜெனியை மீட்பதற்காக விவேக்கிடம் உதவியாளராக சேருகிறார் தனுஷ். ஜெனியால் முட்டிக்கொள்ளும் அவரின் இரண்டு மாமன் குடும்பத்தையும் சேர்த்து வைக்க, தன் குடும்பத்தாரை அங்கே வர வைத்து, ஒரு நாடகமாடி அவர்களை சேர்த்தும் வைக்கிறார். அதன்பின் ஜெனிலியாவை கல்யாணம் செய்ய முயற்சிக்கிறார்.

தனுஷ், ஜெனிலியா, ஜவஹர், விவேக், அம்பிகா, ரேகா, அஸ்வினி, நித்யா, உமா பத்மநாபன், பாக்யராஜ், ஆர்.சுந்தர்ராஜன், சுரேஷ்பாபு, ஆசீஸ் வித்யார்த்தி, ஆர்த்தி, மயில்சாமி, கருணாஸ் என இருபதுக்கும் மேற்பட்ட தமிழ் சினிமாவின் பிரபல நடிகர், நடிகைகள் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள்.

நடிப்புக்கு பெரிய வேலை இல்லையென்றாலும், தனுஷ் வழக்கம் போலவே அப்பாவி இளைஞராகவும் விடலைப் பையனாகவும் அசத்தியிருக்கிறார். ஆனால், இந்த மாதிரிப் படங்களை ‘ஜெயம்’ ரவிதான் செய்வார். தனுஷ், ஏன் மெனுக்கெடுகிறார். தெரியவில்லை. ஜெனிலியா பொம்மை மாதிரி வந்து போனாலும் தன் அழகால் வசீகரிக்கிறார்.

ஸ்ரேயா, ஹெஸ்ட் ரோல், காதலிச்சவரை மாமா தனுஷ் உதவியோடு குடும்பத்தாருக்கு தெரியாமல் ரகசிய பதிவு கல்யாணம் செய்துகொள்வதோடு காணாமல் போகிறார்.

விவேக், வழக்கமான விவேக் இல்லை. கொஞ்சம் வித்தியாசமாகச் செய்ய முயன்றிருக்கிறார். இடைவேளை வரையிலும் இறுக்கமாகச் செல்லும் படம், விவேக் வரவுக்குப் பிறகு கொஞ்சம் ஆசுவாசமாகச் செல்கிறது. கருணாஸ், ஆர்த்தி, சிறீநாத், மயில்சாமி என ஒரு நகைச்சுவைப் பட்டாளம் இருந்தும் யாரும் நினைவில் நிற்கவில்லை. கருணாஸை ஏன்தான் அந்தப் பாத்திரத்தில் நடிக்கவைத்தார்களோ? பொருந்தவே இல்லை, சிரிப்பும் வரவில்லை. பணக்கார வீடுகளில் வேலை செய்யும் அரவாணிகள் என்றால், எவ்வளவோ பேர் கிடைப்பார்கள்.

விஜய் அண்டனியின் இசையில் ஒரு பாடல் ரசிக்கும்படி இருக்கிறது. பாலசுப்ரமணியத்தின் ஒளிப்பதிவு பளிச்.

தெலுங்கு ரீ-மேக் என்பதால் இயக்குநருக்கு பெரிய வேலை இல்லை. ஆனால், திரைப்படமாக எடுத்ததற்குப் பதிலாக, ஒரு தொலைக்காட்சித் தொடராக எடுத்திருந்தால், நாலைந்து வருடங்களை ஓட்டியிருக்கலாம். அவ்வளவு பெரிய பெரிய குடும்பங்கள், ஏராளமான உறவுகள்.

உத்தமபுத்திரன் - நம் காசும் காலமும் பத்திரம்!

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

TRAFFIC TICKETS - MOTOR VEHICLE ACCIDENTS - CRIMINAL MATTERS summary
SKT PARALEGAL SERVICE
வாகன விபத்தா
MOTOR VEHICLE ACCIDENTS
416-803-5296
sktheesan@gmail.com
SKTHEESAN எஸ்.கே.தீசன் கலகலப்பு தீசன் KALAKALAPPU THEESAN

AVM MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. East, Unit 250
(GTA Square Mall)
Toronto, ON M1S 0C2
For More Information
Please Contact Us at:
(416) 609-2542
Fax: (416) 609-2551
E-mail: info@avmmax2000.ca
Website: www.avmmax2000.ca
- Tours/Charters
- Coach Buses (28-56 Passengers)
- School Buses (24-48 Passengers)
- Canada and U.S.A. Tours
- School Trips
- Sporting Events
- Niagara Falls Tours
- Area Attractions
- Churches/Temples
- Airport Shuttles
- Winery Tours
- Casinos and Bar Runs
- Shopping/Outlet Malls
- Etc...



